9 வர்த்தகம், சென்மதி நிலுவை மற்றும் சுற்றுலா

9.1 பொது நோக்கு

கிழக்காசிய நாணய நெருக்கடிகளைத் தொடர்ந்து ருசியாவிலும், பிறேசிலிலும் ஏற்பட்ட நெருக்கடிகளின் வெளிப்பாட்டுக்குப் பின்னர் உலகின் பல பாகங்களிலும் காணப்பட்ட மந்தமடைந்த பொருளாதாரச் சூழலின் பின்பு உலகளாவிய பொருளாதாரமானது, 2000ஆம் ஆண்டில் உறுதியான மீட்சியொன்றைக காட்டியது. ஐ.அ.நாடுகளின் உறுதியான பொருளாதாரம், யப்பானில் காணப்பட்ட ஓரளவு பொருளாதார மீட்சி, ஐரோப்பாவில் தொடர்ச்சியாகக் காணப்பட்ட வளர்ச்சி, நெருக்கடிகளால் பாதிக்கப்பட்ட நாடுகளில் ஏற்பட்ட விரைவான மீட்சி ஆகியன உலகளாவிய அடிப்படையில் பொருளாதாரத்தில் காணப்பட்ட மெதுவான போக்குத் தொடர்ச்சியாகக் காணப்படக்கூடிய ஆபத்தினை இல்லாமற் செய்தன. முதலீட்டாளர்களின் நம்பிக்கைத் தன்மை படிப்படியாகக் கட்டியெழுப்பப்பட்டமையானது, செலாவணி மற்றும் மூலதனச் சந்தைகளுக்கு ஓரளவு உறுதிப்பாட்டினைக் கொண்டுவரக்கூடியதாயிருந்தது. அதிகளவில் பாதிக்கப்பட்ட கிழக்காசிய நாடுகளில் காணப்பட்ட பொருளாதார மீட்சி, மற்றும் அதிகரித்த உலகளாவிய கேள்வி ஆகியன கடந்த இரு ஆண்டுகளில் மந்தமடைந்து காணப்பட்ட பண்டச் சந்தைகளின்மீது சாதகமான தாக்கமொன்றைக் கொண்டிருந்தன. இவ்வாறாக, உலக வர்த்தகத்தின் மீட்சி, இலங்கைக்கான வெளிச் சூழலை முன்னேற்றமடையச் செய்திருந்தது. எனினும், பன்னாட்டுப் பெற்றோலிய விலைகள் மற்றும் பாதுகாப்புடன் தொடர்புடைய அதியுயர் இறக்குமதிகள் ஆகியவற்றிலேற்பட்ட பெருமளவான அதிகரிப்புக்கள், இலங்கையின் சென்மதி நிலுவை மீது அதிகளவான அழுத்தத்தை ஏற்படுத்தியதுடன், செலாவணி வீதத்தின் மீது அழுத்தத்தை ஏற்படுத்தி வெளிநாட்டு ஒதுக்குகளில் பெருமளவான வீழ்ச்சியேற்படவும் வழிவகுத்தன. இந் நிலைமையைக் கட்டுப்படுத்துவதற்காக நாட்டின் செலாவணிவீத முகாமையில் பல மாற்றங்கள் மேற்கொள்ளப்பட்டன.

உலகளாவிய வர்த்தகத்தில் ஏற்பட்ட மீட்சியைத் தொடர்ந்து, இலங்கையின் வெளிநாட்டு வர்த்தகமானது ஏற்றுமதிகள் மற்றும் இறக்குமதிகள் 2000ஆம் ஆண்டில் விரைவாக வளர்ச்சியடைந்தமையின் காரணமாக குறிப்பிடத்தக்க உயர்ச்சியொன்றினைப் பதிவுசெய்திருந்தது. எனினும், பெற்றோலிய உற்பத்திகள் மற்றும் பாதுகாப்புத் தொடர்பான பொருட்களின் இறக்குமதி மீதான அதிகரித்த செலவுகளின் காரணமாக, வர்த்தகப் பற்றாக்குறை பெருமளவில் விரிவடைந்தது. பணிகள் கணக்கிலேற்பட்ட மிகை, சுற்றுலாத்துறையின் மெதுவான போக்குக் காரணமாக வீழ்ச்சியடைந்தது. வெளிநாட்டுப் படுகடன் மீதான ஆகக்கூடிய வட்டிக் கொடுப்பனவுகளினாலும், வெளிநாட்டு ஒதுக்குகள் மீதான வட்டி வருவாய்களிலேற்பட்ட வீழ்ச்சியினாலும் வருமானக் கணக்கின் பற்றாக்குறை மேலும் விரிவடைந்தது. எனினும், நாட்டைவிட்டு வெளியேறிய இலங்கையரிடமிருந்தான அதிகரித்த தனியார் மாற்றல்களிலிருந்து பெருமளவில் ஏற்பட்ட தேறிய நடைமுறை மாற்றல்களில் குறிப்பிடத்தக்க அதிகரிப்பொன்று காணப்பட்டது. இந்நிகழ்வுகளின் விளைவாக, நடைமுறைக் கணக்கில் காணப்பட்ட குறை, 1999இன் ஐ.அ.டொலர் 563 மில்லியனிலிருந்து (அல்லது மொத்த உள்நாட்டு உற்பத்தியின் 3.6 சதவீதம்) 2000ஆம் ஆண்டில் ஐ.அ.டொலர் 1,065 மில்லியனுக்கு (அல்லது மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 6.4 சதவீதம்) குறிப்பிடத்தக்களவில் விரிவடைந்தது. தனியார் குறுங்காலக் கடன்பாடுகளிலேற்பட்ட அதிகரிப்பு மற்றும் மூலதன மாற்றல்களில் ஏற்பட்ட வீழ்ச்சியை எதிரீடு செய்த அரசுக்கான தேறிய மூலதன உட்பாய்ச்சலிலேற்பட்ட அதிகரிப்பு ஆகியவற்றின் விளைவாக, தேறிய மூலதன மற்றும் நிதியியல் உட்பாய்ச்சல்கள் ஐ.அ.டொலர் 373 மில்லியனிலிருந்து ஐ.அ.டொலர் 565 மில்லியனுக்கு அதிகரித்தன. தேறிய மூலதனம் மற்றும் நிதியியல் உட்பாய்ச்சல்களிலேற்பட்ட அதிகரிப்பு, நடைமுறைக் கணக்குக் குறையிலேற்பட்ட பெருமளவான அதிகரிப்பை உள்ளடக்கப் போதுமானதாகக் காணப்படாமையால், சென்மதி நிலுவையிலான மொத்த நிலுவையானது, மோசமான நிலைமையினைப் பிரதிபலித்து, 1999இன் ஐ.அ.டொலர் 263 மில்லியன் கொண்ட குறை 2000ஆம் ஆண்டில் ஐ.அ.516 மில்லியனுக்கு மேலும் வீழ்ச்சியடைந்தது.

ஆசியாவிலும், ருசியாவிலும் ஏற்பட்ட நிதிநிலை நெருக்கடியின் காலம் தாழ்த்திய தாக்கத்தினால் பாதிக்கப்பட்டமையின் காரணமாக 1999இலேற்பட்ட குறிப்பிடத்தக்க மெதுவான போக்கின் பின்னர் 2000ஆம் ஆண்டில் இலங்கையின் வெளிநாட்டு வர்த்தகம் விரைவாக மீட்சியடைந்தது. ஏற்றுமதிகள், 1999இல் காணப்பட்ட 4 சதவீத வீழ்ச்சிக்கெதிராக 2000ஆம் ஆண்டில் 20 சதவீதத்தினால் வளர்ச்சியடைந்தன. இவ்வதிகரிப்பு முக்கியமாக ஏற்றுமதிகளின் அளவில் 18 சதவீதத்தாலேற்பட்ட அதிகரிப்பின் விளைவாகும். அதேவேளையில் இறக்குமதிகள் (வானூர்தி தவிர்ந்த) 24 சதவீதத்தால் அதிகரித்து அதிகரித்த அளவுகள் மற்றும் உயர்வான பன்னாட்டு பண்ட விலைகள் ஆகிய இரண்டினையும் பிரதிபலித்தது.[1] இதன்விளைவாக, வர்த்தகக்குறை, 31 சதவீதத்தினால் விரிவடைந்து

1. மீள் தொகுதிப்படுத்தல் நிகழ்ச்சித் திட்டத்தின் கீழான வானூர்தி இறக்குமதிகள் ஒப்பீட்டு ரீதியில் இறக்குமதிகளில் பாரிய விடயமாக இருந்ததுடன் இது நிரம்பலர் கொடுகடனின் மூலம் நிதியிடப்பட்டது. இதன் காரணமாக பகுப்பாய்வுகள் வானூர்திகளை நீக்கிவிட்டன.

அட்டவணை 9.1
சென்மதி நிலுவை பகுப்பாய்வு வெளிப்படுத்துகை
(வர்த்தக வங்கிகளின் வெ.நா.வ.தொ. பிரிவுகள் உள்நாட்டு வங்கித் தொழில் முறையின் பகுதியொன்றாக உள்ளடக்கப்பட்டுள்ளது)(அ)

விடயம்	ஐ.அ.டொலர் மில்லியன்					ரூபா மில்லியன்				
	1996	1997	1998	1999	2000(ஆ)	1996	1997	1998	1999	2000(ஆ)
வர்த்தக நிலுவை	-1,344	-1,225	-1,092	-1,369	-1,798	-74,276	-71,833	-69,742	-96,702	-134,176
ஏற்றுமதிகள்	4,095	4,639	4,798	4,610	5,522	226,801	274,194	310,401	325,170	420,114
இறக்குமதிகள்	5,439	5,864	5,889	5,979	7,320	301,077	346,026	380,142	421,873	554,290
பணிகள்: (தேறிய)	105	159	145	147	38	5,805	9,386	9,300	10,342	2,907
பெறுகைகள்	765	875	914	968	953	42,358	51,692	59,084	68,132	72,187
கொடுப்பனவுகள்	660	716	770	820	915	36,553	42,306	49,783	57,791	69,280
வருமானம் (தேறிய) (இ)	-197	-160	-180	-254	-304	-10,923	-9,417	-11,556	-17,831	-22,967
மீளப் பெறுகைகள்	186	234	214	167	152	10,258	13,792	13,882	11,810	11,568
கொடுப்பனவுகள்	383	393	394	421	456	21,182	23,210	25,437	29,640	34,535
பொருட்கள், பணிகள் வருமானம் (தேறிய)	-1,436	-1,225	-1,127	-1,476	-2,063	-79,395	-71,864	-71,997	-104,191	-154,235
தனியார் மாற்றல்கள் (தேறிய)	710	788	848	887	974	39,230	46,494	54,843	62,472	73,620
பெறுகைகள் (ஈ)	832	922	999	1,056	1,160	46,003	54,445	64,585	74,356	87,697
கொடுப்பனவுகள்	122	135	151	169	186	6,773	7,951	9,742	11,884	14,078
அலுவல்சார் மாற்றல்கள் (தேறிய)	49	44	52	26	25	2,709	2,625	3,359	1,816	1,855
நடைமுறைக் கணக்கு	-677	-393	-226	-563	-1,065	-37,456	-22,745	-13,795	-39,903	-78,760
மூலதன நிதியியல் கணக்குகள்	459	602	413	373	568	25,725	30,691	26,570	30,473	41,296
மூலதனக் கணக்கு	96	87	80	80	51	5,286	5,140	5,109	5,650	3,895
மூலதன மாற்றல்கள் (தேறிய)	96	87	80	80	51	5,286	5,140	5,109	5,650	3,895
பெறுகைகள்	100	91	84	86	57	5,495	5,386	5,410	6,018	4,331
கொடுப்பனவுகள்	4	4	5	5	6	209	246	301	368	435
நிதியியல் கணக்குகள்	363	515	334	293	516	20,439	25,550	21,461	24,823	37,400
நீண்டகாலம்	381	716	398	435	428	20,962	37,029	25,906	30,985	31,962
நேரடி முதலீடுகள்	120	430	193	177	176	6,606	25,504	12,379	12,449	13,326
வெளிநாட்டு நேரடிமுதலீடு(தேறிய)	86	129	137	177	173	4,756	7,587	8,846	12,449	13,125
தனியார் மயமாக்கல் பெறுகைகள்	33	301	56	-	3	1,850	17,918	3,533	-	200
தனியார் நீண்டகால (தேறிய)(இ)	2	47	2	196	82	88	3,054	352	14,086	5,587
உட்பாய்ச்சல் (உ)	156	150	146	361	298	8,628	8,741	9,686	25,727	22,134
வெளிப்பாய்ச்சல்	155	102	145	165	217	8,539	5,687	9,334	11,641	16,546
அரச நீண்டகால (தேறிய) (ஊ)	259	239	203	62	171	14,268	8,471	13,175	4,451	13,049
உட்பாய்ச்சல்	497	500	493	381	479	27,442	24,761	31,896	26,896	36,361
வெளிப்பாய்ச்சல்	238	262	290	319	308	13,174	16,291	18,721	22,445	23,312
குறுங்கால	-18	-201	-64	-142	88	-523	-11,479	-4,445	-6,162	5,438
பட்டியலிடப்பட்டமுதலீடுகள்(தேறிய)	7	13	-24	-13	-45	353	749	-1,521	-886	-3,355
தனியார் குறுங்கால (தேறிய) (இ)	-44	-20	8	-10	100	-2,426	-1,195	414	-667	7,569
வர்த்தக வங்கிச் சொத்துக்கள் (தேறிய)	59	-323	180	-19	-141	1,127	-23,384	5,035	1,766	-18,736
வர்த்தக வங்கிப் பொறுப்புக்கள்(தேறிய) (இ)	-40	129	-228	-101	174	423	12,352	-8,374	-6,375	19,960
அரச குறுங்கால (தேறிய) (இ)	-	-	-	-	-	-	-	-	-	-
சிஎஉ ஒதுக்கீடுகள்	-	-	-	-	-	-	-	-	-	-
பெறுமதி சீராக்கம்	-	-	-	-	-	4,213	-562	8,559	2,103	5,189
பிழைகளும் தவறுகளும்	150	-46	-151	-73	-19	7,527	8,461	-7,534	-6,857	900
மொத்த நிலுவை(எ)	-68	163	37	-263	-516	9	15,845	13,800	-14,184	-31,382
நாணய அசைவுகள்(எ)	68	-163	-37	263	516	-9	-15,845	-13,800	14,184	31,382
செலாவணி வீதங்கள் ரூபா/ ஐ.அ.டொ.										
மொத்த உள்நாட்டு உற்பத்திக்கான										
விகிதம் சதவீதத்தில்						55:27	58.99	64.59	70.39	75.78
வர்த்தகக் கணக்கு						-9.7	-8.1	-6.9	-8.7	-10.7
நடைமுறைக் கணக்கு						-4.9	-2.6	-1.4	-3.6	-6.3
கொடைகளற்ற நடைமுறைக்கணக்கு						-5.2	-2.8	-1.7	-3.8	-6.4

மூலம்: இலங்கை மத்திய வங்கி.

(அ) இவ்விபரம் பன்னாட்டு நாணய நிதியத்தின் சென்மதி நிலுவைக் கையேட்டின் 5ஆம் பதிப்புடன் சாத்தியமான அளவுக்கு இணங்கிச் செல்லும் விதத்தில் தயாரிக்கப்பட்டுள்ளது. மேலும் 1994இலிருந்து வெளிநாட்டு நாணய வங்கித் தொழில் பிரிவுகள் உள்நாட்டு வங்கித்தொழில் முறையின் பகுதியொன்றாக கருதப்பட்டுள்ளன.

(ஆ) தற்காலிகமானவை.

(இ) 1994இலிருந்து சென்மதி நிலுவைப் புள்ளிவிபரங்களை திரட்டும்போது வெளிநாட்டு நாணய வங்கித்தொழில் பிரிவுகள் உள்நாட்டு வங்கித்தொழில் முறையின் பகுதியொன்றாக கருதப்படுகின்றது. சென்மதி நிலுவைப் புள்ளி விபரங்களைத் திரட்டும்போது வெ.நா.வ.பிரிவுகளும் இலங்கையில் வதிவற்றோரும் சம்பந்தப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் கணக்கில் சேர்க்கப்படும் வேளையில் வெ.நா.வ.தொ.பிரிவுகளும் இலங்கையில் வதிவுள்ளோரும் சம்பந்தப்பட்ட கொடுக்கல் வாங்கள்களில் தவிர்க்கப்படுகின்றன.

(ஈ) 1990இல் வளைகுடா யுத்தத்தின் காரணமாக குவைத்தில் வேலைவாய்ப்பை இழந்த இலங்கையருக்கு 1997,1998,1999,2000 ஆகிய ஆண்டுகளில் முறையே 26,101, 31,279, 37,343 இலங்கையர்களால் பெற்றுக்கொள்ளப்பட்ட ஐ.அ.டொலர் 64 மில்லியன், ஐ.அ.டொலர் 78 மில்லியன், ஐ.அ.டொலர் 85 மில்லியன் இழப்பீட்டை உள்ளடக்குகின்றது. மேலும் 1999இல் 18,244 இலங்கையர்களால் இரண்டாம் சுற்றுக் கொடுப்பனவுகளாக ஆளொருவருக்கு ஐ.அ.டொலர் 1,500 அடிப்படையில் ஐ.அ.டொலர் 27 மில்லியன் பெற்றுக் கொள்ளப்பட்டது.

(உ) முன்னைய ஆண்டுகளில் முற்பணம் செலுத்தப்பட்டிருந்து இறக்குமதி செய்யப்பட்ட வானூர்திகளுக்கான மூலதன உட்பாய்ச்சலுக்கு 1999இலும், 1999இலும் செய்யப்பட்ட சீராக்கங்களையும் உள்ளடக்குகின்றது.

(ஊ) மேலதிக தகவல்களை உள்ளடக்குவதற்காக 1994இன் பின்னரான தரவுகள் திருத்தியமைக்கப்பட்டுள்ளன.

(எ) நாணயத் துறையிலான எல்லாக் கொடுக்கல் வாங்கல்களும் ஆண்டிறுதிச் செலாவணி வீதங்களில் மாற்றப்பட்டுள்ளன.

வரைபடம் 9.1
சென்மதி நிலுவை (அ) (ஆ)



(அ) பகுப்பாய்வு, வடிவமைப்பு, சென்மதி நிலுவை கைநூல் 4இலிருந்து சென்மதி நிலுவை கைநூல் 5இற்கு மாற்றமடைந்தமையின் காரணமாக வர்த்தக வங்கிகளின் சொத்துக்களிலும பொறுப்புக்களிலும் ஏற்பட்ட மாற்றங்கள் குறுங்கால மூலதனமாகக் கருதப்படுகின்றது.

(ஆ) 1994ஆம் ஆண்டின் தொடக்கத்திலிருந்து வெளிநாட்டு நாணய வங்கித் தொழில் பிரிவுகள் உள்நாட்டு வங்கித் தொழில் முறையின் ஒரு பகுதியாகக் கருதப்படுகின்றது.

அட்டவணை 9.2
வெளிநாட்டு வர்த்தகத்தின் செயலாற்றம்

ஆண்டு	வளர்ச்சி வீதம்(அ)		விலைச் சுட்டெண் (1997=100)		வர்த்தக மாற்று விகிதம் (ஆ)	மொ. உ. உற்பத்தியின் சதவிகிதமாக	
	ஏற்று மதிகள்	இறக்கு மதிகள்	ஏற்று மதிகள்	இறக்கு மதிகள்		ஏற்று மதிகள்	இறக்கு மதிகள்
1998 (இ)	3.4	0.4	114.9	101.3	113.4	30.5	37.4
1999 (இ)(ஈ)	-3.9	1.5	114.6	106.4	107.7	29.2	37.9
2000 (ஈ)(உ)	19.8	22.4	125.2	123.8	101.1	33.1	43.9

மூலங்கள்: இலங்கைச் சுங்கம்.
இலங்கை மத்திய வங்கி.

(அ) வளர்ச்சி வீதங்கள் ஐ.அ.டொலர் நியதிகளில் தரப்பட்டுள்ளது.
(ஆ) (ஏற்றுமதிச் விலைச்சுட்டெண்/இறக்குமதி விலைச் சுட்டெண்) X 100.
(இ) திருத்தியமைக்கப்பட்டது.
(ஈ) 1999இலும் 2000இலுமான இறக்குமதிச் சுட்டெண் வானூர்களின் இறக்குமதிகளைத் தவிர்த்து கணிக்கப்பட்டது.
(உ) தற்காலிகமானவை.

வரைபடம் 9.2
வெளிநாட்டு வர்த்தகம்

வரைபடம் 9.2.1
வர்த்தக நிலுவை



வரைபடம் 9.2.2
ஏற்றுமதி இறக்குமதி அளவுச் சுட்டெண்கள்



வரைபடம் 9.2.3
அலகுப் பெறுமதிச் சுட்டெண்
(1997=100)



வரைபடம் 9.2.4
பணிகளிலுள்ள வர்த்தகம் (அ)



(அ) பகுப்பாய்வு, வடிவமைப்பு, சென்மதி நிலுவை கைநூல் 4இலிருந்து சென்மதி நிலுவை கைநூல் 5இற்கு மாற்றமடைந்தமையின் காரணமாக தற்பொழுது நடைமுறைக் கணக்கில் தனி விடயமாகக் காணப்படும் வருமானம் பணிகளிலிருந்து நீக்கப்பட்டுள்ளது.

ஐ.அ.டொலர் 1,798 மில்லியனாக விளங்கியது. மொத்த உள்நாட்டு உற்பத்தியின் சதவீதமாக பற்றாக்குறை 1999இன் 8.7 சதவீதத்திலிருந்து, 2000ஆம் ஆண்டில் 10.8 சதவீதத்திற்கு அதிகரித்து 1995இலிருந்து ஏற்பட்ட அதிகரிப்புக்களில் ஆகக்கூடியதாகக் காணப்படுகிறது.

பணிகள் கணக்கிலான மிகை குறிப்பிடத்தக்களவில் வீழ்ச்சியடைந்தமைக்கு பயணம் மற்றும் போக்குவரத்துப் பணிகளிலிருந்தான வரவுகளில் ஏற்பட்ட வீழ்ச்சிகளே காரணமாகும். பயணத்தி லிருந்தான தேறிய வரவுகள் ஐ.அ.டொலர் 55 மில்லியனிலிருந்து ஐ.அ.டொலர் 8 மில்லியனிற்கு வீழ்ச்சியடைந்தமை இவ்வாண்டில் சுற்றுலா வருவாய்களில் 8 சத வீதத்தாலேற்பட்ட வீழ்ச்சியை முக்கியமாகப் பிரதிபலிப்பதாயமைந்தது. துறைமுகத்தோடு தொடர்புடைய பணிகள் இவ்வாண்டில் தொடர்ந்தும் அண்மை நாடுகளிலிருந்தான போட்டியினால் இடரை அனுபவித்தன. அதேவேளையில், வருமானக் கணக்கிலான குறை ஐ.அ.டொலர் 254 மில்லியனிலிருந்து 304 மில்லியனிற்கு விரிவடைந்தது. இது, வெளிநாட்டு முதலீடுகள் மீதான வட்டி வருமானத்தில் ஏற்பட்ட 10 சதவீத வீழ்ச்சி மற்றும், வெளிநாட்டுப் படுகடன் மீதான வட்டிக் கொடுப்பனவுகளிலேற்பட்ட 12 சதவீத அதிகரிப்பு ஆகியவற்றிலிருந்து ஏற்பட்ட அதிகரித்த தேறிய வட்டிக் கொடுப்பனவுகளின் விளைவாகும்.

மொத்த தனியார் மாற்றல் வரவுகள் 10 சதவீதத்தால் அதிகரித்து ஐ.அ.டொலர் 1,160 மில்லியனாக விளங்கின. இது, வளைகுடா யுத்தத்தில் பாதிக்கப்பட்ட தொழிலாளர்களுக்கென இவ்வாண்டில் பெறப்பட்ட ஐ.அ.டொலர் 45 மில்லியன்கொண்ட நட்டஈட்டுக் கொடுப்பனவுகளினால் ஊக்குவிக்கப் பட்டிருந்தது. இதன்விளைவாக, தேறிய தனியார் மாற்றல்கள் ஐ.அ.டொலர் 887 மில்லியனிலிருந்து ஐ.அ.டொலர் 974 மில்லியனுக்கு அதிகரித்தன. தேறிய நடைமுறை அலுவல்சார் மாற்றல்கள், 2000ஆம் ஆண்டில் ஐ.அ.டொலர் 26 மில்லியனிலிருந்து 25 மில்லியனுக்கு சிறிதளவில் வீழ்ச்சியடைந்தது. வர்த்தகம், பணிகள், வருமானம் மற்றும் மாற்றல் கணக்குகளில் ஏற்பட்ட இந் நிகழ்வுகளினால், நடைமுறைக் கணக்குக் குறையானது 1999இன் ஐ.அ.டொலர் 563 மில்லியனிலிருந்து 2000ஆம் ஆண்டில் ஐ.அ.டொலர் 1,065 மில்லியனுக்கு விரிவடைந்தது.

மிகையானது 1999இன் ஐ.அ.டொலர் 373 மில்லியனிலிருந்து ஐ.அ.டொலர் 568 மில்லியனுக்கு அதிகரித்தமையினால் மூலதன மற்றும் நிதியியல் கணக்குகள் குறிப்பிடத்தக்க அதிகரிப்பொன்றைப் பதிவுசெய்திருந்தன. இவ்வதிகரிப்பு அரசுக்கான நீண்டகால மூலதனப் பாய்ச்சல்களிலும், தனியார் துறைக்கான குறுங்கால நிதியியல் பாய்ச்சல்களிலும் ஏற்பட்ட அதிகரிப்புக்களினாலேயே முக்கியமாக ஏற்பட்டதாகும். தேறிய மூலதன மாற்றல்கள், இவ்வாண்டில் கொடைகளிலேற்பட்ட வீழ்ச்சியின் விளைவாக ஐ.அ.டொலர் 80 மில்லியனிலிருந்து 51 மில்லியனுக்கு வீழ்ச்சியடைந்தது. அதேவேளையில், நிதியியல் கணக்கிலான மிகை 1999இன் ஐ.அ.டொலர் 293 மில்லியனிலிருந்து 2000ஆம் ஆண்டில் ஐ.அ.டொலர் 516 மில்லியனுக்கு அதிகரித்தமைக்கு அரசின் நீண்டகால முதலீட்டு உட்பாய்ச்சல்கள் மற்றும் தனியார் குறுங்கால உட்பாய்ச்சல்களில் ஏற்பட்ட அதிகரிப்புக்களே காரணமாகும். தேறிய வெளிநாட்டு நேரடி முதலீட்டு உட்பாய்ச்சல்கள் ஐ.அ.டொலர் 177 மில்லியனிலிருந்து ஐ.அ.டொலர் 173 மில்லியனுக்கு சிறிதளவால் வீழ்ச்சியடைந்து வெளிநாட்டு நேரடி முதலீட்டு உட்பாய்ச்சல்கள் 13 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தமையையும் இலங்கையில் வதிவுள்ளோரது நேரடி வெளிநாட்டு முதலீடுகளிலிருந்து எழும் மூலதன வெளிப்பாய்ச்சல்கள் கணிசமாக வீழ்ச்சியடைந் தமையையும் பிரதிபலித்தன. முன்னைய ஆண்டினைப்போன்றே நிச்சயமற்ற சூழ்நிலை 2000ஆம் ஆண்டிலும் இலங்கையின் தனியார் மயமாக்கல் நிகழ்ச்சித் திட்டத்தினை பாதிப்பிற்குள்ளாக்கியது. தேறிய தனியார் நீண்டகால மூலதன உட்பாய்ச்சல்கள் ஐ.அ.டொலர் 196 மில்லியனிலிருந்து 82 மில்லியனுக்கு வீழ்ச்சியடைந்து, மூலதன உட்பாய்ச்சல்களிலேற்பட்ட வீழ்ச்சியையும் இவ்வாண்டில் படுகடன் மீளக் கொடுப்பனவுகள் சிறப்பாக சிறிலங்கன் எயார் லைன்சினால் மேற்கொள்ளப்பட்ட கொடுப்பனவுகளால் அதிகரித்ததையும் பிரதிபலித்தன. அரசுக்கான தேறிய நீண்டகால மூலதனப் பாய்ச்சல்கள் 1999இன் ஐ.அ.டொலர் 62 மில்லியனிலிருந்து ஐ.அ.டொலர் 171 மில்லியனுக்கு அதிகரித்தமைக்கு நீண்டகால வழங்குநர் கொடுகடனிலேற்பட்ட அதிகரிப்பு மற்றும் இவ்வாண்டில் மேற்கொள்ளப்பட்ட கடன் மீளக் கொடுப்பனவுகளில் ஏற்பட்ட வீழ்ச்சி ஆகியனவே காரணமாகும். இவ்வாண்டில் நடைபெற்ற தேர்தல்களினால் செயற்றிட்டத்தை நடைமுறைப் படுத்துவதிலேற்பட்ட தற்காலிக இடையூறுகள், உதவியைப் பயன்படுத்துவதிலேற்பட்ட தாமதங்கள், உதவி வழங்கும் நாடுகளிலிருந்து கிடைக்கக்கூடிய தாயிருந்த மூலவளத்தில் தொடர்ச்சியாகக் காணப்பட்ட பொதுவான வீழ்ச்சி ஆகியன அரசுக்கான மூலதனப் பாய்ச்சல்களைப் பாதித்தன. இவ்வாண்டில் மேற்கொள்ளப்பட்ட கடன் மீளக் கொடுப்பனவுகள் 1997இல் வெளியிடப்பட்ட ஐ.அ.டொலர் 50 மில்லியன் கொண்ட மிதக்கும் வீத நாணயத்தாள்களின் எஞ்சிய ஐ.அ.டொலர் 16 மில்லியன் கொண்ட தொகையின் மீளக் கொடுப்பனவை உள்ளடக்கியுள்ளன. மாறாக, தேறிய குறுங்கால மூலதனப் பாய்ச்சல்கள் ஐ.அ.டொலர் 142 மில்லியன்கொண்ட வெளிப்பாய்ச்சல்களிலிருந்து ஐ.அ.டொலர் 88 மில்லியன்கொண்ட மாறுதலொன்றைப்

பிரதிபலித்தன. இது, வர்த்தக வங்கிகளின் அதிகரித்த வெளிநாட்டுப் பொறுப்புக்கள், அதிகரித்த தனியார் குறுங்கால வர்த்தகக் கொடுகடன் மற்றும் சொத்துப்பட்டியல் முதலீடுகளின் அதிகரித்த வெளிப்பாய்ச்சல் ஆகியவற்றின் தேறிய விளைவாகக் காணப்பட்டது.

நாட்டின் வெளிநாட்டுப் படுகடன் இருப்பு 2.5 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்து ஐ.அ.டொலர் 8,859 மில்லியனாக விளங்கியமைக்கு சலுகைப் படுகடனிலான ஐ.அ.டொலர் 246 மில்லியன் கொண்ட (4 சதவீதம்) வீழ்ச்சி, அரசின் சலுகையற்ற படுகடனிலான ஐ.அ.டொலர் 61 மில்லியன் கொண்ட (32 சதவீதம்) வீழ்ச்சி மற்றும் தனியார் துறையின் சலுகையற்ற படுகடனிலான ஐ.அ.டொலர் 76 மில்லியன் (6 சதவீதம்) கொண்ட வீழ்ச்சி ஆகியனவே முக்கிய காரணமாகும். படுகடன் இருப்பில் இவ்வாண்டில் ஏற்பட்ட வீழ்ச்சிக்கு முக்கியமான பன்னாட்டு நாணயங்களுக்கிடையிலான குறுக்குவீத மாற்றங்களே முக்கிய காரணமாகும். மொத்தப் படுகடன் இருப்பின் முக்கிய பங்கு (77 சதவீதம்) சலுகைப் படுகடனை உள்ளடக்கியிருந்த வேளையில் சலுகையற்ற படுகடன் எஞ்சிய 23 சதவீதத்திற்கு வகைகூறியது. வெளிநாட்டுப் படுகடன்/ மொத்த உள்நாட்டு உற்பத்தி விகிதம் 1999இன் 57.8 சதவீதத்திலிருந்து 2000ஆம் ஆண்டில் 53.5 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்த வேளையில், வெளிநாட்டுப் படுகடன் பணிவிகிதம் 12.4 சதவீதத்திலிருந்து 12.2 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தது.

பன்னாட்டு செலாவணிச் சந்தைகள் இவ்வாண்டில் தொடர்ந்தும் உறுதியாகக் காணப்பட்டன. எனினும், பணவீக்க வீதமானது சார்பு ரீதியில் குறைவாகக் காணப்பட்டபோதிலும் மோசமடைந்து செல்லும் சென்மதி நிலுவை, இலங்கை ரூபாவின்மீது தொடர்ச்சியான அழுத்தத்தைக் கொண்டிருந்தது. ஐ.அ.டொலருக்கான மத்திய வங்கியின் கொள்வனவு மற்றும் விற்பனவு வீதங்களின் சராசரியிலேற்பட்ட மாற்றங்களினால் அளவிடப்பட்டவாறு ரூபா 2000ஆம் ஆண்டில் ரூ.9.9 சதவீதத்தினால் பெறுமதி தேய்வடைந்தது. இதனோடு தொடர்பான தேய்வு, வங்கிகளுக்கிடையிலான சராசரிச் செலாவணி வீதத்தில் 12.6 சதவீதமாகக் காணப்பட்டது. இலங்கை ரூபாவின் உண்மையான பயன்தரு செலாவணி வீதமானது 24 நாணயங்களின் கூடைக்கெதிராக 2000ஆம் ஆண்டில் 0.6 சதவீதங்கொண்ட சிறிதளவான உயர்ச்சியைக் காட்டி, நாட்டின் வெளிநாட்டுப் போட்டித் தன்மையைப் பேணியது.

நாட்டின் மொத்த வெளிநாட்டுச் சொத்துக்கள் 18 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்து 2000ஆம் ஆண்டின இறுதியில் ஐ.அ.டொலர் 2,126 மில்லியனாக விளங்கியதுடன் 2000ஆம் ஆண்டுக்கான 3.5 மாத இறக்குமதிகளை நிதியிடப் போதுமானதாயுமிருந்தன. அதவேளையில், மொத்த அலுவலர்சார் ஒதுக்குகள் 36 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்து ஐ.அ.டொலர் 1,043 மில்லியனாக விளங்கியதுடன் 2000ஆம் ஆண்டுக்கான 1.7 மாத இறக்குமதிகளை நிதியிடப் போதியதாகவும் காணப்பட்டன.

9.2 ஏற்றுமதிகள்

வெளிநாட்டு மற்றும் உள்நாட்டு சாதகமான நிகழ்வுகளினால் நன்மையடைந்த இலங்கையின் ஏற்றுமதிகள் 2000ஆம் ஆண்டு முழுவதிலும் கணிசமாக வளர்ச்சியடைந்தன. 2000ஆம் ஆண்டில் ஐ.அ.டொலர் 5,522 மில்லியனாக விளங்கிய இலங்கையின் ஏற்றுமதி வருவாய்கள் 1999இன் 4 சதவீத வீழ்ச்சியுடன் ஒப்பிடுகையில் 20 சதவீத வளர்ச்சியைப் பதிவு செய்தன. இந்த வளர்ச்சியானது ஆடைகளும் புடவைகளும், தேயிலை, பொறிகருவிகள், இயந்திர மற்றும் மின்சார உபகரணங்கள், இறப்பரை அடிப்படையாகக் கொண்ட உற்பத்திப் பொருட்கள், மீன் உற்பத்திப் பொருட்கள், இரத்தினக்கற்கள், வைரங்கள் மற்றும் ஆபரண ஏற்றுமதிகளின் தொடர்ச்சியான விரிவாக்கத்தினால் உருவாக்கப்பட்டதாகும். பண்ட விலைகளின் மிதமான மீட்சி மற்றும் மேம்பட்ட உலகக் கேள்வி என்பனவே ஏற்றுமதிகளின் அதிகரிப்புக்குக் காரணம் எனக் கூறப்படுகின்றது. ஏற்றுமதி விலைச் சுட்டெண் 2 சதவீதத்தினால் அதிகரித்த வேளையில் அளவுச் சுட்டெண் 18 சதவீதத்தினால் அதிகரித்து ஏற்றுமதி வருவாய்களின் அதிகரிப்பின் பெரும் பங்கொன்றிற்கு வகைகூறியது. பாதகமான பன்னாட்டு விலைகளைப் பிரதிபலிக்கும் வகையில் வர்த்தக மாற்றுவீதம் தொடர்ச்சியாக இரண்டாவது ஆண்டிலும் மோசமடைந்தது.

உலகப் பொருளாதாரத்தின் ஆரோக்கியமான வளர்ச்சியின் காரணமாக குறிப்பாக ஐக்கிய அமெரிக்க நாடுகள் மற்றும் ஐரோப்பிய ஒன்றியம் என்பனவற்றின் உறுதியான வளர்ச்சியின் காரணமாக 1999ஆம் ஆண்டின் இறுதிக் காலாண்டில் ஏற்றுமதி வர்த்தகம் மீட்சிபெற்றது. புடவைகள் மற்றும் ஆடைகள் என்பனவற்றிற்கு இந்த நாடுகளிலிருந்து மேம்பட்ட கேள்வி காணப்பட்டது. யப்பானிய பொருளாதாரம் மீட்சி பெற்றமையானது இலங்கை உற்பத்திகளுக்கு குறிப்பாக இரத்தினக்கற்கள் ஆபரணங்கள் மற்றும் வைரங்களுக்கான சந்தையை வலுப்படுத்தியது. மாற்றமடைந்துவரும் பொருளாதாரங்களினதும் மத்திய கிழக்கு நாடுகளினதும் மீட்சியானது தேயிலைக்கான கேள்வியை அதிகரிக்கச் செய்து விலைகளின் மேம்பாட்டுக்கு உதவியது. கிழக்காசிய பொருளாதாரங்களின் விரைந்த மீட்சியும் அதனைத் தொடர்ந்து அவற்றின் நாணயங்களின் பெறுமதியேற்றமும் ஆடைகள் மற்றும் இறப்பரை அடிப்படையாகக் கொண்ட உற்பத்திப் பொருட்கள்

போன்ற இலங்கையின் ஏற்றுமதி விடயங்களுக்கான இலங்கையின் போட்டித்தன்மையினை அதிகரிக்கச் செய்தன.

ஏற்றுமதி அமைப்புமுறை

1977இன் பொருளாதார தாராளமயமாக்கலைத் தொடர்ந்து 1980களின் ஆரம்ப காலப்பகுதியிலிருந்து ஏற்றுமதிகள் அதிகளவு முக்கியத்துவத்தினைப் பெற்றதோடு இதன் விளைவாக, மொத்த ஏற்றுமதிகளில் பெருந்தோட் வேளாண்மைப் பயிர்களின் பங்கு 1977இன் 74 சதவீதத்திலிருந்து 2000ஆம் ஆண்டில் 15 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்துள்ளது. ஏற்றுமதிகளின் விரிவாக்கத்திற்கு கைத்தொழில் ஏற்றுமதிகள் பாரிய பங்களிப்பினை வழங்கியதோடு அவற்றினது பங்கு 1977இன் 14 சதவீதத்திலிருந்து படிப்படியாக அதிகரித்து 2000ஆம் ஆண்டில் 78 சதவீதமாகக் காணப்பட்டது. இந்த விகிதம் கடந்த 8 ஆண்டுகளிலும் கிட்டத்தட்ட 75 சதவீதத்தில் காணப்பட்டது. 1986இல் இலங்கையின் பாரிய தனிப்பெரும் ஏற்றுமதி விடயமாக விளங்கிய புடவையும் ஆடைகளும் அதனது நிலையை தொடர்ந்து பேணியதோடு அதனது பங்கு 1977இன் 2 சதவீதத்திலிருந்து 1986இல் 28 சதவீதத்திற்கும் 2000ஆம் ஆண்டில் மேலும் 54 சதவீதத்திற்கும் அதிகரித்தது. புடவைகள் மற்றும் ஆடைகள் துறையிலிருந்தான வருவாய்கள் உயர்வாகக் காணப்பட்டபோதிலும் 1991ஆம் ஆண்டு வரையிலும் தேயிலையே நாட்டுக்கு பெருமளவிலான தேறிய வெளிநாட்டு நாணயச் சம்பாத்தியத்தினைக் கொண்டுவந்தது. எனினும் 1992இல் புடவையும் ஆடைகளும் இந்த முதன்மை நிலைக்குக் கொண்டுவரப்பட்டதோடு அதன் பின்னர் தொடர்ந்து பெருமளவில் தேறிய வெளிநாட்டு நாணய சம்பாத்தியத்தைக் கொண்டுவந்தன.

2000ஆம் ஆண்டில் புடவைகள் மற்றும் ஆடைகளினால் வழிநடத்தப்பட்ட கைத்தொழில் ஏற்றுமதிகளின் பங்கு முன்னைய ஆண்டின் 77 சதவீதத்திலிருந்து 78 சதவீதத்திற்கு அதிகரித்தது. கைத்தொழில் ஏற்றுமதிகளானது, புடவைகளும் ஆடைகளும் (70 சதவீதம்), பொறிகளும் கருவிகளும் (6 சதவீதம்), இறப்பர் உற்பத்திப் பொருட்கள் (5 சதவீதம்), வைரங்களும் ஆபரணங்களும் (4 சதவீதம்), தோற்பொருட்கள் (4 சதவீதம்), இறால் மற்றும் ஏனைய

அட்டவணை 9.3
ஏற்றுமதிகளின் அமைப்பு

வகை	ஐ.அ.டொலர் மில்லியன்					ரூபா மில்லியன்				
	1996	1997	1998	1999(அ)	2000(ஆ)	1996	1997	1998	1999(அ)	2000(ஆ)
1. வேளாண்மை ஏற்றுமதிகள்	961	1,060	1,088	947	1,005	53,206	62,667	70,225	66,751	76,271
தேயிலை	615	719	780	621	700	34,067	42,533	50,280	43,728	53,133
இறப்பர்	104	79	44	33	29	5,753	4,640	2,808	2,305	2,179
தெங்கு	110	118	94	129	121	6,091	6,939	6,110	9,119	9,174
உள்ளீட்டு உற்பத்திகள்	81	82	56	84	77	4,469	4,864	3,632	5,973	5,786
ஏனையவை	29	35	38	45	45	1,622	2,075	2,478	3,146	3,388
சிறு வேளாண்மை உற்பத்திகள்	132	145	170	165	155	7,295	8,555	11,027	11,598	11,784
2. கைத்தொழில் ஏற்றுமதிகள் (இ)	3,006	3,436	3,607	3,551	4,283	166,543	203,114	233,508	250,516	325,931
உணவு, குடிபானம், புகையிலை	95	91	118	86	152	5,272	5,354	7,586	6,093	11,573
புடவைகளும் ஆடைகளும்	1,902	2,274	2,460	2,425	2,982	105,341	134,455	159,303	171,068	226,930
பெற்றோலிய உற்பத்திகள்	104	97	73	74	98	5,740	5,743	4,662	5,210	7,414
இறப்பர் உற்பத்திகள்	169	178	178	161	196	9,357	10,513	11,528	11,350	14,924
மட்பாண்ட உற்பத்திகள்	48	55	54	49	47	2,677	3,246	3,478	3,442	3,558
தோலும் காலணியும்	139	183	214	201	176	7,690	10,812	13,855	14,140	13,391
பொறிகளும் கருவிகளும்	154	204	182	201	244	8,572	12,076	11,811	14,155	18,594
வைரங்களும் ஆபரணங்களும்(ஈ)	192	142	131	171	192	10,643	8,384	8,491	12,064	14,546
ஏனைய கைத்தொழில் ஏற்றுமதிகள்	202	212	197	184	197	11,251	12,531	12,794	12,995	15,002
3. கனிப்பொருள் ஏற்றுமதிகள்	96	90	60	64	97	5,292	5,271	3,863	4,540	7,352
இரத்தினக் கற்கள்,	86	84	56	61	93	4,771	4,899	3,577	4,326	7,091
ஏனைய கனிப்பொருள் ஏற்றுமதிகள்	10	6	4	3	4	521	372	286	214	262
4. பாகுபடுத்தப்படாதவை (இ) (உ)	32	53	43	48	137	1,760	3,141	2,802	3,363	10,560
மொத்த ஏற்றுமதிகள் (இ)	4,095	4,639	4,798	4,610	5,522	226,801	274,193	310,398	325,171	420,114

(அ) தற்காலிகமானவை.
(ஆ) திருத்தியமைக்கப்பட்டது.
(இ) சீராக்கப்பட்டது.
(ஈ) சுங்கத்தினால் 1999இலும் 2000இலும் பதிவு செய்யப்பட்ட வைரங்களின் ஏற்றுமதிகள், தேசிய இரத்தினக்கல் ஆபரண அதிகாரசபையிடமிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட தரவுகளால் சீராக்கஞ் செய்யப்பட்டது.
(உ) மீன் ஏற்றுமதிகள் உட்பட.

மூலங்கள்: இலங்கைச் சுங்கம்.
இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனம்.
தேசிய இரத்தினக்கல் ஆபரண அதிகாரசபை
இலங்கை மத்திய வங்கி.

மீன் உற்பத்திப் பொருட்கள் (3 சதவீதம்), பெற்றோலியப் பொருட்கள் (2 சதவீதம்), மட்பாண்ட உற்பத்திப் பொருட்கள் (1 சதவீதம்), ஏனைய கைத்தொழில் ஏற்றுமதிகள் (5 சதவீதம்) என்பனவற்றை உள்ளடக்கியிருந்தது. எனினும் வேளாண்மை ஏற்றுமதிகளின் பங்கு 1999இன் 21 சதவீதத்திலிருந்து 2000ஆம் ஆண்டில் 18 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தது. இறப்பர், தெங்கு மற்றும் சிறு வேளாண்மை உற்பத்திப் பொருட்கள் என்பனவற்றின் தாழ்ந்த பங்களிப்பே இதற்கான காரணமாகும். கனிப்பொருள் ஏற்றுமதிகளின் பங்கு 1 சதவீதத்திலிருந்து 2 சதவீதத்திற்கு அதிகரித்த வேளையில் ஏனைய ஏற்றுமதிகள் 1999இன் 1 சதவீதத்திற்கு எதிராக 2 சதவீதத்திற்கு வகைகூறின. விமானங்களின் பாகங்கள் மற்றும் புடவை விடயங்களின் மீள் ஏற்றுமதியினை ஏனைய ஏற்றுமதிகள் உள்ளடக்குகின்றன.

கடந்த தசாப்தத்தில் ஏற்றுமதி உள்ளடக்கத்தினை மேலும் பன்முகப்படுத்தியதன் மூலம் பொருளாதாரத்தின் ஆற்றலை வலுப்படுத்தும் வகையில் பல துறைகள் கணிசமான மேம்பாட்டினைக் காட்டின. அவையாவன இறப்பரை அடிப்படையாகக் கொண்ட கைத்தொழில்கள், மின் உபகரணங்களையும் உள்ளடக்கிய உதிரிப்பாகங்கள், காலணிகள் மற்றும் பயண உபகரணங்கள், வைரம், ஆபரணம், பெற்றோலிய உற்பத்திப்பொருட்கள், தகரத்தில் அடைக்கப்பட்ட உணவு, பழவர்க்கங்களும் மீன் உற்பத்திப் பொருட்களும், மட்பாண்டங்கள், கைப்பணிப் பொருட்கள், இரசாயன உற்பத்திப் பொருட்கள் மற்றும் சிறு வேளாண்மை உற்பத்திப் பொருட்கள் என்பனவாகும். முக்கியமாக இரத்தினக்கற்களை முதன்மையாகக் கொண்ட கனிப்பொருள் ஏற்றுமதிகளும் 1977இன் பின் மேம்பாடடைந்தன. இவ்வனைத்து உற்பத்திப் பொருட்களும் கூட்டாக 1977இன் 22 சதவீதத்திலிருந்து 2000ஆம் ஆண்டில் 28 சதவீதத்திற்கு அதிகரித்து பெருந்தோட்டத்துறை உற்பத்திப் பொருட்களின் சார்புரீதியான நிலையினை விஞ்சின.

கைத்தொழில் ஏற்றுமதிகள்

1999இன் 2 சதவீத வீழ்ச்சியுடன் ஒப்பிடுகையில் 2000ஆம் ஆண்டில் கைத்தொழில் ஏற்றுமதிகளிலிருந்தான வருவாய்கள் 21 சதவீதத்தினால் அதிகரித்தன. முக்கிய பங்களிப்பாளரான புடவைகள் மற்றும் ஆடைகள் ஏற்றுமதிகள் 1999இன் 1 சதவீத வீழ்ச்சிக்கு எதிராக 23 சதவீதத்தினால் அதிகரித்தன. 1999இன் முதல் எட்டு மாதங்களில் பாதிப்புக்கு உட்பட்ட புடவைகள் மற்றும் ஆடைகள்துறை விலைகளின் மேம்பாடு மற்றும் தொகையில் ஏற்பட்ட வளர்ச்சி என்பனவற்றின் காரணமாக 1999 செத்தெம்பரிலிருந்து மீட்சிபெறத் தொடங்கின. புடவை மற்றும் ஆடைகளின் ஏற்றுமதி அளவு 17 சதவீதத்தினால் அதிகரித்த வேளையில் விலைகள் 5 சதவீதத்தினால் அதிகரித்தன. கோடை காலத்தினதும், பனிக்காலத்தினதும் தொடக்கத்துக்கு முன்பதாக ஐக்கிய அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய நாடுகளுக்கான ஏற்றுமதிகள் உயர்வாகக் காணப்பட்டன. புடவைகள் மற்றும் ஆடைகள் துணைத்துறைகளுக்கிடையே ஆடைகளின் ஏற்றுமதி 23 சதவீதத்தினால் அதிகரித்த வேளையில் புடவைகள் 20 சதவீதத்தினால் அதிகரித்தன. திரித்த நூல், ஏனைய தயாரிக்கப்பட்ட விடயங்களின் ஏற்றுமதிகள் முறையே 12 சதவீதத்தினாலும், 20 சதவீதத்தினாலும் அதிகரித்தன. இறக்குமதி செய்யப்பட்ட மூலப் பொருட்களின் அதிகரித்த விலைகளின் மத்தியிலும் புடவைகள் ஆடைகள் ஏற்றுமதிகளின் உள்நாட்டு கூட்டிய பெறுமதியின் மேம்பாடானது தேறிய வெளிநாட்டுச் செலாவணி வருவாயினை 37 சதவீதத்தினால் ஐ.அ.டொலர் 1,511 மில்லியனுக்கு அதிகரிக்கச் செய்தது.

முன்னைய ஆண்டினைப் போலவே ஆடைகள் ஏற்றுமதிகளில் 90 சதவீதத்திற்கும் மேலானவை முதலீட்டுச்சபைக் கம்பனிகளினாலேயே மேற்கொள்ளப்பட்டன. 1999 இன் 1 சதவீத வீழ்ச்சியுடன் ஒப்பிடுகையில் 2000ஆம் ஆண்டில் முதலீட்டுச்சபைத் தொழில் முயற்சிகளின் ஏற்றுமதி வருவாய்கள் 24 சதவீதத்தினால் அதிகரித்தன. 1999இன் 7 சதவீத வீழ்ச்சியுடன் ஒப்பிடுகையில் முதலீட்டுச்சபையல்லா தொழில் முயற்சிகளின் ஏற்றுமதிகள் 17 சதவீதத்தினால் அதிகரித்தன. ஐக்கிய அமெரிக்காவும் (62 சதவீதம்), ஐக்கிய இராச்சியத்தினால் (22 சதவீதம்), வழிப்படுத்தப்படும் ஐரோப்பிய ஒன்றியமும் (33 சதவீதம்) தொடர்ந்தும் புடவைகள் மற்றும் ஆடைகள் ஏற்றுமதிக்கான முதலாவதும் இரண்டாவதுமான பாரிய சந்தைகளாக விளங்கின.

1999இன் 10 சதவீத அதிகரிப்புக்கு எதிராக பொறிகள், இயந்திர மற்றும் மின்சார உபகரணங்களின் ஏற்றுமதிகள் 21 சதவீதத்தினால் அதிகரித்தன. 2000ஆம் ஆண்டின் பாரிய ஏற்றுமதி விடயங்களாக தரவுச் செய்முறைக் கருவிகளின் பாகங்கள், பொருத்தப்பட்ட மின்வலி நெறிகள், மின் கடத்திகள், பொறி உபகரணங்கள், திருகாணிகள், செருகாணிகள் என்பன விளங்கின. இந்த வகையானது மொத்தக் கைத்தொழில் ஏற்றுமதிகளில் 6 சதவீதத்திற்கு வகைகூறியது.

ஐ.அ.டொலர் 196 மில்லியனாக விளங்கிய இறப்பரை அடிப்படையாகக் கொண்ட உற்பத்திப் பொருட்களின் வருவாய்கள் 2000ஆம் ஆண்டில் 22 சதவீத அதிகரிப்பை எடுத்துக்காட்டின. மீள புதுப்பிக்கப்பட்ட ரயர்களின் ஏற்றுமதிகள் 23 சதவீதத்தினால் அதிகரித்த வேளையில் திண்ம மற்றும் மென் ரயர்களின் ஏற்றுமதிகள் 35 சதவீதத்தினால் அதிகரித்தன. உலகளாவிய பொருளாதார மீட்சி மற்றும் ஐரோப்பிய நாடுகளிலிருந்தான அதிகரித்த கேள்வி

வரைபடம் 9.3
முக்கிய வகைகளின்படி ஏற்றுமதிகளின் பெறுமதிகள்



வரைபடம் 9.4
முக்கிய வகைகளின்படி கைத்தொழிலில் ஏற்றுமதிகளின் பெறுமதிகள்



என்பனவற்றின் காரணமாக இந்த மீட்சியானது 1999 செத்தெம்பரிலிருந்து தொடர்ந்தது. நுகர்வோரின் விருப்புத் தேர்வுகளை எதிர்கொள்வதற்காக பிரதான உற்பத்தியாளர்களினால் புதிய தொழில் நுட்பங்கள் பின்பற்றப்பட்டமையைத் தொடர்ந்து பரிசோதனைக் கையுறைகளின் ஏற்றுமதிகள் 1999 செத்தெம்பரின் பின் மீட்சியைக் காட்டின. கைத்தொழில் கையுறைகளின் ஏற்றுமதிகள் மேம்பாடொன்றைக் காட்டிய வேளையில் தாழ்ந்த கேள்வியின் காரணமாக அறுவைச் சிகிச்சைக் கையுறைகளின் ஏற்றுமதிகள் 20 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தன. கையுறைகளின் அந்த வகைகள் 2000ஆம் ஆண்டில் இறப்பரை அடிப்படையாகக் கொண்ட மொத்த உற்பத்திப் பொருட்களின் 31 சதவீதத்திற்கு வகைகூறின. தரை விரிப்புக்கள் மற்றும் பாய்கள், தட்டுக்கள், தட்டைகள் போன்ற ஏனைய இறப்பரை அடிப்படையாகக் கொண்ட உற்பத்திப் பொருட்கள் 2000ஆம ஆண்டு முழுவதிலும் சிறப்பான செயலாற்றத்தைக் கொண்டிருந்தன. 1999இல் சந்தைக்கு வந்த பொறிகளின் உதிரிப்பாகங்கள் மற்றும் தரை ஓடுகள் போன்ற சில புதிய உற்பத்திப் பொருட்கள் 2000ஆம் ஆண்டிலும் தொடர்ந்ததோடு மொத்த கைத்தொழில் ஏற்றுமதிகளின் 5 சதவீதத்திற்குப் பங்களிப்புச் செய்தன.

2000ஆம் ஆண்டில் உணவு, குடிபானம் மற்றும் புகையிலைத்துறையின் வருவாய்கள் 76 சதவீதத்தினால் அதிகரித்தன. இத்துணைத் துறையின் 84 சதவீதத்திற்கு அல்லது 2000ஆம் ஆண்டின் மொத்தக் கைத்தொழில் ஏற்றுமதிகளின் 3 சதவீதத்திற்குப் பங்களிப்புச் செய்த இப்பி, இறால், நண்டுவகை மற்றம் ஏனைய மீன் உற்பத்திப் பொருட்களின் அதி கூடிய மேம்பாடே இதற்கான காரணமாகும். 2000ஆம் ஆண்டில் இறால் ஏற்றுமதிகளிலிருந்தான வருவாய்கள் 80 சதவீதத்தினால் அதிகரித்தன. மஞ்சள் தலை மற்றும் வெள்ளைப் புள்ளி போன்ற நோய்கள் தற்பொழுது கட்டுப்படுத்தப் பட்டுள்ளதுடன் 2000ஆம் ஆண்டு சனவரியிலிருந்து நிலைமை மீண்டும் வழமைக்குத் திரும்பியுள்ளது. பண்ணைகளின் 80 சதவீதமும் ஏற்றுமதிக்காக இறால் பதனிடும் ஒன்பது தொழிற்சாலைகளும் இப்பொழுது தொழிற்படுகின்றன. 62 எக்டேயர்களைக் கொண்ட அங்கீகாரமற்ற 14 இறால் பண்ணைகளுக்கு அரசாங்கம் அங்கீகாரம் வழங்கியுள்ளதோடு இது செயற்படும் பண்ணைகளின் எண்ணிக்கையை 955 இற்கு அதிகரித்துள்ளது. இந்தப் பண்ணைகளின் மொத்தப் பரப்பு 3,752 எக்டேயர்களாகும். தேசிய நீரியல் மூலவள ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி முகவராண்மை தேசிய நீரியல் பண்ணை அபிவிருத்தி அதிகாரசபை வடமேல் மாகாண கடற்றொழில் அமைச்சின் நீரியியல் பண்ணை பணிகள் நிலையம் என்பனவற்றினால் நடாத்தப்பட்ட விரிவான விழிப்புணர்வு நிகழ்ச்சித் திட்டங்களின் மூலமாக பண்ணையாளர்கள் நோய்கள் பரவுவதை தடுப்பதற்கும் கட்டுப்படுத்துவதற்கும் அறிந்து கொண்டுள்ளனர். எனவே இறால்களின் தரமும் மேம்பாடடைந்துள்ளதோடு புதிய சந்தைகளையும் கவர்ந்துள்ளன. கடற்றொழில் மற்றும் நீரியல் மூலவள

அபிவிருத்தி அமைச்சு எதிர்காலத்தில் நோய்கள் பரவுவதைத் தடுப்பதற்கு பண்ணைகளில் அதிகூடிய கண்காணிப்பை மேற்கொண்டு வருகின்றது.

1999 பெப்புருவரியிலிருந்து மீன் ஏற்றுமதிகள் கணிசமான மேம்பாட்டைக் காட்டிவருவதோடு 2000ஆம் ஆண்டில் 135 சதவீத அதிகரிப்பைக் குறித்துக் காட்டியுள்ளது. ஐரோப்பிய சந்தையின் தேவைகளுக்கு இசைந்து செல்லும் வகையில் மீன் உற்பத்திப் பொருட்களின் தரத்தினை மேம்படுத்துவதற்கு சுவீடிஸ் பன்னாட்டு அபிவிருத்தி ஒத்துழைப்பு முகவராண்மையின் தொடர்ச்சியான உதவிகளின் கீழ் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளே இதற்கான காரணமாகும். இக் கைத்தொழிலின் நிலைத்து நிற்கும் தன்மைக்கான நீண்டகால உபாயமொன்றாக தனியார் முயற்சியாளர்களுக்கு வழங்கப்பட்டுள்ள அறிவுறுத்தல்களுக்கு மேலதிகமாக தரத்தினை பேணுவதற்காக மீன் பிடிக்கப்படும் தறுவாயிலே மீன்களைப் பாதுகாப்பதற்கான பயிற்சி மீனவர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. இப்பி, இறால், நண்டுவகை மற்றும் ஏனைய மீன் உற்பத்திப் பொருட்களுக்கான முக்கிய சந்தைகளாக யப்பான், ஐக்கிய அமெரிக்க நாடுகள், சிங்கப்பூர், கொங்கொங், ஐக்கிய இராச்சியம் மற்றும் கிழக்காசிய நாடுகள் என்பன விளங்குகின்றன. இந்த நாடுகளின் பொருளாதார மீட்சியானது இக் கைத்தொழிலின் மேம்பாட்டுக்கு பெருமளவு பங்களிப்புச் செய்துள்ளன.

ஏனைய உணவு விடயங்களில் தேங்காய்ப்பால்மா, தேங்காய்ப்பசை, தகரத்தில் அல்லது போத்தலில் அடைக்கப்பட்ட பழங்கள், மோல்டட் பால், இனிப்பு விசுக்கோத்துக்கள், மென்பானம் மற்றும் விலங்குத்தீன் என்பன 1999இனைவிட 2000ஆம் ஆண்டில் மேம்பாட்டினைக் காட்டியுள்ளன.

பயணப் பொருட்கள், காலணிகள், மற்றும் ஏனைய தோல் உற்பத்திப் பொருட்கள் என்பன வற்றிலிருந்தான ஏற்றுமதி வருவாய்கள் 12 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தன. எனினும் கைப்பைகள், வெளியே தோல் மற்றும் துணிகளைக் கொண்ட பயணப்பைகள் என்பன மேம்பாட்டினைக் காட்டின. பயணப் பொருட்களின் ஏற்றுமதிகள் வீழ்ச்சியடைந்தபோதிலும் 2000ஆம் ஆண்டின் இறுதியளவில் இக்கைத்தொழில் விரிவாக்கமொன்றினைக் காட்டியது. விசேட வகையிலான காலணிகளின் குறிப்பிடத்தக்க வீழ்ச்சியுடன் காலணிகளின் ஏற்றுமதிகளிலிருந்தான வருவாய்கள் 18 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தன. செருப்புக்கள் மற்றும் கன்வஸ் காலணிகள் என்பனவற்றிலிருந்தான வருவாய்கள் 2000ஆம் ஆண்டில் மேம்பாடடைந்தன. சிறிய அளவேயானாலும் ஏனைய தோல் உற்பத்திப் பொருட்களின் ஏற்றுமதிகள் 2000ஆம் ஆண்டில் மேம்பாடடைந்தன. மேசைப் பாத்திரங்களின் தாழ்ந்த ஏற்றுமதிகளின் காரணமாக மட்பாண்டப் பொருட்களின் வருவாய்கள் 4 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தன. 2000ஆம் ஆண்டில் சுவர் ஓடுகளின் ஏற்றுமதி 10 சதவீதத்தினால் அதிகரித்தது.

பெல்ஜியம், இஸ்ரேல், வியட்நாம், ஐக்கிய அமெரிக்க நாடுகள், யப்பான் ஆகிய நாடுகளுக்கான ஏற்றுமதிகளைப் பிரதிபலிக்கும் வகையில் 2000ஆம் ஆண்டில் வைரங்களின் ஏற்றுமதிகள் 12 சதவீதத்தினால் அதிகரித்தன. கிழக்காசிய நெருக்கடியினால் பின்னடைவினைக் கொண்ட ஆபரணங்கள் சந்தை 2000ஆம் ஆண்டில் 25 சதவீதத்தினால் அதிகரித்து உறுதியான மீட்சியொன்றினைப் பதிவு செய்தது. கைப்பணியாளர்களின் தேர்ச்சிகள், கைப்பணிக் கிராமங்களில் தயாரிக்கப்பட்ட ஆபரணங்களின் தரம், மற்றும் செயலமர்வுகள், கருத்தரங்குகள் மற்றும் கலந்துரையாடல்கள் என்பனவற்றின் ஊடாக ஆபரண வடிவமைப்பில் தேர்ச்சி என்பனவற்றை மேம்படுத்துவதற்காக ஏற்றுமதி அபிவிருத்திச்சபை நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது. புதிய மற்றும் ஏற்கெனவேயுள்ள ஏற்றுமதியாளர்களுக்கு பன்னாட்டுச் சந்தையில் நுழைவதற்கு உதவிகள் வழங்கப்பட்ட வேளையில் சில ஏற்றுமதியாளர்களுக்கு உள்நாட்டு மற்றும் பன்னாட்டு வர்த்தக நிகழ்ச்சிகளிலும் கண்காட்சிகளிலும் பங்கேற்பதற்கு சந்தர்ப்பங்கள் வழங்கப்பட்டுள்ளன. ஐக்கிய அமெரிக்க நாடுகள் தொடர்ந்தும் ஆபரணங்களின் முதன்மைக் கொள்வனவாளராக விளங்கிய வேளையில் அதனைத் தொடர்ந்து சேர்மன், யப்பான், சுவிட்சலாந்து மற்றும் ஐக்கிய இராச்சியம் எனபன விளங்கின.

2000ஆம் ஆண்டின் முதலரைப் பகுதியில் கணிசமான, வளர்ச்சியின் காரணமாக பெற்றோலிய உற்பத்திப் பொருட்களின் ஏற்றுமதிப் பெறுமதி 1999இன் 1.5 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 2000இல் 33 சதவீதத்தினால் அதிகரித்தது. அதிஉயர் விலைகள் (67 சதவீதம்) மற்றும் தொகை (10 சதவீதம்) என்பனவற்றின் கூட்டு விளைவைப் பிரதிபலித்து பெற்றோலிய உற்பத்திப் பொருட்களின் ஏற்றுமதிகளின் பெறுமானம் 2000 முதலரையாண்டில் 83 சதவீதத்தினால் அதிகரித்தது. 2000ஆம் ஆண்டு முழுவதிலும் நிலவிய அதிஉயர் பன்னாட்டு விலைகளின் மத்தியிலும் 2000ஆம் ஆண்டின் பின்னரைப் பகுதியில் பெற்றோலிய ஏற்றுமதிகளின் அளவு 31 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தது. கப்பல் எரிபொருளிலேயே இக்குறைப்பு பெருமளவு பிரதிபலிக்கப்பட்டது. மின் உருவாக்கம் கைத்தொழில் நடவடிக்கைகளில் இத்தகைய உற்பத்திப் பொருட்களின் உள்நாட்டு உற்பத்தியை உள்நாட்டிலேயே பயன்படுத்த வேண்டிய தேவை ஏற்பட்டமையே இதற்கான காரணமாகும். இதன் விளைவாக 2000ஆம் ஆண்டின்

பின்னரைப் பகுதியில் பெற்றோலிய உற்பத்திப் பொருட்களின் ஏற்றுமதிகள் தாழ்ந்த வீதமொன்றான 5 சதவீதத்தினாலேயே அதிகரித்தன.

இரசாயன உற்பதிப் பொருட்கள், மரத்தினால் செய்யப்பட்ட சிறுவர் விளையாட்டுப் பொருட்கள், செம்பு, பொன்படிவம், விளக்குமார்கள், தூரிகைககள் மற்றும் கம்பி இசைக் கருவிகள் போன்ற ஏனைய தயாரிப்பு ஏற்றுமதிகள் நலமான வளர்ச்சியைக் காட்டியமைக்கு மேற்கு நாடுகளிலிருந்தான அதிகரித்த கேள்வியே காரணமாகும்.

பெருந்தோட்டப் பயிர்கள்

2000ஆம் ஆண்டில் பெருந்தோட்டப் பயிர்களிலிருந்தான வருவாய்கள் 9 சதவீதத்தினால் அதிகரித்தன. அதிகரித்த தேயிலை ஏற்றுமதிகளே இதற்கான காரணமாகும். 2000ஆம் ஆண்டில் ஏனைய முக்கிய பயிர்கள் இரண்டான இறப்பர் மற்றும் தெங்கு என்பனவற்றின் ஏற்றுமதிகள் வீழ்ச்சியடைந்தன. இந்தியா மற்றும் கென்யா போன்ற முக்கிய தேயிலை உற்பத்தி நாடுகளின் உற்பத்தி வீழ்ச்சி மற்றும் சுதந்திர நாடுகளின் பொதுநலவாயம் மற்றும் மத்தியகிழக்கு நாடுகளின் அதிகரித்த கேள்வி என்பனவற்றின் கூட்டு விளைவாக 1999 திசெம்பரிலிருந்து தேயிலை விலைகள் தொடர்ந்து மேம்பாடடைந்தன. ஆண்டின் முதல் நான்கு மாதங்களில் விலை அதிகரிப்புக்கள் உயர்வாகக் காணப்பட்டதோடு உலக உற்பத்தி மேம்பாடடைந்ததைத் தொடர்ந்து விலை அதிகரிப்பு மெதுவடைந்தது. எனினும் அதிகரித்த கேள்வியினால் நன்மையடைந்து தேயிலையின் ஏற்றுமதி விலைகள் 1999இனைவிட 2000ஆம் ஆண்டு முழுவதிலும் உயர்வாகவே காணப்பட்டன. சராசரி விலை 1999இன் கிலோக்கிறாம் ஒன்றுக்கான ஐ.அ.டொலர் 2.30 இலிருந்து 2000ஆம் ஆண்டில் கிலோக்கிறாம் ஒன்று ஐ.அ.டொலர் 2.43 இற்கு அதிகரித்தது. 1999இனைவிட 8 சதவீதத்தினால் அதிகரித்து 305.8 மில்லியன் கிலோக்கிறாம்களாக விளங்கிய அதிஉயர் உற்பத்திக்கு இசைந்து செல்லும் வகையில் தேயிலை ஏற்றுமதிகளின் அளவு 7 சதவீதத்தினால் 288.2 மில்லியன் கிலோக்கிறாம்களுக்கு அதிகரித்தது.

இலங்கையின் தேயிலை ஏற்றுமதிகளில் 63 சதவீதமானவை தொகை வடிவில் காணப்பட்ட வேளையில் 30 சதவீதமானவை பொதிகளில் அடைக்கப்பட்டனவாகக் காணப்பட்டன. எஞ்சியவை தேயிலை பக்கெட்டுக்கள் வெளிநாட்டுத் தேயிலையுடன் கலக்கப்பட்ட தேயிலை, உடனடி மற்றும் இலைத் தேயிலை ஆகிய உயர் பெறுமதி கூட்டப்பட்ட வடிவில் காணப்பட்டன. இலங்கையின் தேயிலையில் 99 சதவீதத்திற்கும் மேலானவை மரபுவழி தேயிலையாகக் காணப்பட்ட வேளையில் வெட்டி, கிழித்து சுருட்டப்பட்ட தேயிலை சிறிய அளவுகளிலேயே உற்பத்தி செய்யப்பட்டது. தேயிலையை கலவை செய்யும் நோக்கங்களுக்காக 3.6 மில்லியன் கிலோக்கிறாம் தேயிலை இறக்குமதி செய்யப்பட்டதோடு இது உள்நாட்டு உற்பத்தியின் 1 சதவீதமாகும். 2000ஆம் ஆண்டின் மிகப் பெரிய கொள்வனவாளராக ருசியா (16 சதவீதம்) மீண்டும் தோற்றம் பெற்றது. 1999இல் ருசியாவின் இடத்தைப் பெற்ற ஐக்கிய அரபு எமிறேட்ஸ் நாடுகள் இரண்டாவது பாரிய கொள்வனவாளராக (14 சதவீதம்) விளங்கிய வேளையில் 1999இல் துருக்கி கொண்டிருந்த மூன்றாவது இடத்தை சிரியா(7.4 சதவீதம்) பெற்றுக் கொண்டது. ஏனைய முக்கிய கொள்வனவாளராக துருக்கி (7 சதவீதம்) சவூதி அரேபியா, ஈரான் (ஒவ்வொன்றும் 4 சதவீதம்) ஆகியன விளங்கின. 2000ஆம் ஆண்டில் குழுவொன்றாக மத்திய கிழக்கு நாடுகள் மொத்தத் தேயிலை ஏற்றுமதியில் 46 சதவீதத்திற்கு வகைகூறி உச்சியில் காணப்பட்ட வேளையில் சுதந்திர நாடுகளின் பொதுநலவாயம் இரண்டாவது இடத்தையும் (20 சதவீதம்) ஐரோப்பிய ஒன்றியம் அடுத்த இடத்தையும் (9 சதவீதம்) பெற்றது.

2000ஆம் ஆண்டில் ஏற்றுமதித் தொகைகளின் வளர்ச்சியை எதிரீடு செய்த தாழ்ந்த விலைகளின் காரணமாக மூன்று முக்கிய தெங்கு உற்பத்திப் பொருட்களிலிருந்தான வருவாய்கள் 8 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தன. உலர்த்திய தேங்காய்த் துருவல், உலர்த்திய தேங்காய் மற்றும் தேங்காய் எண்ணெயின் ஏற்றுமதி அளவுகள் முறையே 31 சதவீதத்தினாலும், 30 சதவீதத்தினாலும் 28 சதவீதத்தினாலும் அதிகரித்தன. பன்னாட்டு விலைப் போக்குகளுக்கு இசைவாக, இந்த மூன்று உற்பத்திப் பொருட்களினதும் சராசரி விலைகள் 1999 நவெம்பரிலிருந்து வீழ்ச்சியடைந்து வந்துள்ளன. 1999இன் நான்காம் காலாண்டிலிருந்து பிலிப்பைன்சிலும் இந்தோனேசியாவிலும் தெங்கு உற்பத்தி மீட்சியடைந்தமையே இதற்கான காரணமாகும். 1999இன் இறுதிக் காலாண்டின் மழை வீழ்ச்சியினால் நன்மையடைந்து இலங்கையும் 2000 ஆம் ஆண்டில் 3,055 மில்லியன் காய்களைக் கொண்ட (8 சதவீத வளர்ச்சி) அறுவடையைப் பதிவு செய்தது. இதன் விளைவாக உள்நாட்டுச் சந்தையில் வழங்கல் விலை (சில்லறை விலை) 1999இனைவிட 15 சதவீதத்தினால் (ஐ.அ.டொலர் நியதிகளில் 21 சதவீதம்) வீழ்ச்சியடைந்தது. தேங்காயின் அதி உயர் விளைச்சலின் காரணமாக உலர்த்திய தேங்காய்த் துருவலினதும் தேங்காய் எண்ணெயினதும் உற்பத்தி அதிகரித்து விலைகளில் வீழ்ச்சியினை ஏற்படுத்தியது. நாட்டிற்குள் பதிலீட்டு மரக்கறி எண்ணெய் வகைகளின் அதிகூடிய இறக்குமதியும் உள்நாட்டு விலைகளில் தாக்கத்தினைக் கொண்டிருந்தன. தேங்காய் எண்ணெயின் மீதான அழுத்தத்தைக் குறைப்பதற்காக 2000ஆம் ஆண்டு யூலை

21இலிருந்து 2001 சனவரி 12வரை தற்போதைய 25 சதவீதத் தீர்வையின் மீது 25 சதவீத மிகை விதிப்பு ஒன்றையும் அதன் பின்னர் கிலோக்கிராம் ஒன்றுக்கு ரூ.20இனையும் அறவிடுவதற்கு அரசாங்கம் தீர்மானித்தது. ஏனைய பதிலீடுகளான தாவர எண்ணெய் சோயா எண்ணெய் சன்பிளவர் எண்ணெய் என்பனவற்றின் உலக சந்தை விலைகள் 1999இனைக் காட்டிலும் 2000இல் தாழ்வாகவே காணப்பட்டன.

2000ஆம் ஆண்டில் ஏனைய தெங்கு உற்பத்திப் பொருட்களிலிருந்தான வருவாய்கள் மாற்றமின்றிக் காணப்பட்டன. ஏனைய தெங்கு உற்பத்திப் பொருட்களுக்கான உள்ளீட்டினை வழங்கும் உடன் காய்களின் அதிகரித்த உற்பத்தியின் மத்தியிலும் ஐக்கிய அமெரிக்க நாடுகளுக்கான அதிஉயர் கப்பற் கட்டணம் மற்றும் மூலப் பொருட்களின் அதிகரித்த செலவு என்பனவற்றின் காரணமாக போட்டித் தன்மை குறைக்கப்பட்ட பெருமளவு காரணத்தினால் ஏற்றுமதி செய்யப்பட்ட தென்னந்தும்பு மெத்தைகளின் அளவு 37 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தது. எனினும் தாழ்ந்த தொகைகளின் பாதகமான தாக்கத்தினை மிதப்படுத்தும் வகையில் விலை கணிசமாக உயர்வடைந்தது. உடன்காய்கள் மற்றும் தென்னந்தும்புச்சிலிர் என்பன தவிர்ந்த ஏனைய அனைத்து தும்பு உற்பத்திப் பொருட்களினதும் விலைகள் முன்னைய ஆண்டைவிட உயர்வாகக் காணப்பட்டன. சிரட்டைக்கரி, தென்னம்தும்புச்சிலிர், தும்பு நூலிழை மற்றும் உடன்காய்கள் என்பனவற்றின் ஏற்றுமதி 2000ஆம் ஆண்டில் மேம்பாடொன்றைக் காட்டியது. எனினும் தெங்கினை அடிப்படையாகக் கொண்ட உற்பத்திப் பொருட்களின் மொத்த ஏற்றுமதி வருவாய்கள் மொத்த ஏற்றுமதிகளின் 2 சதவீதமாகும்.

2000ஆம் ஆண்டில் 87.2 மில்லியன் கிலோக்கிராம்களாக விளங்கிய இலங்கையின் இறப்பர் உற்பத்தி கடந்த ஐந்து தசாப்தங்களிலும் பதிவு செய்யப்பட்ட தாழ்ந்த உற்பத்தியாவதோடு 1999இன் 96.6 மில்லியன் கிலோக் கிராம்களைவிட 10 சதவீதம் குறைவானதாகும். இறப்பரை அடிப்படையாகக் கொண்ட உற்பத்திப் பொருட்கள் துணைத்துறையின் விரிவாக்கத்தினை பிரதிபலிக்கும் வகையில் இறப்பரின் உள்நாட்டு நுகர்வு 54 மில்லியன் கிலோக கிராம்களிலிருந்து 55 மில்லியன் கிலோக் கிராம்களுக்கு அதிகரித்தது. உள்ளீட்டு தரதேவைப்பாடுகளை எதிர் கொள்வதற்காக உள்நாட்டுத் தயாரிப்புக் கைத்தொழிலினால் 1999இன் 1.3 மில்லியன் கிலோக்கிராம்களுக்கு எதிராக 2000ஆம் ஆண்டிலும் 4.3 மில்லியன் கிலோக்கிராம் இயற்கை இறப்பர் இறக்குமதி செய்யப்பட்டது.

1999இன் திசெம்பரிலிருந்து இயற்கை இறப்பரின் ஏற்றுமதி விலைகள் தொடர்ந்து அதிகரித்து 2000ஆம் ஆண்டில் 16 சதவீத வளர்ச்சியை விளைவித்தது. இதற்கு மாறாக 2000ஆம் ஆண்டில் இறப்பர் ஏற்றுமதிகளின் அளவு 24 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தது. இதன்படி இயற்கை இறப்பர் ஏற்றுமதிகளிலிருந்தான வருவாய்கள் 12 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தன. சாதகமற்ற வானிலை நிலைமைகளின் காரணமாக முக்கிய உற்பத்தி நாடுகளின் உற்பத்தி வீழ்ச்சி மற்றும், ஐக்கிய அமெரிக்கா, கொரியக் குடியரசு, யப்பான், சீனா போன்ற நாடுகளினால் உலக சந்தையில் இயற்கை இறப்பருக்கான அதிகரித்த கேள்வி என்பன இறப்பர் விலைகளின் அதிகரிப்புக்குப் பங்களிப்புச் செய்தன. இறப்பர் உற்பத்திப் பொருட்களின் அனைத்து முக்கிய தரங்களினதும் விலைகள் அதிகரித்ததுடன் சராசரி விலை 1999இன் கிலோக்கிராம் ஒன்றுக்கான ஐ.அ.டொலர் 0.77இலிருந்து 2000ஆம் ஆண்டில் கிலோக் கிராம் ஒன்றுக்கு ஐ.அ.டொலர் 0.89இற்கு அதிகரித்தது. 2000ஆம் ஆண்டில் லேற்றெக்ஸ் மற்றும் சோல் கிறேப் தவிர்ந்த ஏனைய கிறேப் இறப்பரின் சராசரி ஏற்றுமதி விலை 23 சதவீதத்தினால் அதிகரித்த வேளையில் தட்டை இறப்பர் தரங்களின் சராசரிவிலை 8 சதவீதத்தினால் அதிகரித்தது. இறப்பர் ஏற்றுமதிகளிலிருந்தான வருவாய்கள் மொத்த ஏற்றுமதிகளின் 1 சதவீதத்திற்கும் குறைவாகவே வகைகூறின.

ஏனைய வேளாண்மை உற்பத்திப் பொருட்கள்

முக்கிய உற்பத்திப் பொருட்களின் குறைந்த அளவுகளின் காரணமாக ஏனைய வேளாண்மை ஏற்றுமதி வருவாய்கள் 2000ஆம் ஆண்டில் 6 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தன. தாழ்ந்த பன்னாட்டு விலைகளின் காரணமாக கறுவா ஏற்றுமதிகள் குறைவரகக் காணப்பட்டதோடு தமது உற்பத்திகளைக் கட்டுப்படுத்துவதற்கு இது உற்பத்தியாளர்களைக் கட்டாயப்படுத்தியது. 2000ஆம் ஆண்டின் முதல் அரைப் பகுதியில் உறுதியாகக் காணப்பட்ட மிளகு விலை பன்னாட்டுச் சந்தைப் போக்கினைத் தொடர்ந்து ஆண்டின் இரண்டாம் அரைப்பகுதியில் கணிசமாக வீழ்ச்சியடைந்தது. இந்தியா தவிர்ந்த பிரேசில், மலேசியா, இந்தோனேசியா, வியட்நாம் ஆகிய அனைத்து முக்கிய உற்பத்தி நாடுகளிலும் உற்பத்தி மேம்பாடடைந்ததுடன் விலைகளின் மீது கீழ் நோக்கிய தாக்கத்தினைக் கொண்டிருந்தன. இதேவேளையில் பொருத்தமான வானிலை நிலைமைகள் காணப்பட்டமையின் காரணமாக 2000ஆம் ஆண்டில் இலங்கையின் மிளகு அறுவடை 15 சதவீதத்தினால் அதிகரித்தது. இதன் விளைவாக இவ்வாண்டில் ஏற்றுமதி செய்யப்பட்ட மிளகின் அளவு 29 சதவீதத்தினால் அதிகரித்து ஏற்றுமதி வருவாய்களில் 13 சதவீத வளர்ச்சியை விளைவித்தது. விலைகள் தாழ்வாகக் காணப்பட்டபோதிலும் ஆஸ்திரியா, பெல்ஜியம், ஐக்கிய இராச்சியம், ஸ்பெயின் போன்ற நாடுகளிலிருந்தான அதிகரித்த கேள்வியின் காரணமாக

தயாரிக்கப்படாத புகையிலைப் பொருட்களிலிருந்தான வருவாய்கள் 2 சதவீதத்தினால் அதிகரித்தன. இந்த மூன்று உற்பததிப் பொருட்களும் கூட்டாக ஏனைய வேளாண்மை வகையின் 67 சதவீதத்திற்கு வகைகூறின. சாதிக்காய், சாதிப்பத்திரி என்பவற்றிலிருந்தான வருவாய்கள் சிறந்த விலைகளின் காரணமாக 25 சதவீதத்தினால் அதிகரித்தன. சாதிக்காய் சாதிப்பத்திரி என்பனவற்றின் உள்நாட்டு உற்பத்தி வீழ்ச்சியடைந்தபோதிலும் சிறந்த விலைகளின் காரணமாக ஏற்றுமதி அளவு அதிகரித்தது. ஏற்றுமதித் தொகைகள் குறைவடைந்தமையின் காரணமாக மரக்கறி வகைகள், பழவர்க்கங்கள், கோப்பி, கராம்பு, பாக்கு, ஏலக்காய், வெற்றிலை, மரமுந்திரிக் கொட்டை என்பனவற்றின் ஏற்றுமதி வருவாய்கள் 1999இன் மட்டங்களைவிட தாழ்ந்து காணப்பட்டன.

கனிப்பொருள் ஏற்றுமதிகள்

கனிப்பொருள் உற்பத்திப் பொருட்களின் ஏற்றுமதிகளிலிருந்தான வருவாய்கள் 52 சதவீதத்தினால் அதிகரித்து 2000ஆம் ஆண்டின் மொத்த ஏற்றுமதிகளின் 2 சதவீதத்திற்குப் பங்களிப்புச் செய்தன. கனிப்பொருள் ஏற்றுமதிகளில் 96 சதவீதத்திற்கு வகைகூறிய இரத்தினக் கற்களின் ஏற்றுமதி 52 சதவீதத்தனால் அதிகரித்தது. கிழக்காசிய சந்தைகளினதும் யப்பானினதும் மீட்சியும் அதேபோன்று ஐக்கிய அமெரிக்க நாடுகள் மற்றும் ஐரோப்பிய நாடுகளிலிருந்தான அதிகரித்த கேள்வியும் இவ்வளர்ச்சிக்குக் காரணமாயின. ஐரோப்பா மற்றும் ஐக்கிய அமெரிக்க சந்தைகளில் தரப்படுத்தப்பட்ட நீல, இளஞ்சிகப்பு மற்றும் மஞ்சள் மாணிக்கக் கற்களுக்கான கேள்வி ஆண்டு முழுவதிலும் உறுதியாகக் காணப்பட்டது. உலக சந்தைக்கு இயற்கை வர்ணங்களில் உயர்தரத்திலான நீல மாணிக்கக் கற்களின் பாரிய வழங்குநராக இலங்கை தொடர்ந்தும் காணப்பட்டது. இவ்வாண்டில் இந்த உற்பத்திப் பொருட்களின் விலைகள் உறுதியான வளர்ச்சியைக் காட்டியுள்ளன. ஐக்கிய அமெரிக்க நாடுகளிலிருந்தான ஓரளவு பெறுமதியுடைய அலங்கார வெட்டுக்களைக் கொண்ட கற்களுக்கான கேள்வி உறுதியாகக் காணப்பட்டது. ஆசிய பசுபிக் பிராந்தியத்தில் முக்கிய இரத்தினக்கற்கள் மற்றும் ஆபரண மையமாக கொங்கொங் தோற்றம் பெற்றுள்ளது. அதிகளவிலான உள்ளார்ந்த வளத்துடன் இரத்தினக் கற்களுக்கான முக்கிய சந்தைகளாக யப்பானும் தாய்லாந்தும் தொடர்ந்தும் காணப்பட்ட வேளையில் சுவிட்சர்லாந்து, பிரான்சு, இத்தாலி, மற்றும் சேர்மன் என்பன ஐரோப்பிய சந்தையில் முக்கிய கொள்வனவாளர்களாக விளங்கின. இலங்கையில் காணப்படும் அனைத்துவகை இரத்தினக்கற்களினதும் உற்பத்தியாளராக மடகாஸ்கார் தோற்றம் பெற்றிருப்பது இக் கைத்தொழிலில் அதிகூடிய போட்டியினை ஏற்படுத்தியுள்ளது. வழங்கல் பக்கத்தில் அரசாங்க மற்றும் பெருந்தோட்டங்களுக்குச் சொந்தமான காணிகளில் இரத்தினக்கற்களின் அகழ்வுக்கான ஏலங்கள் இடைநிறுத்தப்பட்டமையானது 2000ஆம் ஆண்டில் செப்பனற்ற கற்களின் பற்றாக்குறையொன்றை ஏற்படுத்தியது. இயற்கைக் காரீயம் உலோகங்கள் மற்றும் இரும்புப் பாலங்கள் என்பனவற்றின் அதிகரித்த வருவாயின் காரணமாக கனிப்பொருள் ஏற்றுமதிகளிலிருந்தான வருவாய்கள் 13 சதவீதத்தினால் வளர்ச்சியடைந்தன.

9.3 இறக்குமதிகள்

2000ஆம் ஆண்டின் இறக்குமதிச் செலவினம் ஐ.அ.டொலர் 7,320 மில்லியனுக்கு 22 சதவீதத்தினால் அதிகரித்தது. இது , மீள் தொகுதிப்படுத்தல் நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் 2000ஆம் ஆண்டு சனவரியிலும் மேயிலும் யூனிலும் சிறிலங்கன் எயர்லைன்சினால் இறக்குமதி செய்யப்பட்ட மூன்று வானூர்திகளின் (ஐ.அ.டொலர் 298 மில்லியன்) பெறுமதியையும் உள்ளடக்குகிறது. 1999இலும் மூன்று வானூர்திகள் இறக்குமதி செய்யப்பட்டிருந்தன. இரு ஆண்டுகளினதும் வானூர்தி இறக்குமதிகள் நீக்கப்படுமிடத்து, இறக்குமதியின் வளர்ச்சி 24 சதவீதமாக இருக்கும். இவ்வளர்ச்சி பெற்றோலிய உற்பத்திகளின் கணிசமாக அதிகரித்த செலவு, ஏற்றுமதி தயாரிப்பாளர்களிடமிருந்து இடைநிலைப் பொருட்களின் இறக்குமதிக்கு ஏற்பட்ட உயர்ந்த கேள்வி, பாதுகாப்புடன் தொடர்பான இறக்குமதிகளின்மீது ஏற்பட்ட செலவினம் என்பனவே காரணங்களாக இருந்தன. அனைத்துமூன்று முக்கிய இறக்குமதி வகைகளான நுகர்வுப் பொருட்கள், முதலீட்டுப் பொருட்கள், மற்றும் இடைநிலைப் பொருட்கள் 1999இனைவிட கூடிய வளர்ச்சியைக் காட்டின. நுகர்வுப் பொருட்களின் இறக்குமதி 12 சதவீதத்தினால் வளர்ச்சிய்டைந்த வேளையில் இடைநிலை மற்றும் முதலீட்டுப் பொருட்கள் முறையே 24 சதவீதத்தினாலும், 11 சதவீதத்தினாலும் வளாச்சியடைந்தன. வானூர்தி இறக்குமதிகள் நீக்கப்படுமிடத்து, முதலீட்டுப் பொருட்கள் 14 சதவீதத்தினால் உயர்வடைந்து முதலீட்டு நடவடிக்கைகள் விரிவடைந்தமையைப் பிரதிபலித்தன.

இறக்குமதிகளின் உயர்ந்த வளர்ச்சிக்கு சராசரி இறக்குமதிகளின் விலைகளில் ஏற்பட்ட 8 சதவீதமான அதிகரிப்பும் அளவுகளில் ஏற்பட்ட 13 சதவீதமான வளர்ச்சியுமே காரணமாகும். முக்கிய வேளாண்மை மற்றும் பண்ணை உற்பத்தி (சீனி, கோதுமைமா, பால் உற்பத்திகள்) களினதும் முக்கிய உள்ளீடுகளினதும் (பெற்றோலியம், வளமாக்கி, மற்றும் புடவைகள்) உயர்ந்த விலைகள் இறக்குமதி விலைகளின் வளர்ச்சிக்குப் பங்களித்தன. உணவு மற்றும் நீண்டகால நுகர்வுப் பொருட்கள் (சீனி, கோதுமைமா, பால் உற்பத்திகள், உந்து ஊர்திகள், வானொலி மற்றும் தொலைக் காட்சிப் பெட்டி) இடைநிலைப் பொருட்கள் (பெற்றோலிய

உற்பத்திகள், புடவை மற்றும் வைரங்கள்) மற்றும் முதலீட்டுப் பொருட்கள் (கட்டடப் பொருட்கள், மற்றும் பொறிகள்) என்பனவற்றின் பாரிய அளவுகளில் ஏற்பட்ட வளர்ச்சிக்குப் பங்களிப்புச் செய்தன.

இறக்குமதி அமைப்பு

1977இன் பொருளாதார தாரளமயமாக்கலைத் தொடர்ந்து கடந்த 23 ஆண்டுகளாக இடைநிலைப் பொருட்கள் மற்றும் முதலீட்டுப் பொருட்களுக்கு சாதகமான முறையில் இறக்குமதி அமைப்பில் குறிப்பிடத்தக்க மாற்றமொன்று ஏற்பட்டுள்ளமை அவதானிக்கப்பட்டுள்ளது. இடைநிலைப் பொருட்களின் பங்கு 1977இன் 42 சதவீதத்திலிருந்து 2000ஆம் ஆண்டில் 52 சதவீதத்திற்கு அதிகரித்தது. கைத்தொழில்துறையில் ஏற்பட்ட விரிவாக்கமானது இடைநிலைப் பொருட்களின் உயர்ந்த இறக்குமதியை தேவைப்படுத்தியமையானது மொத்த இறக்குமதிகளில் இடைநிலைப் பொருட்களின் சார்பு ரீதியான முக்கியத்துவத்தினை அதிகரிக்கின்றது. முதலீட்டுப் பொருட்களின் பங்கு 1977இன் 12 சதவீதத்திலிருந்து 2000ஆம் ஆண்டில் 24 சதவீதத்திற்கு அதிகரித்தது. உட்கட்டமைப்பு வசதிகள், கட்டுமானம், மற்றும் போக்குவரத்து என்பனவற்றில் ஏற்பட்ட அபிவிருத்தியானது முன்னேற்றம் கண்ட தொழில் நுட்பத்தின் அதிகரித்த பயன்பாட்டுடன் இணைந்து முதலீட்டுப் பொருட்களின் இறக்குமதிகள் அதிகரித்தன. மொத்த இறக்குமதிகளில் நுகர்வுப் பொருட்களின் பங்கு 1977இன் 45 சதவீதத்திலிருந்து இதே காலப்பகுதியில் 19 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தது. 1999 உடன் ஒப்பிடுகையில் இடைநிலைப் பொருட்களின் சார்புரீதியான முக்கியத்துவம் 2000ஆம் ஆண்டில் 51 சதவீதத்திலிருந்து 52 சதவீதத்திற்கு அதிகரித்தது. நுகர்வுப் பொருட்கள் 1999இன் 21 சதவீதத்திலிருந்து 2000ஆம் ஆண்டில் 19 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்த வேளையில் முதலீட்டுப் பொருட்களின் பங்கு இவ்விரு ஆண்டுகளுக்குமிடையில் 26 சதவீதத்திலிருந்து 24 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தது.

நுகர்வுப் பொருட்கள்

நுகர்வுப் பொருட்களின் இறக்குமதியில் ஏற்பட்ட அதிகரிப்பு உணவு மற்றும் நீண்டகால நுகர்வுப் பொருட்களின் வகைகளில் தெளிவாகக் காணப்பட்டது. முக்கிய உணவு விடயங்களின் உயர்ந்த பன்னாட்டு விலைகள் உணவு மற்றும் குடிபான வகையின் செலவினத்தினை வேகமாக உயர்த்தின. உணவு இறக்குமதிகள் 5 சதவீதத்தினால் வளர்ச்சி கண்டமைக்கு சீனி, கோதுமை, பால் உணவுகள் மற்றும் ஏனைய உணவு விடயங்களின் மீதான செலவினம் கணிசமாக அதிகரித்தமையே காரணமாகும். கோதுமைத் தானியத்தின் இறக்குமதிகள் 15 சதவீதத்தினால் அதிகரித்தன. 2000ஆம் ஆண்டு பெப்புருவரி 29ஆம் நாள் தொடக்கம் கோதுமை மற்றும் மாவின் இறக்குமதிகளை தாராளமயமாக்குவது என்ற அரசின் தீர்மானத்தினைத் தொடர்ந்து மா இறக்குமதி 1999இன் 24,427 மெற்றிக் தொன்களிலிருந்து 2000ஆம் ஆண்டில் 34,706 மெற்றிக் தொன்களுக்கு 42 சதவீதத்தினால் அதிகரித்தபோதும் மாவுக்கான கேள்வியில் இன்னமும் ஒப்பீட்டு ரீதியில் சிறிய பங்கிற்கே வகைகூறுகிறது. கோதுமைத் தானியத்தின் இறக்குமதி 921,653 மெற்றிக் தொன்களுக்கு 7 சதவீதத்தினால் வளர்ச்சியடைந்தது. சீனி இறக்குமதி மீதான செலவினம் 33 சதவீதத்தினால் அதிகரித்தது. 2000ஆம் ஆண்டின் முதலரைப்பகுதியில் பெரும்போக அறுவடையிலிருந்து கிடைத்த உயர்விளைச்சல்கள் முன்னைய ஆண்டின் ஒன்று சேர்ந்த இருப்பு என்பன குறைந்தளவு அரிசி இறக்குமதிக்கு காரணமாயின. எனினும் உள்நாட்டு அரிசி வேளாண்மையாளர்களுக்கு நியாயமான விலையினை உறுதிப்படுத்தும் பொருட்டு அரிசி இறக்குமதியினை உயர்தர வகைகளுக்கு மட்டுமே வரையறுக்கின்ற விதத்தில் 2000ஆம் ஆண்டு யூலை 21ஆம் நாளன்று அரசு அரிசியை இறக்குமதிக் கட்டுப்பாட்டின்கீழ் கொண்டு வந்தது. அரிசி இறக்குமதி 35 சதவீதமான இறக்குமதித் தீர்வைக்குட்பட்டதாகும். இதன்படி, சிறுபோகத்தில் உள்ளூர் நெல் உற்பத்தி (2,859,000 மெற்றிக் தொன்கள்) சிறிதளவு வீழ்ச்சியடைந்தபோதும் அரிசி இறக்குமதி (14,855 மெற்றிக் தொன்கள்) 93 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தது. மற்றைய உணவு விடயங்களில் பால் உற்பத்திகள், மீன் உற்பத்திகள், பருப்புவகை, பெரிய வெங்காயம், மிளகாய், சோளம், பயறுவகையும் பயறும், மோல்ட், பூடு, குடிவகை, சாக்கலேட் மற்றும் இனிப்புப் பண்டங்கள், மற்றும் தோடம்பழம், அப்பிள், மற்றும் திராட்சை போன்ற பழவகைகளும் 2000ஆம் ஆண்டில் அதிகரிப்புக்களைப் பதிவு செய்தன. எனினும் உருளைக்கிழங்கின் இறக்குமதி வீழ்ச்சியடைந்தமையானது 2000ஆம் ஆண்டு ஒகத்து 30ஆம் நாளிலிருந்து 2000 திசெம்பர் 8வரை 35 சதவீத இறக்குமதித் தீர்வைக்குப்புறம்பாக, 35 சதவீத மேலதிகத் தீர்வை விதிக்கப்பட்டமையை பிரதிபலிப்பதாக இருந்தது. அதன்பின் உருளைக்கிழங்கு இறக்குமதிகள் கிலோகிறாம் ஒன்றிற்கு ரூ.20 தீர்வை வீதத்தின்கீழ் கொண்டுவரப்பட்டன.

நீண்டகால நுகர்வுப் பொருட்கள் வகையில், உந்து ஊர்திகள் மற்றும் உந்து ஈருருளிகளின் இறக்குமதிகள் 17 சதவீதத்தினால் அதிகரித்தமைக்கு உந்து ஊர்திகளின் இறக்குமதிக்கு அரசதுறை ஊழியர்களுக்கு வழங்கப்பட்ட ஒரளவான தீர்வைத் தளர்த்தலே ஒரளவு காரணமாகும். தீர்வைச் சலுகையின் கீழ் 2000ஆம் ஆண்டுப் பகுதியில் 11,767 ஊர்திகள் இறக்குமதி செய்யப்பட்ட வேளையில் 1999இல் இது தொடர்பான எண்ணிக்கை 4,344 ஆகக் காணப்பட்டது. வானொலி மற்றும் தொலைக் காட்சிப் பெட்டிகளின் இறக்குமதி 12 சதவீதங்கொண்ட

அட்டவணை 9.4
இறக்குமதிகளின் முடிவுப் பயன்பாட்டுப் பகுப்பு

விடயம்	ஐ.அ.டொலர் மில்லியன்					ரூபா மில்லியன்				
	1996	1997	1998	1999(அ)	2000(ஆ)	1996	1997	1998	1999(அ)	2000(ஆ)
1. நுகர்வுப் பொருட்கள்	1,234	1,223	1,255	1,242	1,388	68,372	72,062	80,956	87,505	105,403
உணவும் குடிபானமும்	801	781	723	661	693	44,377	45,996	46,543	46,562	52,584
அரிசி	91	73	42	46	4	5,118	4,331	2,621	3,290	288
சீனி	145	184	129	106	141	8,026	10,788	8,384	7,448	10,777
கோதுமை	204	139	127	111	127	11,267	8,128	8,133	7,792	9,625
ஏனையவை	361	385	425	398	421	19,966	22,749	27,405	28,032	31,894
ஏனைய நுகர்வுப் பொருட்கள்	433	442	532	581	696	23,995	26,066	34,413	40,943	52,819
2. இடைநிலைப் பொருட்கள்	2,767	3,096	2,982	3,057	3,789	153,117	182,754	192,494	215,658	287,196
பெற்றோலியம்	479	539	345	500	901	26,525	31,828	22,275	35,344	68,381
வளமாக்கி(இ)	76	66	62	66	80	4,189	3,916	3,989	4,690	6,059
இரசாயனங்கள்	134	136	143	136	147	7,402	8,024	9,241	9,590	11,152
புடவைகள்	1,168	1,386	1,397	1,320	1,471	64,601	81,816	90,099	93,105	111,386
ஏனைய இடைநிலைப் பொருட்கள் (ஈ)	910	969	1,035	1,035	1,190	50,400	57,170	66,890	72,929	90,218
3. முதலீட்டுப் பொருட்கள்	1,204	1,325	1,477	1,565	1,737	66,647	78,232	95,322	110,599	130,889
பொறியும் கருவியும்	649	742	786	678	787	35,987	43,853	50,592	47,736	59,538
போக்குவரத்துக் கருவி (உ)	179	208	264	523	529	9,885	12,276	17,098	37,191	39,489
கட்டடப் பொருட்கள்	263	272	303	260	305	14,540	16,030	19,590	18,296	23,087
ஏனைய முதலீட்டுப் பொருட்கள்	113	103	124	104	116	6,235	6,073	8,042	7,376	8,776
4. பகுக்கப்படாத இறக்குமதிகள்	234	220	176	115	406	12,940	12,978	11,367	8,126	30,802
மொத்த இறக்குமதிகள் (ஊ)	5,439	5,864	5,890	5,980	7,320	301,076	346,026	380,138	421,888	554,290

(அ) திருத்தியமைக்கப்பட்டது
(ஆ) தற்காலிகமானவை.
(இ) வரையறுக்கப்பட்ட இலங்கை வளமாக்கிக் கம்பனியிடமிருந்தும் ஏனைய முக்கிய வளமாக்கி இறக்குமதியாளர்களிடமிருந்தும் பெறப்பட்ட ரவுகளுக்குப் பதிலாக 1997இலிருந்து வளமாக்கி மீதான சுங்கத் தரவுகள் பயன்படுத்தப்பட்டுள்ளன.
(ஈ) சுங்கத்தினால் 1999இலும் 2000இலும் பதிவு செய்யப்பட்ட வைர இறக்குமதிகள் முக்கிய இறக்குமதியாளர்களிடமிருந்து பெறப்பட்ட தரவுகளைக் கொண்டு சீராக்கம் செய்யப்பட்டது.
(உ) 1999இலும் 2000இலும் சிறிலங்கன் எயார் லைன்சினால் இறக்குமதி செய்யப்பட்ட 3 வானூர்திகளின் பெறுமதியையும் உள்ளடக்கும்.
(ஊ) சீராக்கப்பட்டது.

மூலங்கள்: இலங்கைச் சுங்கம்.
கூட்டுறவு மொத்த விற்பனை நிறுவனம்.
இலங்கை வளமாக்கிக் கம்பனியும் ஏனைய வளமாக்கி முக்கிய இறக்குமதியாளர்களும்.
இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனம்.
முக்கிய வைரக்கல் இறக்குமதியாளர்கள்.
இலங்கை மத்திய வங்கி.

அதிகரிப்பினைக் காட்டியது. மருத்துவ மற்றும் மருந்தாக்கல் உற்பத்திகள் 25 சதவீதத்தினால் உயர்வடைந்தன. 2000ஆம் ஆண்டில் இறப்பர் டயர்கள் மற்றும் ரியூப்புக்களின் இறக்குமதிகள் 4 சதவீதத்தினால் அதிகரித்தன. 2000ஆம் ஆண்டில் அதிகரிப்புக்களைப் பதிவு செய்த மற்றைய நீண்டகால நுகர்வுப் பொருட்களாக கண்ணாடி இழையங்கள், தாள் மற்றும் தாள் அட்டைகள், காலணிகள், பெட்டிகளுக்கான அட்டைகள் மற்றும் பெட்டிகள் பொம்மைகள், ஆமைப்பூட்டுக்கள், பூட்டுக்கள் மற்றும் மட்பாண்ட நீர்த் தொட்டிகள் என்பன காணப்பட்டன.

இடைநிலைப் பொருட்கள்

2000ஆம் ஆண்டில் இடைநிலைப் பொருட்களின் இறக்குமதிகள் 24 சதவீதத்தினால் அதிகரித்தமைக்கு புடவை, மசகெண்ணெய், சுத்திகரிக்கப்பட்ட பெற்றோலிய உற்பத்திகள், வளமாக்கி, வைரங்கள் மற்றும் ஏனைய இடைநிலைப் பொருட்களின் உயர்ந்த அளவுகளும் விலைகளுமே காரணமாகும். உயர்ந்த விலைகள், இறக்குமதிகளின் உயர்ந்த அளவு என்பனவற்றைப் பிரதிபலிக்கின்ற விதத்தில் மசகெண்ணெய் இறக்குமதிகளின் பெறுமதி ஏறத்தாழ இருமடங்காகியது. மசகெண்ணெய் இறக்குமதிகளின் அளவு 1999இன் 13.5 மில்லியன் பீப்பாய்களிலிருந்து 2000ஆம் ஆண்டில் 17.3 மில்லியன் பீப்பாய்களுக்கு அதிகரித்தவிடத்து சராசரி விலைகள் இவ்விரு ஆண்டுகளுக்குமிடையில் பீப்பாயொன்றிற்கு ஐ.அ.டொலர் 19.06 இலிருந்து பீப்பாயொன்றிற்கு ஐ.அ.டொலர் 28.77 இற்கு (51சதவீதம்) உயர்வடைந்தது. மற்றைய பெற்றோலிய உற்பத்திகள் மீதான செலவினம் 66 சதவீதத்தினால் அதிகரித்தது. எனினும் பெற்றோலிய உற்பத்திகள் நீங்கலான இடைநிலைப் பொருட்கள் 13 சதவீதத்தினால் அதிகரித்த கைத்தொழில் ஏற்றுமதிகளின் வளர்ச்சிக்கு சமாந்தரமாக இருந்தன. வளமாக்கி இறக்குமதிகளில் ஏற்பட்ட அரிகரிப்பிற்கு பன்னாட்டுச் சந்தை விலைகளின் போக்கினை பிரதிபலிக்கின்ற உயர்ந்த விலைகளே

காரணமாகும். இது பெற்றோலிய உற்பத்திகளின் செலவிற்கு சமாந்தரமானதாக இருந்தது.

இடைநிலைப் பொருட்களின் இறக்குமதியில் 39 சதவீதத்திற்கு மேற்பட்ட பங்கினைக் கொண்டுள்ள புடவை இறக்குமதிகள் 11 சதவீதத்தினால் அதிகரித்தன. வைரங்களின் இறக்குமதிகள் 9 சதவீதத்தினால் அதிகரித்து வைரங்கள் மற்றும் ஆபரணக் கைத்தொழில்களின் மீட்சியைப் பிரதிபலித்தன. ஏனைய இடைநிலைப் பொருட்களின் இறக்குமதிகள் 15 சதவீதத்தினால் வளர்ச்சியடைந்து சீமெந்து சூளைக்கற்கள், சவர்காரத்திற்கான உள்ளீடு, ஆடைகள், பண்ணை உள்ளீடுகள், இறப்பரை அடிப்படையாகக் கொண்ட தயாரிப்புக் கைத்தொழில்கள் என்பனவற்றின் உயர்ந்த இறக்குமதிகளைக் காட்டின. உணவிற்கான எண்ணெய் இறக்குமதிகள் குறிப்பிடத்தக்களவிற்கு வீழ்ச்சியடைந்தமைக்கு இவ்விடயங்களின் மீது விதிக்கப்பட்ட மேலதிகக் கட்டணமே காரணமாகும்.

முதலீட்டுப் பொருட்கள்

2000ஆம் ஆண்டில் முதலீட்டுப் பொருட்களின் இறக்குமதிகள் 11 சதவீதத்தினால் அதிகரித்தன. மூன்று வானூர்திகளின் இறக்குமதிகளும் நீங்கலான முதலீட்டுப் பொருட்களின் இறக்குமதிகள் 2000ஆம் ஆண்டில் 14 சதவீதத்தினால் அதிகரித்தன. வானூர்திகள் நீங்கலான போக்குவரத்துக் கருவிகளின் இறக்குமதிகள் 3 சதவீதத்தினால் அதிகரித்தன. இது 2000ஆம் ஆண்டு மேயில் இறக்குமதி செய்யப்பட்ட புகைவண்டிப் பெட்டிகளையும் (ஐ.அ.டொலர் 25 மில்லியன்) உள்ளடக்குகிறது. பொறிகள் மற்றும் கருவிகளின் இறக்குமதிகள் 23 சதவீதத்தினால் அதிகரித்தமைக்கு 2000ஆம் ஆண்டு ஏப்பிறலில் தனியார் கம்பனியொன்று ஐ.அ.டொலர் 84 மில்லியன் பெறுமதியான வலு உருவாக்கியொன்றை இறக்குமதி செய்ததமையே முக்கிய காரணமாகும். மற்றைய முக்கிய விடயங்களாக கைத்தொழில் தேவைகளுக்கான கழுவும் பொறிகளின் உதிரிப்பாகங்கள் மற்றும் துணைப் பொருட்கள், தொலைத் தொடர்பூட்டல் கருவிகள், உழுபொறிகள் மற்றும் கட்டுமானத்துடன் தொடர்பான பொறிகள் என்பன காணப்பட்டன. கட்டடப்பொருட்களின் இறக்குமதிகள் 17 சதவீதத்தினால் அதிகரித்தன. 2000ஆம் ஆண்டில் இறக்குமதி செய்யப்பட்ட ஏனைய முக்கிய முதலீட்டுப் பொருட்களாக மருத்துவத் தொழிலில் பயன்படுத்தப்படுகின்ற கருவிகள் மற்றும் சாதனங்கள், வாயு மற்றும் மின்னியல் வழங்கலுக்குப் பயன்படுத்துகின்ற மானி மற்றும் சாதனங்கள், இரும்பு மற்றும் உருக்கு, அலுமினியம் கம்பிகள், ரியூப்புக்கள், மற்றும் குழாய்கள் என்பன விளங்கின.

அட்டவணை 9.5
முக்கிய இறக்குமதிகளின் அளவுகள் (அ)

'000 மெற்றிக் தொன்

விடயம்	1996	1997	1998	1999	2000(ஆ)
அரிசி	341	306	168	214	15
1ஆம் காலாண்டு	1	104	136	24	7
2ஆம் காலாண்டு	23	9	12	12	7
3ஆம் காலாண்டு	117	12	2	31	
4ஆம் காலாண்டு 201	181	18	146	1	
	913	789	880	859	922
கோதுமை	201	302	340	207	266
1ஆம் காலாண்டு	303	172	155	263	210
2ஆம் காலாண்டு	157	168	126	189	247
3ஆம் காலாண்டு	252	147	259	200	199
4ஆம் காலாண்டு					
	381	545	444	479	562
சீனி	94	176	79	152	128
1ஆம் காலாண்டு	84	163	129	64	185
2ஆம் காலாண்டு	58	83	99	138	85
3ஆம் காலாண்டு	146	123	137	125	164
4ஆம் காலாண்டு					
பெற்றோலியம்	2,033	1,814	2,156	1,832	2,347
(மசகெண்ணெய்)	566	299	567	244	608
1ஆம் காலாண்டு	493	389	431	503	583
2ஆம் காலாண்டு	466	606	662	548	613
3ஆம் காலாண்டு	508	520	496	537	543
4ஆம் காலாண்டு					
	361	391	440	539	559
வளமாக்கி	104	56	109	97	149
1ஆம் காலாண்டு	60	87	98	158	102
2ஆம் காலாண்டு	53	87	82	129	174
3ஆம் காலாண்டு	144	161	151	155	134
4ஆம் காலாண்டு					

(அ) சீராக்கப்பட்டது.
(ஆ) தற்காலிகமானவை.

மூலங்கள்: இலங்கைச் சுங்கம்.
கூட்டுறவு மொத்த விற்பனை நிறுவனம்.
இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனம்.

வர்த்தகத்தின் போக்கு

2000ஆம் ஆண்டில் இலங்கை ஏற்றுமதிகளில் 74 சதவீதமான பங்குகள் சென்றடையும் முக்கிய நாடுகளாக கைத்தொழில் மயமாக்கப்பட்ட நாடுகள் காணப்பட்டன. அபிவிருத்தியடைந்துவரும் நாடுகள் 20 சதவீத பங்குகளைக் கொண்டிருக்க கிழக்கு ஐரோப்பிய நாடுகள் 3 சதவீதமான பங்குகளைக் கொண்டிருந்தன. 2000ஆம் ஆண்டில் இலங்கை பெரும்பாலான இறக்குமதிகளை அபிவிருத்தியடைந்துவரும் நாடுகளிலிருந்தும் (57 சதவீதமான பங்குகள்) அதனைத் தொடர்ந்து கைத்தொழில் நாடுகளிலிருந்தும் (32 சதவீதமான பங்குகள்) மிகச் சிறியதொரு பங்கான 0.1 சதவீதத்தினை ஆட்சிமுறை மாற்றமடைந்துசெல்லும் நாடுகளிலிருந்தும் இறக்குமதி செய்தது. சார்க் பிராந்தியத்தில் சார்க் நாடுகளுடனான வர்த்தகத்தில் ஏற்றுமதிப் பங்குகள் 3 சதவீதத்தினையும் இறக்குமதிப் பங்குகள் 10 சதவீதத்தினையும் பதிவு செய்தன. இப்பிராந்தியத்தில் மாலைதீவு இலங்கையின் மிகப்பெரும் ஏற்றுமதி நாடாகவும் (மொத்த ஏற்றுமதிகளில் 1.6 சதவீதப் பங்கு) இந்தியா மிகப்பெரும் இறக்குமதி நாடாகவும் (மொத்த இறக்குமதியில் 8.5 சதவீதப்பங்கு) விளங்குகிறது.

2000ஆம் ஆண்டிலும் 1999இனைப்போன்று இலங்கை ஏற்றுமதிகளின் மிகப்பெரும் தனியொரு வாங்குனராக ஐக்கிய அமெரிக்காவே விளங்கியது. ஐக்கிய அமெரிக்காவின் சந்தைப் பங்கு (40 சதவீதம்) 1999இன் மட்டத்தில் மாற்றமின்றியிருந்தது. எனினும் 2000ஆம் ஆண்டில் ஐக்கிய அமெரிக்காவிற்கான மொத்த ஏற்றுமதிகள் 22 சதவீதத்தினால் அதிகரித்தன. ஐக்கிய அமெரிக்காவிற்கான மொத்த ஏற்றுமதிகளில் புடவை மற்றும் ஆடைகளின் ஏற்றுமதி 74 சதவீதத்திற்கு வகைகூறியதுடன் 26 சதவீதங் கொண்ட வளர்ச்சியைப் பதிவு செய்தது. இரண்டாவது பெரிய வாங்குனராக ஐக்கிய இராச்சியம் 13 சதவீதமான பங்குகைளப் பதிவு செய்ததுடன் சேர்மனியும் யப்பானும் முறையே மூன்றாவது நான்காவது பெரிய வாங்குனர்களாக விளங்கி ஒவ்வொன்றும் 4 சதவீதப் பங்கிற்கு வகைகூறின. ஐக்கிய இராச்சியத்திற்கு ஏற்றுமதி செய்யப்பட்ட பொருட்களில் ஆடைகள் 79 சதவீதத்திற்கு வகை கூறின. யப்பான் இலங்கையின் நண்டு வகைகள், பொறிகளின் உதிரிப்பாகங்கள், துணைப் பொருட்கள், தேயிலை, மீன் உற்பத்திகள், அருங்கற்கள் என்பனவற்றிற்கான முக்கிய சந்தையாக விளங்கியது. சேர்மனிக்கான மொத்த ஏற்றுமதிகளில் ஆடை மற்றும் தேயிலை என்பன முறையே 43 சதவீதத்திற்கும், 5 சதவீதத்திற்கும் வகைகூறின. சுதந்திர அரசுகளின் பொதுநலவாய நாடுகளுக்கான ஏற்றுமதிகள் 32 சதவீதத்தினால் அதிகரித்தமைக்கு ருசியாவிற்கான உயர்ந்த தேயிலை ஏற்றுமதியே காரணமாகும். ஒரு குழுவாக நோக்குகையில் மேற்கு கைத்தொழில் நாடுகள் 2000ஆம் ஆண்டிலும் இலங்கையின் மிகப்பெரும் வர்த்தகப் பங்காளராக விளங்கின.

2000ஆம் ஆண்டில் இலங்கைக்கான தனிப்பெரும் ஏற்றுமதியாளராக யப்பான் விளங்கி இலங்கையின் இறக்குமதிகளில் 9 சதவீதத்திற்கு வகைகூறியது. முக்கிய இறக்குமதிகளாக தனியார் உந்து ஊர்திகள் மற்றும் ஊர்திகள், மின் உருவாக்கிகள், உதிரிப்பாகங்கள் நெய்யப்பட்ட துணி என்பன விளங்கின. இரண்டாவது பெரிய ஏற்றுமதியாளரான இந்தியா 8.5 சதவீதத்திற்கு வகைகூறியதுடன் அதனைத் தொடர்ந்து கொங்கொங் சிங்கப்பூர், தென்கொரியா, தாய்வான், ஐக்கிய இராச்சியம் மற்றும் ஐக்கிய அமெரிக்கா என்பன விளங்கின. யப்பானிலிருந்தான இறக்குமதிகள் 15 சதவீதத்தினால் உயர்வடைந்தமைக்கு 34 மின் உருவாக்கிகள் மற்றும் உந்து ஊர்திகள் என்பனவே காரணமாகும். இந்தியா மற்றும் கொங்கொங்கிலிருந்தான இறக்குமதிகள் முறையே 17 சதவீதத்தினாலும், 12 சதவீதத்தினாலும் அதிகரித்தன. மருந்தாக்கற் பொருட்கள், பருப்பு, மிளகாய், பெரிய வெங்காயம் ஆகிய உணவுப்பொருட்கள் ஆட்டோ முச்சில்லு வண்டிகள், புடவைகள் என்பன இந்தியாவிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட முக்கிய வகைகளுக்குள் அடங்கும். ஆடைத் தொழிலுக்கான துணிவகை மற்றும் துணைப் பொருட்கள் கொங் கொங்கிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட முக்கிய விடயங்களுக்குள் அடங்கும். பெற்றோலிய வாயுக்கள், தையற் பொறிகள், தொலைபேசிக் கருவிகள், கோதுமை, தரவு செய்முறைப்படுத்தல் எந்திரங்கள் மற்றும் அவற்றின் பாகங்கள் என்பன சிங்கப்பூரிலிருந்தான இறக்குமதிகளில் அடங்கிய முக்கிய விடயங்களாக இருந்தன.

அபிவிருத்தியடைந்துவரும் நாடுகளிடையே மத்திய கிழக்கு நாடுகளின் சந்தைப் பங்கு 1999இன் 6.2 சதவீதத்திலிருந்து 2000ஆம் ஆண்டில் 8.6 சதவீதத்திற்கு அதிகரித்தது. ஆசிய நாடுகளின் சந்தைப் பங்குகள் 1999இன் 52 சதவீதத்திலிருந்து 2000ஆம் ஆண்டில் 48 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தன. எனினும் இந்தியா மற்றும் கிழக்காசிய நாடுகளிலிருந்தான உயர்ந்த இறக்குமதிகளின் விளைவாக ஆசிய நாடுகளிலிருந்தான இறக்குமதிகள் 14 சதவீதத்தினால் அதிகரித்தன. மத்திய கிழக்கு நாடுகளிலிருந்தான இறக்குமதிகள் 72 சதவீதத்தினால் அதிகரித்தமைக்கு ஈரானிலிருந்தான பெற்றோலிய உற்பத்தி இறக்குமதிகளின் உயர்ந்த செலவே காரணமாகும்.

9.4 பணிகள் மற்றும் வருமானம்

போக்குவரத்து மற்றும் பயணம் மீதான வெளிப்பாய்ச்சல்கள் அதிகரித்தமையின் காரணமாக, 2000ஆம் ஆண்டில் பணிகள் கணக்கினது மிகையில் குறிப்பிடத்தக்களவு வீழ்ச்சியொன்று எடுத்துக்க ாட்டப்பட்டிருந்தது. பணிகள் கணக்கினது தேறிய மிகை, 1999இன் ஐ.அ.டொலர் 147 மில்லியனிலிருந்து 2000ஆம் ஆண்டில் ஐ.அ.டொலர் 38 மில்லியனுக்கு வீழ்ச்சியடைந்தது. இவ் வீழ்ச்சியானது போக்குவரத்துப் பணிகளிலிருந்தான தேறிய வரவுகள் மற்றும் தேறிய பயண வரவுகள் ஆகியவற்றிலேற்பட்ட வீழ்ச்சிகளின் விளைவாகும். பணிகளின் வரவுகள் 1 சதவீதத்தினால் சிறிதளவு வீழ்ச்சியடைந்தமைக்கு இவ்வாண்டில் சுற்றுலா வருகைகளில் ஏற்பட்ட வீழ்ச்சிக்குச் சமமாக பயண வரவுகளில் ஏற்பட்ட 8.3 சதவீத வீழ்ச்சியினதும், கப்பற் கட்டணம் மற்றும் காப்புறுதிப் பணிகளின் வரவுகள் ஆகியவற்றிலேற்பட்ட அதிகரிப்புக்களினால் ஓரளவுக்கு எதிரீடு செய்யப்பட்ட கப்பலுக்கு மாற்றியேற்றலின் 2.3 சதவீத வீழ்ச்சியினதும் இணைந்த விளைவே காரணமாகும். பணிகளின் கொடுப்பனவுகள் 12 சதவீத அதிகரிப்பினைப் பதிவுசெய்து போக்குவரத்துக் கொடுப்பனவுகளின் 19 சதவீத அதிகரிப்பையும், பயணக் கொடுப்பனவுகளின் 11 சதவீதத்திலான அதிகரிப்புக்களையும் பிரதிபலித்தன. போக்கு வரத்துக்கான கொடுப்பனவுகளிலேற்பட்ட அதிகரிப்பு, பயணக் கட்டணங்கள், கப்பற்படுத்தல் பணிகள் மற்றும்

அட்டவணை 9.6
தேறிய பணிகளும் வருமானமும் மாற்றல்களும் (அ)

விடயம்	ஐ.அ.டொ.மில்லியன்		ரூபா மில்லியன்	
	1999	2000 (ஆ)	1999	2000 (ஆ)
1. போக்குவரத்து	122	69	8,569	5,237
2. பயணம்	55	8	3,888	553
3. காப்புறுதிப் பணிகள்	17	19	1,206	1,438
4. ஏனைய வியாபாரப் பணிகள்	-47	-51	-3,282	-3,841
5. அரச செலவினம் வே.எ.கு.	-	-6	-38	-479
மொத்தப் பணிகள்	147	38	10,342	2,907
1. ஊழியர்களின் இழப்பீடு	-2	-2	-112	-159
2. நேரடி முதலீடு	-109	-108	-7,693	-8,188
3. வட்டியும் ஏனைய கட்டணங்களும்(இ)	-143	-194	-10,025	-14,620
மொத்த வருமானம்	-254	-304	-17,831	-22,967
1. தனியார் (ஈ)	887	974	62,472	73,620
2. பொது அரசு	26	25	1,816	1,855
மொத்த நடைமுறை மாற்றல்கள்	913	999	64,288	75,475

மூலம்: இலங்கை மத்திய வங்கி.

(அ) இவ்விளக்கம் ப.நா.நிதியத்தின் சென்மதி நிலுவை கையேட்டின் 5ம் பதிப்புடன் (1993) சாத்தியமான அளவுக்கு இணங்கிச் செல்கின்றது.

(ஆ) தற்காலிகமானவை.

(இ) 1994இலிருந்து சென்மதி நிலுவைப் புள்ளிவிபரங்களை திரட்டும்போது வெளிநாட்டு நாணய வங்கித் தொழில் பிரிவுகள் உள்நாட்டு வங்கித் தொழில் முறையின் பகுதியொன்றாக கருதப்படுகின்றது. இதன்படி சென்மதி நிலுவைப் புள்ளி விபரங்களைத் திரட்டும் வெ.நா.வ.பிரிவுகளும் இலங்கையில் வதிவற்றவர்களும் சம்பந்தப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் கணக்கில் சேர்த்துக் கொள்ளப்படும் வேளையில் வெ.நா.வ.தொ. பிரிவுகளும் வதிவுள்ளோரும் சம்பந்தப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் நீக்கப்படுகின்றன.

(ஈ) 1990இல் வளைகுடா யுத்தத்தின் காரணமாக குவைத்தில் வேலைவாய்ப்பை இழந்த இலங்கையருக்கு 1999,2000 ஆகிய ஆண்டுகளில் முறையே 37,343,29,323 இலங்கையர்களால் பெற்றுக்கொள்ளப்பட்ட ஐ.அ.டொலர் 85 மில்லியன் ஐ.அ.டொலர் 45 மில்லியன் இழப்பீட்டை உள்ளடக்குகின்றது. மேலும் 1999இல் 18,244 இலங்கையர்களால் இரண்டாம் சுற்றுக் கொடுப்பனவுகளாக ஆளொருவருக்கு ஐ.அ.டொலர் 1,500 அடிப்படையில் ஐ.அ.டொலர் 27 மில்லியன் பெற்றுக் கொள்ளப்பட்டது.

ஏனைய துறைமுகத்தோடு தொடர்புடைய செலவுகள் ஆகியவற்றின் நியதிகளிலான செலவுகளில் பிரதிபலிக்கப்பட்டது. அதேவேளையில் ஏனைய வியாபாரப் பணிகளின் பேரிலான தேறிய வெளிப்பாய்ச்சல்கள் ஐ.அ.டொலர்கள் 47 மில்லியனிலிருந்து ஐ.அ.டொலர் 51 மில்லியனுக்கு அதிகரித்தன.

வருமானக் கணக்கிலான பற்றாக்குறையானது 2000ஆம் ஆண்டில் 20 சதவீதத்தால் மேலும் விரிவாக்கப்பட்டு ஐ.அ.டொலர் 304 மில்லியனை அடைந்ததுடன், மிகவும் குறைக்கப்பட்ட வெளிநாட்டு ஒதுக்கு இருப்பின் மீதான வட்டி வருமானத்திலேற்பட்ட வீழ்ச்சி மற்றும் உயர் வட்டி வீதங்களிலிருந்து எழும் வட்டிக் கொடுப்பனவுகளிலான அதிகரிப்பு ஆகிய இரண்டினையும் பிரதிபலித்தது. வெளிநாட்டுச் செலாவணி ஒதுக்குகள் மீதான முதலீட்டு வருமான வரவுகள் 10 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்து ஐ.அ.டொலர் 137 மில்லியனாக விளங்கிய வேளையில், வெளிநாட்டுப் பொறுப்புக்கள் மீதான வட்டிக் கொடுப்பனவுகள் ஆய்வின் கீழான காலப்பகுதியில் 12 சதவீதத்தால் அதிகரித்தன. அதேவேளையில், இலாபங்கள் மற்றும் பங்கிலாபக் கொடுப்பனவுகளின் பேரிலான தேறிய வெளிப்பாய்ச்சல்கள் சிறிதளவால் வீழ்ச்சியடைந்து ஐ.அ.டொலர் 108 மில்லியனையடைந்தன.

9.5 நடைமுறை மாற்றல்கள்

அலுவல்சார் நடைமுறை மாற்றல்களில் 5 சதவீதத்தால் வீழ்ச்சியொன்று காணப்பட்டு ஐ.அ.டொலர்கள் 25 மில்லியனாக விளங்கியபோதிலும், தேறிய நடைமுறை மாற்றல்கள் 9 சதவீதத்தினால் அதிகரித்து ஐ.அ.டொலர் 999 மில்லியனாக விளங்கியமைக்கு இவ்வாண்டில் தனியார் நடைமுறை மாற்றல்களில் காணப்பட்ட 10 சதவீத அதிகரிப்பே காரணமாகும். வளைகுடாப் பிரதேசத்திலுள்ள இலங்கைத் தொழிலாளர்களின் பணவனுப்பல்களை முக்கியமாக உள்ளடக்கிய தனியார் மாற்றல் வரவுகள், வளைகுடா யுத்த காலப்பகுதியில் இடம்பெயர்ந்த இலங்கைத் தொழிலாளர்களினால் பெறப்பட்ட ஐ.அ.டொலர் 45 மில்லியன் கொண்ட இழப்பீட்டுக் கொடுப்பனவுகளினால் அதிகரிப்பைப் பெற்றிருந்தன. இவ்விழப்பீட்டுக் கொடுப்பனவுகள் தவிர்ந்த, 1999இலும் 2000ஆம் ஆண்டிலுமான தனியார் மாற்றல் வரவுகள் 18 சதவீத்தால் ஐ.அ.டொலர் 944 மில்லியனிலிருந்து அதிகரித்து ஐ.அ.டொலர் 1,115 மில்லியனாக விளங்கின. வெளிநாட்டு நாணய வைப்புக்களுக்கான அதிகரித்த உள்நாட்டு வட்டிவீதங்கள், கவர்ச்சிகரமானதொரு செலாவணி வீதம் மற்றும் உயர்வான எண்ணெய் விலைகளினால் மத்திய கிழக்கிலுள்ள நாடுகளுக்குக் கிடைக்கப்பெறும் அதிகளவு வருமானம் ஆகியன இவ்வாண்டில் தனியார் பணவனுப்பல்களில் அதிகரிப்பை ஏற்படுத்தியிருக்கலாம். தேறிய தனியார் மாற்றல் வரவுகள், 2000ஆம் ஆண்டில் பொருட்கள் பணிகள் மற்றும் வருமானக் கணக்கிலான குறையின் 47 சதவீதத்தை நிதியிடப் போதியதாகக் காணப்பட்டதுடன் 1999இன் 60 சதவீதத்திலிருந்து வீழ்ச்சியடைந்ததாகவும் காணப்படுகின்றது. உணவு மற்றும் பண்டக் கொடைகளை உள்ளடக்கிய அலுவல்சார் நடைமுறை மாற்றல்களின் தேறிய உட்பாய்ச்சல்கள் தொடர்ச்சியாக வீழ்ச்சியடைந்து, முன்னைய ஆண்டின் ஐ.அ.டொலர் 26 மில்லியனுக்கெதிராக 2000ஆம் ஆண்டில் ஐ.அ.டொலர் 25 மில்லியனாக விளங்கின.

9.6 மூலதன அசைவுகள்

ஆசிய நிதியியல் நெருக்கடிகளின் பின்பு சந்தை உறுதிப்பாடு மற்றும் முதலீட்டாளர் நம்பிக்கைத் தன்மை ஆகியவற்றை மீண்டும் கட்டியெழுப்பியமையினால் எழுச்சிபெறும் சந்தைப் பொருளாதாரங்களுக்கான மூலதனப் பாய்ச்சல்கள் மீட்டெழுச்சியொன்றை எடுத்துக் காட்டின. எனினும், இலங்கை இவ்வாண்டில் தனியார் வெளிநாட்டு மூலதன உட்பாய்ச்சல்களிலான வீழ்ச்சியில் பிரதிபலிக்கப்பட்டவாறு, பன்னாட்டு மூலதனச் சந்தைகளில் காணப்பட்ட இச் சாதகமான முன்னேற்றங்களிலிருந்தும் நன்மையடையத் தவறிவிட்டது. தேறிய மூலதன மற்றும் நிதியியல் உட்பாய்ச்சல்கள் 2000ஆம் ஆண்டில் 1999இன் ஐ.அ.டொலர் 373 மில்லியனிலிருந்து ஐ.அ.டொலர் 568 மில்லியனுக்கு அதிகரித்திருந்தன. அரசுக்கான தேறிய நீண்டகால மூலதன உட்பாய்ச்சல்கள் அதிகரித்ததுடன், தேறிய குறுங்கால மூலதனப் பாய்ச்சல்கள் 1999இன் ஐ.அ.டொலர் 142 மில்லியன்கொண்ட வெளிப் பாய்ச்சல்களிலிருந்து 2000ஆம் ஆண்டில் ஐ.அ.டொலர் 88 மில்லியன்கொண்ட உட் பாய்ச்சலுக்கான மாற்றமொன்றை அடைந்தன. எனினும், அதிகரித்த மூலதனப் பாய்ச்சல்கள், அதிகளவிலான வர்த்தகக் குறையினால் ஏற்படும் பெருமளவு நடைமுறைக் கணக்குக் குறையினை உள்ளடக்கப் போதியதாகக் காணப்படவில்லை. இதன்விளைவாக, சென்மதி நிலுவையின் மொத்த நிலுவையானது 1999இன் ஐ.அ.டொலர் 263 மில்லியன்கொண்ட (மொ.உ.உ.இன் 1.7 சதவீதம்) குறையுடனொப்பிடுகையில், 2000ஆம் ஆண்டில் ஐ.அ.டொலர் 516 மில்லியன் கொண்ட (மொ.உ.உ.இன் 3.1 சதவீதம்) குறையொன்றாகக் காணப்பட்டது.

மூலதன மாற்றல்கள்

இவ்வாண்டில் தேறிய மூலதன மாற்றல்கள் 36 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்து ஐ.அ.டொலர் 51 மில்லியனாக விளங்கியமைக்கு அலுவல்சார் செயற்றிட்டக் கொடைகளில் ஏற்பட்ட 41 சதவீதம்கொண்ட வீழ்ச்சியே காரணமாகும். அலுவல்சார் மொத்த மூலதன மாற்றல் வரவுகள் இவ்வாண்டில் ஐ.அ.டொலர் 46 மில்லியனாக விளங்கிய வேளையில் தனியார் மூலதன மாற்றல்கள் ஐ.அ.டொலர் 12 மில்லியனாக விளங்கியிருந்தன. கடந்த காலத்தைப் போலவே, யப்பான் இவ்வாண்டிலும் மொத்தக் கொடைகளில் 55 சதவீதத்திற்குப் பங்களிப்புச் செய்யும் முக்கிய கொடையாளியாகத் தொடர்ந்தும் விளங்கியது.

நீண்டகால மூலதனம்

மேம்பட்ட உலகளாவிய பொருளாதார மற்றும் நிதியியல் சூழல் மற்றும் தோற்றம் பெற்றுவரும் சந்தைப் பொருளாதாரங்களுக்கான அதிகரித்த மூலதனப் பாய்ச்சல்கள் ஆகியவற்றின் மத்தியிலும் இலங்கைக்கான தேறிய தனியார் நீண்டகால மூலதன உட்பாய்ச்சல்கள் 1999இன் ஐ.அ.டொலர் 373 மில்லியனிலிருந்து 2000ஆம் ஆண்டில் ஐ.அ.டொலர் 257 மில்லியனுக்கு வீழ்ச்சியடைந்தமைக்கு தனியார் துறையினரின் நீண்டகாலக் கடன்பாட்டிலேற்பட்ட வீழ்ச்சியே காரணமாகும். வெளிநாட்டு நேரடி முதலீட்டு உட்பாய்ச்சல்கள் 1999இன் ஐ.அ.டொலர் 201 மில்லியனிலிருந்து 2000இல் ஐ.அ.டொலர் 175 மில்லியனுக்கு வீழ்ச்சியடைந்தது.

வரைபடம் 9.5
மூலதனப் பாய்ச்சல்கள் (அ)



(அ) பகுப்பாய்வு, வடிவமைப்பு, சென்மதி நிலுவை கைநூல் 4இலிருந்து சென்மதி நிலுவை கைநூல்5இற்கு மாற்றமடைந்தமையின் காரணமாக முன்னர் குறைக் கணக்கில் உள்ளடக்கப்பட்டிருந்த தனியார் மற்றும் அரச மூலதன மாற்றல்கள் நீண்டகால மூலதனப் பாய்ச்சல்களாகப் பகுப்பாய்வு செய்யப்பட்டதுடன், முன்னர் நாணயத் துறையில் உள்ளடக்கப்பட்டிருந்த வர்த்தக வங்கிகளின் சொத்துக்களிலும் பொறுப்புக்களிலும் ஏற்பட்ட மாற்றங்கள் குறுங்கால மூலதனப் பாய்ச்சல்களாக வகைப்படுத்தப்பட்டுள்ளன.

(ஆ) 1994ஆம் ஆண்டின் தொடக்கத்திலிருந்து வெளிநாட்டு நாணய வங்கித் தொழில் பிரிவுகள் உள்நாட்டு வங்கித்தொழில் முறையின் ஒரு பகுதியாகக் கருதப்படுகின்றது.

தனியார் துறைக்கான நீண்டகால மூலதன உட்பாய்ச்சல்கள், இவ்வாண்டில் கொள்வனவு செய்யப்பட்ட மூன்று வானூர்திகளினதும் நிதியிடலுக்காக சிறிலங்கன் எயார் லைன்சினால் பெறப்பட்ட ஐ.அ.டொலர் 257 மில்லியன் கொண்ட கடன் மற்றும் அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபன வங்கியினால் அதன் சிறிய மற்றும் நடுத்தர தொழில் முயற்சிகள் செயற்றிட்டத்தை நிதியிடுவதற்காகப் பெறப்பட்ட ஐ.அ.டொலர் 4.5 மில்லியன் ஆகியவற்றை முக்கியமாக உள்ளடக்கியுள்ளன. மூன்று மேலதிக வானூர்திகளை இவ்வாண்டில் கொள்வனவு செய்தமையுடன் சிறிலங்கன் எயார்லைன்ஸ் தனது தற்போதைய மீளத் தொகுதியிடும் நிகழ்ச்சித் திட்டத்தை நிறைவு செய்திருந்தது. சிறிலங்கன் எயார் லைன்சின் ஐ.அ.டொலர் 129 மில்லியன் கொண்ட தீர்ப்பனவானது இவ்வாண்டில் தனியார் மூலதன வெளிப்பாய்ச்சல்களின் பெரும்பகுதிக்கு வகைகூறியது. 2000ஆம் ஆண்டில் ஐ.அ.டொலர் 175 மில்லியனாக விளங்கிய வெளிநாட்டு நேரடி முதலீட்டு உட்பாய்ச்சல்கள் 2000இல் 13 சதவீதத்தால்

குறைவடைந்து காணப்பட்டன. வெளிநாட்டு நேரடி முதலீட்டு உட்பாய்ச்சல்களினால் இவ்வாண்டில் நன்மையடைந்த முக்கிய துறைகளாக வலு (78 சதவீதம்), ஆடைகள் (11 சதவீதம்), துறைமுகப் பணிகள் (5 சதவீதம்), தொலைத் தொடர்பூட்டல் (2 சதவீதம்) மற்றும் நலப் பணிகள் (2 சதவீதம்) ஆகியன விளங்கியிருந்தன. அதேவேளையில் வெளிநாட்டு நேரடி முதலீட்டு வெளிப்பாய்ச்சல்கள் மாலைதீவிலுள்ள ஆடைத் தொழிற்சாலையில் இலங்கையில் வதியும் தொழில்முயற்சியாளர் ஒருவரினால் முதலீடு செய்யப்பட்ட ஐ.அ.டொலர் 2 மில்லியனாகக் காணப்பட்டன. இவ்வாண்டுக் காலத்தில் தனியார் மயமாக்கல் பெறுகைகளின் நியதிகளில் வெளிநாட்டு உட்பாய்ச்சல் ஐ.அ.டொலர் 3 மில்லியனாக மட்டும் காணப்பட்டது. தற்போது நிலவும் நிச்சயமற்ற அரசியல் மற்றும் பொருளாதாரச் சூழல், தொலைத் தொடர்பூட்டல் துறையிலான உரிமைமாற்றலுக்கு பன்னாட்டுச் சூழல் உகந்ததாக அமையாமை ஆகியவற்றின நோக்கில் தனியார் மயப்படுத்தல் நிகழ்ச்சித் திட்டம் 2001இற்குப் பிற்போடப்பட்டது.

அரசுக்கான நீண்டகாலக் கடன் மூலதன உட்பாய்ச்சல்கள் 26 சதவீதத்தால் அதிகரித்து ஐ.அ.டொலர் 479 மில்லியனாக விளங்கியது. இது பாதுகாப்புத் தொடர்பான இறக்குமதிகளின் பேரிலான நீண்டகால வழங்குநர்களின் கொடுகடன்களை உள்ளடக்கியுள்ளன. இவ் வழங்குநர் கொடுகடன்களைத் தவிர்த்து அரசுக்கான நீண்டகாலக் கடன் மூலதனம் 2000ஆம் ஆண்டில் ஒரு சதவீதம்கொண்ட சிறிதளவான வளர்ச்சியொன்றைப் பிரதிபலித்தது. செயற்றிட்டங்களோடு தொடர்புடைய கடன் பகிர்ந்தளிப்புக்களில் காணப்பட்ட மெதுவான வளர்ச்சியானது, செயற்றிட்ட நடைமுறைப்படுத்தலில் தற்காலிக தாமதங்களையும் ஏற்படுத்திய தேர்தல் ஆண்டில் நிலவிய நிச்சயமற்ற சூழல், வெளிநாட்டு உதவியைப் பயன்படுத்துவதில் தாமதங்கள், அலுவல்சார் அபிவிருத்தி உதவியினது உட்பாய்ச்சலில் காணப்பட்ட பொதுவான வீழ்ச்சி போன்ற காரணிகளின் தொகுதியொன்றினாலேயே ஏற்பட்டதாகும். இவ்வாண்டில் வழங்கப்பட்ட சலுகையடிப்படையிலான உதவிகளில் பெரும்பங்கு, வலு உருவாக்கம், தொலைத் தொடர்பூட்டல், பெருந்தோட்டங்கள், நீர்ப்பாசனம், கல்வி மற்றும் உட்கட்டமைப்பு அபிவிருத்தி ஆகியவற்றுக்கே வழங்கப்பட்டிருந்தன. பல்புடை முகவர் நிலையங்களினால் இவ்வாண்டில் நிதியிடப்பட்ட முக்கியமான செயற்றிட்டங்களாவன: இரண்டாவது வலு முறைகளின் விரிவாக்கச் செயற்றிட்டம் (ஐ.அ.டொலர் 18 மில்லியன்), பெருந்தோட்ட மீளமைப்புச் செயற்றிட்டம் (ஐ.அ.டொலர் 11 மில்லியன்), ஆசிய அபிவிருத்தி வங்கியினால் நிதியிடப்பட்ட பெற்றோலிய வசதிகளின் அவசர மறுசீரமைப்பு (ஐ.அ.டொலர் 9 மில்லியன்), ஆசிரியர் கல்வி மற்றும் ஆசிரியர்களுக்கான அபிவிருத்திச் செயற்றிட்டம் (ஐ.அ.டொலர் 8 மில்லியன்) மற்றும் பன்னாட்டு அபிவிருத்தியமைப்பினால் நிதியிடப்பட்ட 2000ஆம் ஆண்டுக்கான அவசர உதவிச் செயற்றிட்டம் (ஐ.அ.டொலர் 5 மில்லியன்) என்பனவாகும். அதேவேளையில் முக்கியமான இருபுடை உதவி வழங்குநராகிய யப்பானின் செயற்றிட்ட நிதியிடலானது, பிரதேச தொலைத் தொடர்பூட்டல் அபிவிருத்திச் செயற்றிட்டம் (ஐ.அ.டொலர் 22 மில்லியன்), களனிதிஸ்ஸ இணைந்த சுற்றோட்ட வலுப்பொறிச் செயற்றிட்டம் (ஐ.அ.டொலர் 21 மில்லியன்) கொழும்பு பெரும்பாகத்துக்கான தொலைத் தொடர்பூட்டல் வலையமைப்பு விரிவாக்கச் செயற்றிட்டம் (ஐ.அ.டொலர் 20 மில்லியன்) மற்றும் மகாவலி முறை 'சீ' தரமுயர்த்தல் செயற்றிட்டம் (ஐ.அ.டொலர் 11 மில்லியன்) ஆகியவற்றை உள்ளடக்கியுள்ளது. மூலதன மீளக் கொடுப்பனவுகளின் பேரிலான மொத்த வெளிப்பாய்ச்சல்கள் 1999இன் ஐ.அ.டொலர் 319 மில்லியனிலிருந்து 2000இல் ஐ.அ.டொலர் 308 மில்லியனுக்கு வீழ்ச்சியடைந்தன. கடன்மீளக் கொடுப்பனவுகள், 1997இல் வெளியிடப்பட்ட ஐ.அ.டொலர் 50 மில்லியன்கொண்ட மிதக்கும் வீத நாணயத்தாள்களின் எஞ்சிய தொகையான ஐ.அ.டொலர் 16 மில்லியன் கொடுப்பனவை உள்ளடக்கியுள்ளன. மொத்தத்தில் அரசுக்கான தேறிய நீண்டகால மூலதன உட்பாய்ச்சல்கள் 1999இன் ஐ.அ.டொலர் 62 மில்லியனிலிருந்து 2000ஆம் ஆண்டில் ஐ.அ.டொலர் 171 மில்லியனுக்கு அதிகரித்தன.

ஆசிய அபிவிருத்தி வங்கியும் பன்னாட்டு அபிவிருத்தியமைப்பும் 2000ஆம் ஆண்டில் முக்கியமான பல்புடை உதவிவழங்கும் முகவர் நிலையங்களாகத் தொடர்ந்தும் விளங்கி சலுகை அடிப்படையிலான செயற்றிட்டத் தொடர்புடைய கடன் வழங்கலின்கீழ் முறையே ஐ.அ.டொலர் 74 மில்லியன் மற்றும் ஐ.அ.டொலர் 47 மில்லியனை வழங்கின. அதேவேளையில், யப்பான் தொடர்ந்தும் முக்கிய இருபுடை உதவி வழங்கும் நாடாக விளங்கி, இவ்வாண்டில் ஐ.அ.டொலர் 182 மில்லியன் கொண்ட செயற்றிட்ட உதவியை வழங்கியது. மொத்தச் சலுகையடிப்படையிலான உதவியின் 52 சதவீதத்திற்கு யப்பான் வகைகூறிய வேளையில் ஆசிய அபிவிருத்தி வங்கி மற்றும் பன்னாட்டு அபிவீருத்தியமைப்பு ஆகியன இவ்வாண்டில் முறையே 21 சதவீதத்துக்கும் 13 சதவீதத்திற்கும் வகைகூறின.

குறுங்கால மூலதனம்

மொத்த தேறிய குறுங்கால தனியார் மூலதனப் பாய்ச்சல்கள், 1999இன் ஐ.அ.டொலர் 142 மில்லியன் கொண்ட தேறிய வெளிப்பாய்ச்சலிலிருந்து 2000ஆம்

ஆண்டில் ஐ.அ.டொலர் 88 மில்லியன் கொண்ட தேறிய உட்பாய்ச்சலுக்கு குறிப்பிடத்தக்களவில் அதிகரித்தமைக்கு வர்த்தக வங்கிகளின் வெளிநாட்டுப் பொறுப்புக்களிலேற்பட்ட அதிகரிப்பு மற்றும் தனியார் குறுங்கால வர்த்தகக் கொடுகடன்களிலேற்பட்ட அதிகரிப்பு ஆகியனவே காரணமாகும்.

உள்நாட்டு பொருளாதாரத்தின் நிச்சயமற்ற தன்மைகள் மற்றும் அதிகரித்துச் செல்கின்ற உலகளாவிய வட்டி வீதங்களுக்கு மத்தியிலும், கொழும்புப் பங்குச் சந்தையில் வெளிநாட்டு விற்பனை தொடர்ந்தும் காணப்பட்டது. சொத்துப் பட்டியல் முதலீட்டு உட்பாய்ச்சல்கள் 1999இன் ஐ.அ.டொலர் 72 மில்லியனிலிருந்து 2000ஆம் ஆண்டில் ஐ.அ.டொலர் 19 மில்லியனுக்கு குறிப்பிடத்தக்களவில் வீழ்ச்சியடைந்த வேளையில் முதலீட்டு வெளிப்பாய்ச்சல்கள் குறைந்தளவு வேகத்தில் 1999இன் ஐ.அ.டொலர் 85 மில்லியனிலிருந்து 2000ஆம் ஆண்டில் ஐ.அ.டொலர் 64 மில்லியனுக்கு வீழ்ச்சியடைந்தமையின், 2000ஆம் ஆண்டில் பங்குச் சந்தையினூடாக ஐ.அ.டொலர் 45 மில்லியன் கொண்ட தேறிய வெளிப்பாய்ச்சல் காணப்பட்டது. தனியார் துறைக்கான குறுங்கால மூலதனப் பாய்ச்சல்கள் 1999இன் ஐ.அ.டொலர் 10 மில்லியன் கொண்ட தேறிய வெளிப்பாய்ச்சலிலிருந்து ஐ.அ.டொலர் 100 மில்லியன் கொண்ட தேறிய உட்பாய்ச்சலுக்கு அதிகரித்து இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தினாலும், ஏனைய முதலீட்டுச் சபையல்லாத் தொழில் முயற்சிகளினாலும் பெறப்பட்ட அதிகரித்த வர்த்தகக் கொடுகடன்களைப் பிரதிபலித்தன.

வர்த்தக வங்கிகளின் வெளிநாட்டுப் பொறுப்புக்கள் ஐ.அ.டொலர் 174 மில்லியனினால் அதிகரித்தமைக்கு அரசுக்கான வெளிநாட்டு நாணயக் கடனாக இலங்கை வங்கியினால் திரட்டப்பட்ட ஐ.அ.டொலர் 100 மில்லியன் கொண்ட கூட்டுக் கடனொன்றை உள்ளடக்கி வெளிநாட்டிலுள்ள வங்கிகளிடமிருந்து வெளிநாட்டு நாணய வங்கித் தொழில் பிரிவுகளினால் பெறப்பட்ட கடன்பாடுகளில் ஏற்பட்ட அதிகரிப்பு காரணமாக விளங்கிய வேளையில் சொத்துக்கள் ஐ.அ.டொலர் 141 மில்லியனால் அதிகரித்து, உள்நாட்டு வங்கித் தொழில் பிரிவுகளினால் வெளிநாட்டிலுள்ள வங்கிகளில் இடப்பட்ட வைப்புக்களில் ஏற்பட்ட அதிகரிப்பைப் பிரதிபலித்தன. இதன்விளைவாக, வர்த்தக வங்கிகளின் தேறிய வெளிநாட்டுச் சொத்துக்கள் 2000ஆம் ஆண்டில் ஐ.அ.டொலர் 33 மில்லியனால் வீழ்ச்சியடைந்திருந்தன.

9.7 வெளிநாட்டுச் செலாவணிச் சந்தை நிகழ்வுகள்

இவ்வாண்டில் முக்கிய பன்னாட்டு நாணயங்களில் சிறிது அடிக்கடி மாறுபடு தன்மை காணப்படுகின்ற போதும் பன்னாட்டு வெளிநாட்டு செலாவணிச் சந்தைகள் ஆண்டு முழுவதும் சார்பு ரீதியில் தொடர்ந்து நிலையாக விளங்கி, பல பொருளாதாரங்களில் முன்னேற்றம் கண்ட பேரண்டப் பொருளாதார உறுதிப்பாட்டைப் பிரதிபலித்தது. ஐக்கிய அமெரிக்க நாடுகளில் காணப்பட்ட தொடர்ச்சியான கவர்ச்சிகரமான வளர்ச்சி 2000ஆம் ஆண்டில் அனைத்து முக்கிய நாணயங்களுக்கெதிராக டொலரை வலுப்படுத்தியது. யப்பானிய பொருளாதார மீட்சி பற்றிய நம்பிக்கையீனத்திற்கு மத்தியில் ஐக்கிய அமெரிக்க டொலருக்கெதிராக யப்பானிய யென் 11 சதவீதத்தால் பெறுமானத் தேய்வடைந்தது. டொலருக்கெதிராக யூரோ, ஆண்டிறுதியை நோக்கிய மீட்சியுடன், இவ்வாண்டின் பெரும் பகுதியில் 7.7 சதவீதம் கொண்ட ஆண்டுப் பெறுமானத் தேய்வினைக் கொண்டிருந்தது. இசுடேர்லிங் பவுண் இவ்வாண்டில் 7.9 சதவீதத்தால் பெறுமானத் தேய்வடைந்திருக்கையில் இந்திய ரூபா 6.8 சதவீதத்தால் பெறுமானத் தேய்வடைந்தது. சிங்கப்பூர் டொலர் ஆண்டு முழுவதிலும் சார்பு ரீதியில் உறுதியாக விளங்கி 3.9 சதவீதம்கொண்ட பெறுமானத் தேய்வைக் கொண்டிருந்தது. கொரியா வொன் மற்றும் தாய்லாந்து பாத் என்பன முறையே 10.0 சதவீதத்தாலும் 13.5 சதவீதத்தாலும் பெறுமானம் தேய்வடைந்ததுடன், ஆண்டின் பிற்பகுதியை நோக்கி விரைவான வீதமொன்றில் பெறுமானத் தேய்வடைந்தன. இதேவேளை, இந்தோனேசியா மற்றும் பிலிப்பைன்சில் நிலவும் பொருளாதார மற்றும் அரசியல் நிச்சயமற்ற தன்மைகள் ரூப்பியாவிலும் பெசோவிலும் முறையே 26.1 சதவீதம், 19.6 சதவீதம் கொண்ட விரைவான பெறுமானத் தேய்வை விளைவித்தன. மலேசியா அதன் நிலையான வெளிநாட்டு செலாவணி வீத கொள்கையை ஆண்டு முழுவதிலும் தொடர்ந்தது.

அதிகரித்துவரும் சென்மதி நிலுவைப் பற்றாக்குறை மற்றும் அதனைச் செலுத்துவதற்கான வெளிநாட்டு ஒதுக்குகள் போதாமலும் காணப்பட்டமையானது, இவ்வாண்டில் இலங்கை ரூபா மீது பெரும் அழுத்தத்தை ஏற்படுத்தியது. இதற்கு இசைவாக விசேடமாக இவ்வாண்டின் பிற்பகுதியில் செலாவணி வீதங்களை நிர்ணயிப்பதில் சந்தைக்கு பெருமளவு வாய்ப்பை வழங்குவதன்மூலம் வெளிநாட்டு செலாவணிச் சந்தையிலான அழுத்தத்தை விடுவிப்பதற்கு செலாவணி வீத வீச்சில் அடிக்கடி சீராக்கங்கள் மேற்கொள்ளப்பட்டன.

உட்கிடை நடுவீதத்தில் 4 சதவீத பெறுமானத் தேய்வுடன் மத்திய வங்கியின் கொள்வனவு மற்றும் விற்பனை வீதங்களுக்கிடையேயான வீச்சு 2000 யூன் 20இல் 2 சதவீதத்திலிருந்து 5 சதவீதத்திற்கு விரிவாக்கப்பட்டது. (மேலதிக தகவல்களுக்கு சிறப்புக் குறிப்பு 8 இனைப் பார்க்கவும்.) பரந்த வீச்சானது பெருமளவு நெகிழச்சியான சூழல் ஒன்றில் செலாவணி வீதத்தினைத் தீர்மானிப்பதற்கு சந்தையை அனுமதிக்கும்

வரைபடம் 9.6
பயன்தரு செலாவணி வீத சுட்டெண்கள்



என எதிர்பார்க்கப்பட்டிருக்கையில், இவ் வீச்சின் நிலையான தன்மையானது, புதிய முறை அறிமுகப்படுத்தப்பட்ட பின்னரான ஆரம்ப நிலையிலாவது செலாவணிச் சந்தையில் உறுதிப்பாட்டைக் கொண்டுவரும் என எதிர்பார்க்கப்பட்டது. மேலும் ஒரு சதவீதப் புள்ளியால் 5 சதவீதத்திலிருந்து 6 சதவீதத்திற்கு நகரும் வீச்சின் மீள் அறிமுகப்படுத்தலுடன் விரிவாக்கப்படும்வரை அவ்வீச்சு 2000ஆம் ஆண்டு நவெம்பர் 3 வரை தொடர்ந்தது. ரூபா மீது அதிகரித்துவரும் அழுத்தமானது திசெம்பர் 11இல் வீச்சை 6 சதவீதத்திலிருந்து 8 சதவீதத்திற்கு விரிவாக்குவதற்கு மத்திய வங்கியை கட்டாயப்படுத்தியது.

ஒவ்வொருமுறையும் வீச்சு விரிவாக்கப்படும் பொழுது ரூபா பெறுமானத் தேய்வடைந்தது. சந்தை வீதமானது சில நாட்களுக்குள்ளாகவே மத்திய வங்கியின் விற்பனை வீதத்தை அடைந்து செலாவணி வீத வீச்சினைப் பேணுவதற்கு உதவுவதற்காக விரைந்து வீழ்ச்சியடைந்த அதனது வெளிநாட்டு ஒதுக்குகளைப் பயன்படுத்துவதற்கு மத்திய வங்கி நிர்ப்பந்திக்கப்பட்டது. இவ் வீழ்ச்சியானது சென்மதி நிலுவையில் பாரிய பற்றாக்குறையும் ரூபா தொடர்ந்து வீழ்ச்சியடையுமென்ற சந்தை எதிர்பார்ப்பும் காணப்படும்போது தற்போது நிலவுகின்ற முகாமைப்படுத்தப்பட்ட மிதக்கும் செலாவணிவீத முறையைத் தொடர்ந்து பேணுவது நீண்ட காலத்தில் சாத்தியமற்றது என்பதனை வெளிக்காட்டியது.

மத்திய வங்கியால் வர்த்தக வங்கிகளுக்கு மேற்கொள்ளப்பட்ட வெளிநாட்டுச் செலாவணி விற்பனைகள் 1999இன் ஐ.அ.டொலர் 58.2 மில்லியனிலிருந்து ஐ.அ.டொலர் 303.6 மில்லியனுக்கு அதிகரித்தன. இந்த மொத்தத்தில், ஐ.அ.டொலர் 195.1 மில்லியன் 2000ஆம் ஆண்டின் இரண்டாம் அரைப்பகுதியில் விற்பனை செய்யப்பட்டது. வர்த்தக வங்கிகளிலிருந்து மத்திய வங்கியினால் மேற்கொள்ளப்பட்ட கொள்வனவுகள் 1999இன் ஐ.அ.டொலர் 0.4 மில்லியனிலிருந்து 2000ஆம் ஆண்டில் ஐ.அ.டொலர் 2.0 மில்லியனுக்கு சிறிதளவால் அதிகரித்தன. வங்கிகளுக்கிடையேயான உடன் நாணைய மற்றும் காசுக் கொடுக்கல் வாங்கல்களின் புரழ்வு 1999இன் ஐ.அ.டொலர் 1,933.2 மில்லியனுடன் ஒப்பிடுகையில் 2000ஆம் ஆண்டில் ஐ.அ.டொலர் 2,259.4 மில்லியனாக விளங்கியது.

மத்திய வங்கியின் நடுவீத மாற்றத்தால் (வங்கிகளுக்கிடையேயான வெளிநாட்டுச் செலாவணிவீத சந்தை சராசரி செலாவணி வீதத்தால் கணிக்கப்பட்ட 12.5 சதவீதம்) அளவிடப்பட்டவாறு பொதுவாக இலங்கை ரூபா ஐக்கிய அமெரிக்க டொலருக்கு எதிராக 1999இன் 6 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 2000ஆம் ஆண்டில் 9.9 சதவீதம்கொண்ட விரைவான வீதத்தில் பெறுமானம் தேய்வடைந்தது. இது இந்திய ரூபாவிற்கெதிராகவும் (3.3 சதவீதம்), யூரோவிற்கெதிராகவும் (2.4 சதவீதம்) மற்றும் இசுடேர்லிங் பவுணுக்கெதிராகவும் (2.2 சதவீதம்) பெறுமான வீழ்ச்சியடைந்தது. எனினும், குறுக்கு வீதங்களில் ஏற்பட்ட மாற்றங்கள் காரணமாக யப்பானிய யென்னிற்கெதிராக ரூபா 1.2 சதவீத பெறுமதி அதிகரிப்பினைக் கொண்டிருந்தது. சிஎஉ கணக்கின் கூட்டு அலகுக்கெதிராக 2000ஆம் ஆண்டில் ரூபா, 1 சதவீதத்தால் பெறுமானத் தேய்வடைந்தது. இதேவேளை வாடிக்கையாளர்களுடனான கொடுக்கல் வாங்கல்களுக்கான வர்த்தக வங்கிகளின் ஐ.அ.டொலருக்கு எதிரான கொள்வனவுச் செலாவணி வீதம் 2000ஆம் ஆண்டில் 7.3 சதவீதத்தால் பெறுமானத் தேய்வடைந்த வேளையில் விற்பனை வீதம் 12.4 சதவீதத்தால் பெறுமானத் தேய்வடைந்தது.

செலாவணிச் சந்தையின் நிச்சயமற்ற தன்மை முன்னோக்கிய கொடுக்கல் வாங்கல்களில் பிரதிபலிக்கப்பட்டது. 2000ஆம் ஆண்டிலான முன்னோக்கிய கொடுக்கல் வாங்கல்களின் மொத்தம் 1999இன் ஐ.அ.டொலர் 458 மில்லியனுடன் ஒப்பிடுகையில், ஐ.அ.டொலர் 620.4 மில்லியனாக விளங்கியது. எனினும், ஆண்டின் இரண்டாம் அரைப்பகுதியில் முன்னோக்கிய கொடுக்கல் வாங்கல்கள் 1999இன் ஐ.அ.டொலர் 283.1 மில்லியனிலிருந்து ஐ.அ.டொலர் 244.6 மில்லியனுக்கு குறிப்பிடத்தக்களவில் வீழ்ச்சியடைந்தது. இரண்டாம் அரைப்பகுதியில் முன்னோக்கிய வீதத்தின் மிகையில் ஏற்பட்ட பெருமளவு அதிகரிப்பே இதற்கான முக்கிய காரணமாக விளங்கியது. பெருமளவு பெறுமானத் தேய்வுக்கான சந்தை எதிர்பார்ப்புக்களும் உள்நாட்டு வட்டிவீதங்களில் ஏற்பட்ட அதிகரிப்பும் மிகையினை அதிகரிக்கச் செய்தன. உடன் வீதத்தின் சதவீதமாக மாதத்திற்கான வீதத்தின் மிகை 1999இன் இறுதியிலான 4.32 சதவீதத்திலிருந்து 2000 யூன் இறுதியில் 9.3 சதவீதத்திற்கும் 2000ஆம் ஆண்டின் இறுதியில் 17.97 சதவீதத்திற்கும் அதிகரித்தது. இதேபோன்று மூன்று மாதத்திற்கான வீதத்தின் மிகை 7.17 சதவீதத்திலிருந்து 8.05 சதவீதத்திற்கும், 15.94 சதவீதத்திற்கும் அதிகரித்தது.

இருபத்து நான்கு நாணயக் தொகுதிக்கு எதிராக இலங்கை ரூபாவின் பெயரளவு பயன்தரு செலாவணி வீதம் 6.7 சதவீதத்தால் பெறுமானத் தேய்வடைந்தது. எனினும், உண்மைப் பயன்தரு செலாவணி வீதம், இலங்கையின் உயர் பணவீக்கம் காரணமாக சிறிதளவு பெறுமான அதிகரிப்பினைப் (0.6 சதவீம்) பதிவுசெய்து, 2000ஆம் ஆண்டில் நாட்டின் வெளிநாட்டுப் போட்டித் தன்மை பேணப்பட்டமையை எடுத்துக்காட்டியது.

9.8 வெளிநாட்டுச் சொத்துக்கள்

பன்னாட்டு எண்ணெய் விலைகளில் ஏற்பட்ட அதிகரிப்பு, வெப்ப வலுவின் அதிகரித்த உருவாக்கம், உள்நாட்டு பாதுகாப்பு நிலைமையின் சாதகமற்ற நிகழ்வுகள் என்பன 2000ஆம் ஆண்டில் இலங்கையின் வெளிநாட்டுச் சொத்துக்கள் நிலைமையில் கடுமையான அழுத்தமொன்றினைக் கொண்டிருந்தன. மசகெண்ணெயின் பன்னாட்டு விலைகளில் ஏற்பட்ட 50 சதவீத கணிசமான அதிகரிப்பும், வலு உருவாக்கத்துக்கான வெப்பவலு எரிபொருளின் அதிகரித்த பாவனை என்பனவற்றுக்காக ஐ.அ.டொலர் 400 மில்லியன் கொண்ட மேலதிக செலவு தேவைப்பட்டது. பாதுகாப்பு தொடர்புபட்ட இறக்குமதிகள் மீதான மேலதிகச் செலவினம் 2000ஆம் ஆண்டில் ஐ.அ.டொலர் 280 மில்லியனாகவிருந்தது. ரூபாவின் பெருமளவு பெறுமானத் தேய்விற்கான எதிர்பார்ப்புக்கள் ஏற்றுமதிப் பெறுகைகளை நாட்டிற்குள் அனுப்புவதைத் தாமதமடையச் செய்தன. வர்த்தக வங்கிகள், குறிப்பாக இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் (இ.பெ.கூ.) மற்றும் கூட்டுறவு மொத்த விற்பனை நிலையம் போன்ற சில பாரிய கம்பனித்துறை உண்டியல்களை நிதியிட மத்திய வங்கியிலிருந்து வெளிநாட்டுச் செலாவணியைக் கொள்வனவு செய்தன.

இதன் விளைவாக 2000ஆம் ஆண்டிறுதியில் இலங்கையின் மொத்த வெளிநாட்டு ஒதுக்குகள் ஐ.அ.டொலர் 456 மில்லியனினால் (18 சதவீதம்) ஐ.அ.டொலர் 2,126 மில்லியனுக்கு வீழ்ச்சியடைந்தன. இது மத்திய வங்கி மற்றும் அரசு வசமிருக்கும் வெளிநாட்டுச் சொத்துக்களை உள்ளடக்கிய மொத்த அலுவல்சாரா ஒதுக்குகள் ஐ.அ.டொலர் 597 மில்லியனினால் அல்லது 36 சதவீதத்தால் ஐ.அ.டொலர் 1,043 மில்லியனுக்கு வீழ்ச்சியடைந்தமையையும் வர்த்தக வங்கிகளின் மொத்த வெளிநாட்டுச் சொத்துக்கள் ஐ.அ.டொலர் 141 மில்லியனால் (15 சதவீதம்) ஐ.அ.டொலர் 1,083 மில்லியனுக்கு அதிகரித்தமையையும் பிரதிபலித்தது. மத்திய வங்கியின் வெளிநாட்டுச் சொத்துக்களில் ஏற்பட்ட வீழ்ச்சி முக்கியமாக அதன் வெளிநாட்டுப் பிணை உடைமைகளின் குறைப்பில் பிரதிபலிக்கப்பட்ட வேளையில் வர்த்தக வங்கிகளின் வெளிநாட்டுச் சொத்துக்களில் ஏற்பட்ட அதிகரிப்பு உள்நாட்டு வங்கித் தொழில் பிரிவுகளினால் வெளிநாடுகளில் பேணப்படும் வைப்புக்களின் அதிகரிப்பில் குறித்துக்காட்டப்பட்டது. வர்த்தக வங்கிகளின் மொத்த வெளிநாட்டுச் சொத்துக்கள், இலங்கை வங்கியால் கூட்டுக்கடன் ஒன்றின் மூலம் பெறப்பட்ட ஐ.அ.டொலர் 100 மில்லியன்கொண்ட கடன்பாடுகளால் ஓரளவிற்கு அதிகரிக்கப்பட்டன. வர்த்தக வங்கிகளின் வெளிநாட்டுப் பொறுப்புக்கள் ஐ.அ.டொலர் 938 மில்லியனுக்கு 23 சதவீதத்தால் அதிகரித்து வர்த்தக வங்கிகளின் தேறிய வெளிநாட்டுச் சொத்துக்களில் ஐ.அ.டொலர் 33 மில்லியன் கொண்ட வீழ்ச்சியொன்றினை ஏற்படுத்தின. பன்னாட்டு நாணய நிதியத்திற்கு ஐ.அ.டொலர் 97 மில்லியனைச் செலுத்தியதன்பின் மொத்த அலுவலர்சார் பொறுப்புக்கள் ஐ.அ.டொலர் 80 மில்லியனால் வீழ்ச்சியடைந்தன.

தேறிய அலுவல்சார் ஒதுக்குகளில் ஏற்பட்ட ஐ.அ.டொலர் 516 மில்லியன் கொண்ட வீழ்ச்சி, சென்மதி நிலுவையின் திரண்ட நிலுவையில் பற்றாக்குறை ஒன்றினை விளைவித்தது. இதேவேளை, நாட்டின் மொத்த வெளிநாட்டு ஒதுக்குகள் ஐ.அ.டொலர் 456 மில்லியனால் 2000ஆம் ஆண்டின் இறுதியில் ஐ.அ.டொலர் 2,126 மில்லியனுக்கு வீழ்ச்சியடைந்தன. வெளிநாட்டு ஒதுக்குகளில் ஏற்பட்ட பெருமளவு வீழ்ச்சி காரணமாக, 2000ஆம் ஆண்டிறுதியில் மொத்த வெளிநாட்டு ஒதுக்குகளின் இறக்குமதி உள்ளடக்கம், 1999

அட்டவணை 9.7
செலாவணி வீத அசைவுகள்

நாணயம்	வெளிநாட்டு நாணய அலகு ஒன்றிற்கு ரூபா						முன்னைய ஆண்டினைவிட சதவீத மாற்றம் (அ)			
	ஆண்டு இறுதி வீதங்கள்			ஆண்டுச் சராசரி			புள்ளிக்குப் புள்ளி		ஆண்டுச் சராசரி	
	1998	1999	2000	1998	1999	2000	1999/1998	2000/1999	1999/1998	2000/1999
டியுச் மார்க்	40.36	37.09	38.00	36.80	38.39	35.76	8.8	-2.4	-4.1	7.4
பிரான்சு பிராங்கு	12.03	11.06	11.33	10.98	11.45	10.66	8.8	-2.4	-4.1	7.4
இந்திய ரூபாய்	1.59	1.66	1.71	1.57	1.64	1.68	-4.3	-3.3	-3.7	-2.6
யப்பானிய யென்	0.59	0.71	0.70	0.50	0.62	0.70	-16.1	1.2	-20.1	-11.7
பவுண் இசுடேர்லிங்	112.62	116.72	119.37	107.05	113.91	114.78	-3.5	-2.2	-6.0	-0.8
ஐ.அ.டொலர்	67.78	72.12	80.06	64.59	70.39	75.78	-6.0	-9.9	-8.2	-7.1
சிஎஉ	95.44	98.87	99.90	87.66	96.25	99.90	-3.5	-1.0	-8.9	-3.7

(அ) இலங்கை ரூபாவுக்குச் சமமான வெளிநாட்டு நாணயங்களின் அடிப்படையில் மாற்றங்கள் கணிக்கப்பட்டுள்ளன. சய அடையாளம் பெறுமானத் தேய்வினைக் குறிப்பிடுகின்றது.

மூலம்: இலங்கை மத்திய வங்கி.

வரைபடம் 9.7
செலாவணி வீத அசைவுகள் - 2000

வரைபடம் 9.7.1
செலாவணி வீதம் 2000 - ரூபா / ஐ.அ.டொ.



வரைபடம் 9.7.2
வங்கிகளுக்கிடையிலான முன் கொடுக்கல் வாங்கல்கள் - 2000



வரைபடம் 9.8
காலாண்டு வெளிநாட்டுச் சொத்துக்கள் (அ)



(அ) 1994ஆம் ஆண்டின் தொடக்கத்திலிருந்து வெளிநாட்டு நாணய வங்கித் தொழில் பிரிவுகள் உள்நாட்டு வங்கித் தொழில் முறையின் ஒரு பகுதியாகக் கருதப்படுகின்றது.

இறுதியின் 5.6 மாதங்களிலிருந்து 3.5 மாதங்களுக்கு வீழ்ச்சியடைந்த வேளையில் மொத்த அலுவல்சார் ஒதுக்குகள் 2000ஆம் ஆண்டிற்கான இறக்குமதிகளின் 1.7 மாதங்களை நிதியிடப் போதுமானதாகக் காணப்பட்டது.

9.9 வெளிநாட்டுப் படுகடன்

இலங்கையின் மொத்த வெளிநாட்டுப் படுகடன் 1999 இறுதியிலான ஐ.அ.டொலர் 9,088 மில்லியனிலிருந்து ஐ.அ.டொலர் 8,859 மில்லியனுக்கு 2.5 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்தது. வெளிநாட்டுப் படுகடன் இருப்பில் ஏற்பட்ட வீழ்ச்சி முக்கிய பன்னாட்டு நாணயங்களுக்கிடையேயான குறுக்கு வீத மாற்றங்களால் ஏற்பட்டதாகும். இவ்வாண்டில் யப்பானிய யென் ஐ.அ.டொலருக்கெதிராக ஏறத்தாழ 11 சதவீதத்தால் பெறுமானத் தேய்வடைந்தது. மொத்த வெளிநாட்டுப் படுகடனில் ஏறத்தாழ 32 சதவீதம் யென்னினால்

அட்டவணை 9.8
இலங்கையின் வெளிநாட்டுச் சொத்துக்கள்

உடைமையாளர்	ஐ.அ. டொலர் மில்லியன் (அ)					ரூபா மில்லியன் (அ)				
	1996	1997	1998	1999	2000	1996	1997	1998	1999	2000
1. அரசு (ஆ)	23	19	20	20	17	1,295	1,192	1,372	1,441	1,322
2. அரச முகவர்கள்	-	-	-	-	-	-	-	-	-	-
3. மத்திய வங்கி (இ)	1,915	2,009	1,964	1,619	1,026	108,506	123,093	132,900	116,571	81,819
4. மொத்த அலுவல்சார் சொத்துக்கள்	1,937	2,029	1,984	1,639	1,043	109,800	124,286	134,272	118,013	83,141
5. வர்த்தக வங்கிகள் (ஈ)	780	1,103	923	942	1,083	44,211	67,596	62,561	67,946	86,682
6. மொத்த வெளிநாட்டுச் சொத்துக்கள்	2,717	3,132	2,907	2,582	2,126	154,011	191,881	196,833	185,958	169,823
7. மொத்த அலுவல்சார்சொத்துக்கள்-மாதத்தில்										
7.1 வணிக இறக்குமதிகள்	4.3	4.2	4.0	3.3	1.7					
7.2 பொருட்கள் பணிகளின் இறக்குமதி	3.8	3.7	3.6	2.9	1.5					
8. மொத்தச் சொத்துக்கள் -மாதத்தில்										
8.1 வணிக இறக்குமதிகள்	6.0	6.4	5.9	5.2	3.5					
8.2 பொருட்கள் பணிகளின் இறக்குமதி	5.3	5.7	5.2	4.6	3.1					

(அ) மத்திய வங்கியின் பன்னாட்டு ஒதுக்குகளின் கீழான சில விடயங்கள் மட்டும் பன்னாட்டு நாணய நிதியத்துடன் இணங்கப்பட்ட பிரதிநித்துவ வீதங்களில் மாற்றப்பட்டுள்ளன. இவை தவிர்ந்த ஏனையவை கீழே தரப்பட்டுள்ள ஆண்டு இறுதி வீதங்களில் மாற்றப்பட்டன.

ஆண்டு	1996	1997	1998	1999	2000
ஐ.அ.டொலர் ஒன்றுக்கு ரூபா	56.71	61.29	67.78	72.12	80.06

(ஆ) திறைசேரி துணைச் செயலாளரின் சிறப்புக் கொடுகடன் நிலுவைகளை உள்ளடக்குவதற்காக 1985இலிருந்தான எண் தொகைகள் திருத்தியமைக்கப்பட்டுள்ளன.

(இ) வர்த்தக வங்கிகளின் வெளிநாட்டு நாணய வைப்புக்கள் மீதான ஒதுக்குத் தேவையாக மத்திய வங்கியில் வைப்புச் செய்யப்பட்டுள்ள அவ் வங்கிகளின் வெளிநாட்டு நாணயங்களையும் உள்ளடக்குவதற்காக 1993இலிருந்தான எண் தொகைகள் திருத்தப்பட்டுள்ளன.

(ஈ) 1994இலிருந்து சென்மதி நிலுவைப் புள்ளிவிபரங்களை திரட்டும்போது வெளிநாட்டு நாணய வங்கித் தொழில் பிரிவுகள் உள்நாட்டு வங்கித் தொழில் முறையின் பகுதியொன்றாகக் கருதப்படுகின்றது. இதன்படி சென்மதி நிலுவை புள்ளி விபரங்களை திரட்டும்போது வெளிநாட்டு நாணய வங்கித்தொழில் பிரிவுகளும் இலங்கையில் வதிவுள்ளவர்களும் சம்பந்தப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் கணக்கில் சேர்த்துக் கொள்ளப்படும் வேளையில் வெ.நா.வ.தொ பிரிவுகளும் இலங்கையில் வதிவுள்ளோரும் சம்பந்தப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் நீக்கப்படுகின்றன.

மூலம்: இலங்கை மத்திய வங்கி.

குறித்துரைக்கப்பட்டுள்ளமையினால் இது 3.5 சதவீதம் கொண்ட வெளிநாட்டுப் படுகடன் வீழ்ச்சிக்கு இட்டுச்சென்றது.

முக்கியமாக ஆசிய அபிவிருத்தி வங்கி, பன்னாட்டு அபிவிருத்தி அமைப்பு, யப்பான் என்பனவற்றிலிருந்தான சலுகை ரீதியான உதவியை உள்ளடக்கியுள்ள நடுத்தர மற்றும் நீண்டகால படுகடன் 2000ஆம் ஆண்டில் மொத்த படுகடன் இருப்பில் 76 சதவீதத்திற்கு வகைகூறியது. மொத்த அரச படுகடன் ஐ.அ.டொலர் 6,818 மில்லியனுக்கு 4 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்து, மொத்தப் படுகடனிருப்பின் 77 சதவீதத்திற்கு வகைகூறியது. இதேவேளை, அரச கூட்டுத்தாபனங்கள் மற்றும் தனியார் துறையின் அரச உத்தரவாதமளிக்கப்பட்ட படுகடன், சிறிலங்கன் எயார்லைன்ஸ் நிறுவனத்தின் வெளிநாட்டு கடன்பாடுகளின் காரணமாக ஐ.அ.டொலர் 1,028 மில்லியனுக்கு 9 சதவீதத்தால் அதிகரித்தது. அரசாங்க உத்தரவாதமற்ற அரச கூட்டுத்தாபனங்களினது தனியார் துறையினதும் வெளிநாட்டுப் படுகடன் ஐ.அ.டொலர் 278 மில்லியனுக்கு சிறிதளவால் வீழ்ச்சியடைந்தது. அமைப்புச் சீராக்க வசதி மற்றும் அதிகரித்த அமைப்புச் சீராக்க வசதி என்பனவற்றின் பேரிலான பன்னாட்டு நாணய நிதியத்துக்கான பொறுப்புக்கள் இவ்வாண்டில் ஐ.அ.டொலர் 97 மில்லியன் கொண்ட மீள் கொடுப்பனவுடன் ஐ.அ.டொலர் 258 மில்லியனிலிருந்து ஐ.அ.டொலர் 161 மில்லியனுக்கு வீழ்ச்சியடைந்தன. இம் மாற்றங்களின் விளைவாக, மொத்த உள்நாட்டு உற்பத்திக்கான மொத்த வெளிநாட்டுப் படுகடனின் விகிதம் 1999இன் 57.8 சதவீதத்திலிருந்து 2000இல் 53.5 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தது.

வரைபடம் 9.9
வெளிநாட்டுப் படுகடன் (அ)



(அ) 1994ஆம் ஆண்டின் தொடக்கத்திலிருந்து வெளிநாட்டு நாணய வங்கித் தொழில் பிரிவுகள் உள்நாட்டு வங்கித் தொழில் முறையின் ஒரு பகுதியாகக் கருதப்படுகின்றது.

அட்டவணை 9.9
வெளிநின்ற வெளிநாட்டுப் படுகடனும் வங்கித் தொழில்துறையின் வெளிநாட்டுப் பொறுப்புக்களும் (அ)

விடயம்	ஐ.அ.டொலர் மில்லியன்					ரூபா மில்லியன்				
	1996	1997	1998	1999	2000(ஆ)	1995	1996	1997	1998	1999(ஆ)
1. நடுத்தர நீண்டகாலப் படுகடன்	7,988	7,719	8,264	8,613	8,284	452,944	473,043	557,530	620,274	662,315
1.1 அரசு (இ)	6,554	6,346	6,902	7,125	6,818	371,648	388,925	467,798	513,785	545,814
1.2 அரச உத்தரவாதத்துடனான அரச கூட்டுத்தாபனங்களும் தனியார் துறையும் (இ)	637	670	718	944	1,028	36,098	41,061	48,673	68,105	82,302
1.3 அரச உத்தரவாதமற்ற அரச கூட்டுத்தாபனங்களும் தனியார் துறையும் (இ)	267	270	277	286	278	15,144	16,521	18,789	20,618	22,257
1.4 பன்னாட்டு நாணய நிதிய எடுப்பனவுகள்	530	433	367	258	161	30,054	26,536	22,271	17,766	11,943
2. குறுங்காலக் கடன்	498	478	484	475	575	28,262	29,323	32,833	34,240	46,034
2.1 அரசு	-	-	-	-	-	-	-	-	-	-
2.2 ஏனையவை (இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனமும் ஏனைய வர்த்தககொடுகடன்களும்(இ) (ஈ)	498	478	484	475	575	28,262	29,323	32,833	34,240	46,034
3. வங்கித்துறை வெளிநாட்டுப் பொறுப்புக்கள் (உ)	1,047	1,202	958	885	1,076	59,356	73,638	64,926	63,838	86,132
3.1 மத்திய வங்கி	1	1	0	0	0	43	65	24	7	33
3.2 வர்த்தக வங்கிகள்	964	1,094	865	765	938	54,678	67,030	58,656	55,142	75,101
3.3 ஆ.தீ.ஒ. பொறுப்புக்கள்	82	107	92	121	137	4,634	6,543	6,247	8,689	10,998
4. மொத்த வெளிநாட்டுப்படுகடன்(1+2)	8,486	8,197	8,749	9,088	8,859	481,206	502,366	590,363	654,514	708,348
5. மொத்த வெளிநாட்டுப்படுகடனும் பொறுப்புக்களும் (1+2+3)	9,533	9,399	9,707	9,973	9,935	540,562	576,004	655,289	718,352	794,481
ஒப்பந்தக் குறிப்பு விடயங்கள்										
நடுத்தர நீண்டகாலப்படுகடன்										
(1) செயற்றிட்டக் கடன்கள்	4,654	4,530	5,150	5,517	5,346	263,918	277,637	349,043	397,882	427,965
(2) செயற்றிட்டமல்லாக் கடன்கள்	1,724	1,612	1,656	1,612	1,551	97,745	98,788	112,237	116,247	124,174
(3) நிரம்பலர் கொடுகடன்	239	343	251	182	167	13,537	21,015	17,020	13,146	13,344
(4) ப.நா.நி. எடுப்பனவுகள்	530	433	367	258	161	30,054	26,536	22,271	17,766	11,943
(5) ஏனைய கடன்கள் (ஊ)	841	801	840	1,043	1,060	47,690	49,067	56,960	75,233	84,890
குறுகியகாலப் படுகடனும் வங்கித் துறைப் பொறுப்புக்களும்	1,545	1,680	1,442	1,360	1,651	87,618	102,961	97,759	98,078	132,166
மொ.உ. உ. வின் சதவீதமாக மொத்த வெளிநாட்டுப்படுகடன்	61.1	54.3	55.5	57.8	53.5	62.6	56.4	58.0	59.2	56.4
மொத்த. உ .உ. இன் சதவீதமாக மொத்த வங்கித்துறை வெளிநாட்டுப் பொறுப்புக்கள்	7.5	8.0	6.1	5.6	6.5	7.7	8.3	6.4	5.8	6.9
மொத்த. உ .உ. இன் சதவீதமாக மொத்த வெளிநாட்டுப்படுகடனும் பொறுப்புக்களும்	68.6	62.3	61.6	63.5	60.0	70.4	64.7	64.4	65.0	63.3
மொ.உ.உ.வின் சதவீதமாக குறுங்காலப் படுகடன்	3.6	3.2	3.1	3.0	3.5	3.7	3.3	3.2	3.1	3.6
மொ.உ.உ.வின் சதவீதமாக குறுங்காலப் படுகடனும் வங்கித்துறை வெளிநாட்டுப் பொறுப்புக்களும்	11.1	11.1	9.2	8.7	10.0	11.4	11.6	9.6	8.9	10.5
மொத்தப்படுகடனின் சதவீதமாக குறுங்காலப்படுகடன்	5.2	5.1	5.0	4.8	5.8	5.2	5.1	5.0	4.8	5.8
மொத்தப்படுகடனின் சதவீதமாக குறுங்காலப் பொறுப்புக்கள்	11.0	12.8	9.9	8.9	10.8	11.0	12.8	9.9	8.9	10.8

மூலங்கள்: இலங்கை மத்திய வங்கி, வெளிநாட்டு மூலவளங்கள் திணைக்களம்.

(அ) 1994இலிருந்து சென்மதி நிலுவைப் புள்ளிவிபரங்களை திரட்டும்போது வெளிநாட்டு நாணய வங்கித்தொழில் பிரிவுகள் உள்நாட்டு வங்கித்தொழில் முறையின் பகுதியொன்றாக கருதப்படுகின்றது. சென்மதி நிலுவைப் புள்ளி விபரங்களைத் திரட்டும்போது வெ.நா.வ.பிரிவுகளும் இலங்கையில் வதிவற்றோரும் சம்பந்தப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் கணக்கில் சேர்க்கப்படும் வேளையில் வெ.நா.வ.தொ.பிரிவுகளும் இலங்கையில் வதிவுள்ளோரும் சம்பந்தப்பட்ட கொடுக்கல் வாங்கல்களில் தவிர்க்கப்படுகின்றன.

(ஆ) தற்காலிகமானவை.

(இ) மேலதிக தகவல்களை உள்ளடக்குவதற்காக 1994இன் பின்னருள்ள தரவுத் தொடர்கள் திருத்தியமைக்கப்பட்டுள்ளன.

(ஈ) இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் ஏற்றுக்கொள்ளப்பட்ட கொடுகடன்களையும் ஏனைய வர்த்தகக் கொடுகடன்களையும் உள்ளடக்குகின்றது.

(உ) வெ.நா.வ.தொ. பிரிவுகள் உள்ளிட்ட வர்த்தக வங்கிகளின் ஆசியத் தீர்ப்பனவு ஒன்றியத்தின் வரவுகளும் வெளிநாட்டுப் பொறுப்புக்களும்.

(ஊ) அரச கூட்டுத்தாபனங்கள் மற்றும் தனியார்துறை கூட்டுத்தாபனங்களின் நீண்ட காலக் கடன்களையும் உள்ளடக்கும்.

நாட்டின் குறுகியகால படுகடன் இருப்பு 2000 இறுதியில் ஐ.அ.டொலர் 575 மில்லியனாக விளங்கி 21 சதவீத அதிகரிப்பைப் பிரதிபலித்தது. இவ்வதிகரிப்பு முக்கியமாக இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனம் மற்றும் தனியார் நிறுவனங்களுக்கான பாரிய வழங்குநர்களால் வழங்கப்பட்ட கொடுகடனால் ஏற்பட்டதாகும். மொத்த படுகடன் இருப்பில் குறுகியகால படுகடனின் பங்கு 1999இன் 5 சதவீதத்திலிருந்து 2000இல் 6 சதவீதத்திற்கு அதிகரித்தது. வீழ்ச்சியடைந்துசெல்லும் வெளிநாட்டுச் சொத்துக்களுடன் இணைந்து அதிகரித்துச் செல்லும் குறுகியகாலப் படுகடன் வெளிநாட்டுச் சொத்துக்களுக்கான குறுகியகால படுகடன் விகிதத்தை அதிகரித்ததுடன், திருத்த நடவடிக்கைகளுக்கான தேவையையும் தெளிவுபடுத்துகின்றது.

இதேவேளை, வங்கித் தொழில்துறையின் வெளிநாட்டுப் பொறுப்புக்களை உள்ளடக்கிய மொத்த வெளிநாட்டுப் பொறுப்புக்கள், வெளிநாட்டுப் படுகடனிலான வீழ்ச்சியொன்றினதும் வங்கித் தொழில் துறை வெளிநாட்டுப் பொறுப்புக்களில் ஏற்பட்ட அதிகரிப்பொன்றினதும் இணைந்த விளைவாக 2000ஆம் ஆண்டில் சிறிதளவால் வீழ்ச்சியடைந்து ஐ.அ.டொலர் 9,935 மில்லியனாக விளங்கின. பின்னையது, முக்கியமாக வெளிநாட்டு வங்கிகளின் கூட்டு ஒன்றினூடாக இலங்கை வங்கியால் பெற்றுக்கொள்ளப்பட்ட ஐ.அ.டொலர் 100 மில்லியன் கொண்ட குறுகியகால கடன்பாடுகளால் ஏற்பட்டதாகும்.

9.10 வெளிநாட்டுப் படுகடன் பணிக் கொடுப்பனவுகள்

நீண்டகால மற்றும் நடுத்தரகல படுகடனின் தீர்ப்பனவுகள் மற்றும் அனைத்து வெளிநாட்டுப் படுகடன்கள் மீதுமான வட்டிக் கொடுப்பனவுகள் என்பனவற்றை உள்ளடக்கிய மொத்த படுகடன் பணிக்

அட்டவணை 9.10
வெளிநாட்டுப் படுகடன் பணிக் கொடுப்பனவுகள் (அ)

விடயம்	ஐ.அ.டொலர் மில்லியன்					ரூபா மில்லியன்				
	1996	1997	1998	1999	2000(ஆ)	1996	1997	1998	1999	2000(ஆ)
1. படுகடன் பணிக் கொடுப்பனவுகள்	746	733	759	846	953	40,953	42,645	48,773	59,321	74,666
1.1 கடன் தீர்ப்பனவுகள்	439	430	469	550	622	24,007	24,764	30,076	38,472	49,559
(i) ப.நா. நிதியத்திற்கு	47	66	83	100	97	2,314	3,290	5,100	6,813	9,700
(ii) ஏனையவற்றிற்கு (இ)	392	364	387	451	524	21,693	21,475	24,975	31,658	39,859
1.2 வட்டிக் கொடுப்பனவுகள்	307	303	289	296	331	16,946	17,881	18,697	20,850	25,108
(i) ப.நா. நிதியத்திற்கு	7	6	7	5	5	409	361	443	376	410
(ii) ஏனையவற்றிற்கு (இ)	300	297	282	291	326	16,537	17,520	18,254	20,474	24,698
2. வணிகப் பொருட்களின் ஏற்றுமதிகளிலும் பணிகளிலுமிருந்தான வருவாய்கள்	4,861	5,514	5,712	5,578	6,476	269,159	325,885	369,484	393,303	492,301
3. வணிகப் பொருட்கள் ஏற்றுமதிகள், பணிகள் தனியார் மாற்றல்களிலிருந்தான பெறுகைகள்	5,878	6,670	6,925	6,801	7,787	325,420	394,122	447,951	479,469	591,567
4. படுகடன் பணி விகிதங்கள் (ஈ)										
4.1 மேலுள்ள 2இன் சதவீதமாக										
(i) முழு மொத்த விகிதம்	15.3	13.3	13.3	15.2	14.7	15.2	13.1	13.2	15.1	15.2
(ii) ப.நா.நி. கொடுக்கல் வாங்கல் நீங்கலாக	14.2	12.0	11.7	13.3	13.1	14.2	12.0	11.7	13.3	13.1
4.2 மேலுள்ள 3இன் சதவீதமாக										
(i) முழு மொத்த விகிதம்	12.7	11.0	11.0	12.4	12.2	12.6	10.8	10.9	12.4	12.6
(ii) ப.நா.நி. கொடுக்கல் வாங்கல் நீங்கலாக	11.8	9.9	9.7	10.9	10.9	11.7	9.9	9.7	10.9	10.9
5. அரச படுகடன் பணிக் கொடுப்பனவு										
5.1 அரச படுகடன் பணிக் கொடுப்பனவு (உ)	378.5	393.4	419.5	449.0	435.7	20,947	24,060	27,126	31,613	33,004
5.2 மேலுள்ள 1இன் சதவீதமாக	50.7	53.7	55.3	53.1	45.7	51.1	56.4	55.6	53.3	44.2

(அ) 1994இலிருந்து சென்மதி நிலுவைப் புள்ளிவிபரங்களை திரட்டும்போது வெளிநாட்டு நாணய வங்கித்தொழில் பிரிவுகள் உள்நாட்டு வங்கித்தொழில் முறையின் பகுதியொன்றாக கருதப்படுகின்றது. சென்மதி நிலுவைப் புள்ளி விபரங்களைத் திரட்டும்போது வெ.நா.வ.பிரிவுகளும் இலங்கையில் வதிவற்றோரும் சம்பந்தப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் கணக்கில் சேர்க்கப்படும் வேளையில் வெ.நா.வ.தொ.பிரிவுகளும் இலங்கையில் வதிவுள்ளோரும் சம்பந்தப்பட்ட கொடுக்கல் வாங்கல்களில் தவிர்க்கப்படுகின்றன.

(ஆ) தற்காலிகமானவை.

(இ) மேலதிக தகவல்களை உள்ளடக்குவதற்காக 1994 இன் பின்னருள்ள தரவுகள் திருத்தியமைக்கப்பட்டுள்ளன.

(ஈ) ரூபாய் பெறுமதியிலும் ஐ.அ.டொலர் பெறுமதியிலும் கணிக்கப்பட்ட படுகடன் பணி விகிதம் வேறுபடுவதற்கு ஆண்டுப் பகுதியில் செலாவணி வீதங்களில் ஏற்பட்ட மாறுபாடுகளே காரணமாகும்.

(உ) ப.நா.நி. கொடுக்கல் வாங்கல்கள் தவிர்த்து.

மூலம்: இலங்கை மத்திய வங்கி.

கொடுப்பனவு ஐ.அ.டொலர் 953 மில்லியனுக்கு 12.6 சதவீதத்தால் அதிகரித்தது. இது வட்டிக் கொடுப்பனவுகள் 12 சதவீதத்தால் ஐ.அ.டொலர் 331 மில்லியனுக்கு அதிகரித்தமையினதும் கடன் தீர்ப்பனவுக் கொடுப்பனவுகள் 13 சதவீதத்தால் ஐ.அ.டொலர் 622 மில்லியனுக்கு அதிகரித்தமையினதும் இணைந்த விளைவாகும். வெளிநாட்டுக் கடன்கள் மீதான வட்டிக் கொடுப்பனவுகள் 12 சதவீதத்தினால் ஐ.அ.டொலர் 326 மில்லியனுக்கு அதிகரித்தன. வெளிநாட்டுக் கடன்கள் மீதான வட்டிக் கொடுப்பனவுகள் ஐ.அ.டொலர் 5 மில்லியனாக மாற்றமின்றி இருந்தன. 2000ஆம் ஆண்டில் வட்டிக் கொடுப்பனவுகளில் ஏற்பட்ட அதிகரிப்பு இவ்வாண்டில் நிலவிய உலகளாவிய உயர் வட்டி வீதங்களால் ஏற்பட்டதாகும். எனினும், வெளிநின்ற வெளிநாட்டுப் படுகடன்களில் 77 சதவீதமானவை சலுகை ரீதியிலான கடன்களாகக் காணப்படுவதனாலும் பெரும்பாலான வட்டி வீதங்கள் சந்தை வட்டிவீதங்களுடன் நேரடியாகத் தொடர்பற்றவையாகவும் காணப்படுகின்றமையினாலும் இலங்கையின் வெளிநாட்டுப் படுகடன் பணிக் கொடுப்பனவுகளின்மீதான அதியுயர் பன்னாட்டு வட்டி வீதங்களின் தாக்கம் மிகச் சிறியதாகவே உள்ளது. சலுகை ரீதியான கடன்களை முக்கியமாக உள்ளடக்கியுள்ள வெளிநாட்டுக் கடன்களின் தீர்ப்பனவு ஐ.அ.டொலர் 524 மில்லியனுக்கு 16 சதவீதத்தால் அதிகரித்தது. பன்னாட்டு நாணய நிதியத்துக்கான மீள்கொடுப்பனவுகள் ஐ.அ.டொலர் 97 மில்லியனுக்கு 2 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்தன. 2000ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட கடன் தீர்ப்பனவுக் கொடுப்பனவுகள் 1997இல் வழங்கப்பட்ட ஐ.அ.டொலர் 50 மில்லியன் கொண்ட மாறுபடும் வீதத்துடனான பத்திரங்கள் மீதான நிலுவைக் கொடுப்பனவான ஐ.அ.டொலர் 16 மில்லியனை உள்ளடக்கியுள்ளது. வணிக ஏற்றுமதிகள் மற்றும் பணிகளிலிருந்தான பெறுகைகளின் சதவீதமொன்றாக படுகடன் பணிக் கொடுப்பனவுகள் 1999இன் 15.2 சதவீதத்திலிருந்து இவ்வாண்டில் 14.7 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தன. பொருட்கள், பணிகள் வருவாய் மற்றும் தனியார் மாற்றல்களிலிருந்தான பெறுகைகளின் சதவீதமாக படுகடன் பணிக் கொடுப்பனவுகள் 1999இன் 12.4 சதவீதத்திலிருந்து 2000இல் 12.2 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தன. அரசாங்கத்தினால் மேற்கொள்ளப்பட்ட மொத்தப் படுகடன் பணிக் கொடுப்பனவுகள் ஐ.அ.டொலர் 436 மில்லியனாக விளங்கி இவ்வாண்டில் மேற்கொள்ளப்பட்ட மொத்தப் படுகடன் பணிக் கொடுப்பனவுகளின் 46 சதவீதத்திற்கு வகைகூறியது.

9.11 வெளிநாட்டு வர்த்தகச் சூழலும் கொள்கையும் இறக்குமதி ஏற்றுமதிக் கட்டுப்பாடுகள்

2000ஆம் ஆண்டு தீர்வை அமைப்பு இலகுபடுத்தப்பட்டது. வெளிநாட்டு வர்த்தகமும் தீர்வைக் கொள்கையும் மிகத் தாராளமானதும் பாதுகாப்புக் குறைந்ததுமான ஒரு அமைப்பினை நோக்கி இடையறாது நகர்ந்தன. தீர்வை அமைப்பு அளவுசார் கட்டுப்பாடுகள் மேலும் குறைக்கப்பட்டன. தீர்வை மற்றும் தீர்வையல்லா அமைப்பிலான ஏனைய திரிபுகளும் இல்லாதொழிக்கப்பட்டன. அத்தகைய முயற்சிகளை, உள்நாட்டு வேளாண்மை உற்பத்திகளையும் சில கைத்தொழில்களையும் பாதுகாப்பதற்காக 2000ஆம் ஆண்டின் பிற்பகுதியில் அவ்வப்போது எடுக்கப்பட்ட கொள்கைத் தீர்மானங்களினால் தடைப்பட்டன.

2000ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 29ஆம் நாளிலிருந்து கோதுமை, இறுங்கு, கோதுமைமா,

அட்டவணை 9.11
இறக்குமதித் தீர்வை சேகரிப்பு வீதம் (அ)

விடயம்	1996	1997	1998	1999 (ஆ)	(இ)
நுகர்வுப் பொருட்கள்	10.3	11.8	12.7	12.8	
உணவும் குடிபானமும்	9.1	11.5	12.6	13.6	
அரிசி	0.3	6.3	2.4	16.4	
மா	2.3	…	…	…	
சீனி	15.9	17.8	20.8	21.3	
கோதுமையும் இறுங்கும்	…	…	…	0.3	
பாலும் பால் உற்பத்திகளும்	11.5	11.8	11.5	11.6	
கருவாடு	2.1	1.6	1.1	1.2	
ஏனைய மீன் உற்பத்திகள்	4.2	4.9	4.8	4.8	
எனைய உணவு விடயங்கள்	19.0	17.9	20.5	19.9	
உணவல்லாத நுகர்வுப் பொருட்கள்	12.6	12.2	12.8	12.0	
உந்து ஊர்திகளும் ஈருருளிகளும்	24.3	24.5	23.6	20.1	
வானொலி, தொலைக்காட்சிப் பெட்டிகள்	12.1	11.5	12.4	11.9	
இறப்பர் டயர்களும் ரியூப்புக்களும்	32.5	33.5	32.0	28.4	
மருந்து மற்றும் மருந்தாக்கல் உற்பத்திகள்	1.5	1.3	0.9	0.6	
ஏனைய உணவல்லாத விடயங்கள்	10.6	9.4	10.1	9.1	
இடைநிலைப் பொருட்கள்	8.0	5.9	4.7	4.1	
வளமாக்கி	…	0.1	…	…	
மசகெண்ணெய்	33.6	21.7	25.8	15.8	
ஏனைய பெற்றோலியப் பொருட்கள்	24.6	18.7	16.7	16.1	
இரசாயன மூலங்களும் கலவைகளும்	7.6	7.6	5.8	3.6	
சாயமூட்டல் பதனிடல் நிறமூட்டல்	8.2	7.1	7.5	5.3	
தாள் தாள் அட்டைகள்	6.9	6.0	6.0	5.7	
புடவையும் ஆடைகளும்	1.1	0.8	0.1	0.1	
ஏனைய இடைநிலைப் பொருட்கள்	5.7	5.2	4.8	4.1	
முதலீட்டுப் பொருட்கள்	7.6	7.0	6.0	4.4	
கட்டடப் பொருட்கள்	9.3	9.1	9.3	7.8	
போக்குவரத்துக் கருவிகள்	18.9	17.3	11.8	7.4	
பொறியும் கருவியும்	3.9	3.4	3.0	2.2	
ஏனைய முதலீட்டுப் பொருட்கள்	6.7	6.3	4.4	3.4	
மொத்தம்	8.5	7.7	7.4	7.0	

மூலங்கள்: இலங்கைச் சுங்கம்.
கூ.மொ.வி.நிலையம்.
இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனம்.
இலங்கை மத்திய வங்கி.

(அ) சீராக்கப்பட்ட மொத்த இறக்குமதிப் பெறுமதிகளின் சதவீதமாக உண்மையான தீர்வைச் சேகரிப்பு (க.ஏ.பெ.)
(ஆ) திருத்தியமைக்கப்பட்டது.
(இ) தற்காலிகமானவை.

இறுங்குமா, சோளம், கோதுமை உணவு மற்றும் விலங்குத் தீனிற்காகப் பயன்படும் குறிப்பிட்டவகைத் தயாரிப்புக்கள் என்பன மீதான உரிமைத் தேவைப்பாடுகள் அகற்றப்பட்டமையின் மூலம் சில கட்டுப்பாடுகள் தளர்த்தப்பட்டன. எனினும் உந்து ஊர்திகளின் உடற்பாகம் மற்றும் விலங்குத் தீனிற்கும் பயன்படுத்தப்படும் பண்டமொன்றைத் தயாரிப்பதற்கான சில தெரிந்தெடுக்கப்பட்ட விடயங்கள் என்பன இறக்குமதி உரிமத்தின் கீழ் கொண்டுவரப்பட்டன.

குறைந்த விலைகளிலிருந்து உள்நாட்டு உற்பத்தியாளர்களைப் பாதுகாப்பதற்காக அனைத்துவகை அரிசியும் நெல்லும் உரிமத்தின்கீழ் கொண்டுவரப்பட்டன. மருத்துவ, அறுவை, பல், அல்லது விலங்கு மருத்துவ தொழில்முறைக்குப் பயன்படுத்தப்படும் தளபாடங்கள, உலோக, பிளாத்திக்கு மற்றும் மரத்தளபாடங்கள் மற்றும் மெத்தை படுக்கை தயாரிப்பிற்கான துணைப் பொருட்கள் சிறு மெத்தைகள், மென் தலையணைகள், தலையணைகள் போன்ற இதையொத்த தளபாடங்கள் என்பன 2000ஆம் ஆண்டு யூலை 21 ஆம் நாளன்று இறக்குமதி ஏற்றுமதிக் கட்டுப்பாடுகளின் கீழ் கொண்டுவரப்பட்ட மற்றைய விடயங்களாகும்.

இத் திருத்தங்களுடன் இணங்கி விதிக்கப்பட்ட முறைக் குறியீட்டின் 6 இலக்க மட்டத்தில் மொத்தமாக 329 விடயங்கள் 2000ஆம் ஆண்டு இறுதியில் இறக்குமதிக் கட்டுப்பாடுகளின் கீழ் எஞ்சியிருந்தன. ஏற்றுமதிகளில் நான்கு வகைகள் அதாவது முருகைக் கற்பாறையும் ஓடுகளும், மரம் மற்றும் மரப் பொருட்கள், (கருங்காலி) யானைத் தந்தம் மற்றும் தந்தத்திலான பொருட்கள் மற்றும் 1945இற்கு முன்னர் இலங்கையில் பதிவு செய்யப்பட்ட பயணிகள் உந்து ஊர்திகள் என்பன மாத்திரமே சுற்றாடல் பாதுகாப்பு மற்றும் அருங்கற் பொருட்களைப் பாதுகாத்தல் ஆகிய நோக்கங்களுக்காக உரிமத்தின் கீழ் தொடர்ந்துமிருந்தன.

வெளிநாட்டு வர்த்தகத்தின் மீதான தீர்வைகளும் வரிகளும்

ஒரு சில வேளாண்மை உற்பத்திகளை 35 சதவீத வீதத்தின்கீழ் வைத்திருப்பதுடன் 2000ஆம் ஆண்டு வரவு செலவுத் திட்டத்தில் தீர்வை அமைப்பு 10 சதவீதம், 25 சதவீதங்கொண்ட இரு பிரிவு அமைப்பிற்கு மேலும் ஒருங்கிணைக்கப்பட்டது. கைத்தொழில் மூலப் பொருட்களின் மீதும் இலங்கையில் தயாரிக்கப்படாத பொறிகளின் மீதும் பொருந்தத்தக்கதாகவுள்ள 5 சதவீதங்கொண்ட சலுகை வீதம் படிப்படியாக ஒழிக்கப்படும். பெற்றோலிய உற்பத்தியின் மீதான வரி விதிப்பினை இலகுவாக்கும்பொருட்டு மசகெண்ணெய் மீதான இறக்குமதி தீர்வை அகற்றப்பட்டதுடன் இறுதியாக்கப்பட்ட உற்பத்திகளின்மீது உற்பத்தித் தீர்வை மட்டும் விதிக்கப்பட்டது. உள்ளூர்ப் பெறுமதி கூட்டப்படுவதனை ஊக்குவிக்கும் பொருட்டு சீமெந்து மீதான தீர்வை 10 சதவீதத்தில் ஒரு முகப்படுத்தப்பட்டது. உண்ணத்தக்க எண்ணெய் மீதான தீர்வைத் தளர்த்தல் அகற்றப்பட்டு 25 சதவீததீர்வை வீதத்தின்கீழ் கொண்டுவரப்பட்டது. தீர்வை விலக்கல் பெற்றிருந்த சோளம் 2000ஆம் ஆண்டு பெப்புருவரி 15ஆம் நாள் தொடக்கம் 5 சதவீதத்தின்கீழ் கொண்டுவரப்பட்டு அதன் பின்னர் 10 சதவீதத்திற்கு அதிகரிக்கப்பட்டது. தாள் மற்றும் தாள் அட்டைகள் மீதான தீர்வை 2000ஆம் ஆண்டு ஒத்தோபர் 30ஆம் நாள் தொடக்கம் 25 சதவீதத்திலிருந்து 10 சதவீதத்திற்குக் குறைக்கப்பட்டது.

ஒருசில இறக்குமதி விடயங்கள் இருபிரிவு முறைக்கு வெளியில் இருந்தன. நடுத்தர காலப் பகுதியொன்றினுள் குறைந்த தீர்வை அமைப்பிற்கு உள்நாட்டு வேளாண்மைத்துறை மாறுவதனை, அனுமதிக்கும் தற்காலிகமானதொரு வழிமுறையாக அரிசி, பெரிய வெங்காயம், பயறு, தட்டைப்பயறு, போன்ற தெரிந்தெடுக்கப்பட்ட வேளாண்மை உற்பத்திகள்மீதான இறக்குமதித் தீர்வை 35 சதவீதத்தில் காணப்பட்டது. ஆகக் குறைந்த வாழ்க்கைத் தரங்களைப் பேணுவதற்கு இன்றியமையாதது எனக் கருதப்படும் விடயங்கள் பூஜ்யமட்டத்தில் வைத்திருக்கப்பட்டன. உருளைக்கிழங்கு, சீனி, புகையிலை, குடிவகை என்பன இரு பிரிவு முறைக்கு வெளியேயான சிறப்பு வீதங்களின்கீழ் கொண்டுவரப்பட்டன.

வரிவிலக்குப் பெற்ற பட்டியலில் அரச மின்னியல் ஊடாகக் கருவிகளும் சேர்க்கப்பட்டதுடன் பட்டியலிலுள்ள விடயங்களின் எண்ணிக்கை 2000ஆம் ஆண்டு பெப்புருவரி 15இலிருந்து 40இற்கு அதிகரித்தது. 1992ஆம் ஆண்டிலிருந்து ஏற்றுமதித்துறை தொடர்ந்தும் அனைத்து ஏற்றுமதி மற்றும் பெறுமான விசித விற்பனை வரிகளுமின்றியிருந்த வேளையில் ஏற்றுமதித் தீர்வை மற்றும் சில விடயங்கள் மீதான உரிமைக்கட்டணம் 2000ஆம் ஆண்டிலும் தொடர்ந்திருந்தன. மீள் நிதியளிக்கும் செய்முறையினை விரைவுபடுத்துவதற்காக எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் தவிர, 2000ஆம் ஆண்டில் பொருள்கள் பணிகள்வரி தொடர்பாக பெரிய மாற்றங்கள் எதுவும் இடம் பெறவில்லை.

2000ஆம் ஆண்டில் மிகச் சில தீர்வைத் தளர்த்தல்களே வழங்கப்பட்டன. 10 சதவீதமான முழுமையான தீர்வைத்தளர்த்தல் உள்ளூராட்சிமன்ற உறுப்பினர்களினால் இறக்குமதி செய்யப்பட்ட உந்து ஈருருளிகளின் மீது 2000ஆம் ஆண்டு மாச்சு 10ஆம் நாளன்றிலிருந்து செயற்படும் வகையில் வழங்கப்பட்டது. வெளிநாட்டு வேலைவாய்ப்பு முகவர்களினால் இறக்குமதி செய்யப்பட்ட ஊர்திகளின் மீது 25 சதவீதம் கொண்ட முழுமையான தளர்த்தல் வழங்கப்பட்டது.

சிறப்புக்குறிப்பு 8

உலகளாவிய சூழல் ஒன்றில் இலங்கையின் போட்டித் தன்மை

மட்டுப்படுத்தப்பட்ட அளவிலான சூழல் மூலவளங்களைப் பகிர்ந்து கொள்ளும் மக்களினால் மேல் நிலைமையைஅல்லது தனி முதன்மை நிலைமையை எய்துவதற்கு மேற் கொள்ளப்படும் முயற்சியே போட்டியாகும். போட்டித்தன்மை என்பது அத்தகைய மேல் நிலைமையை அல்லது தனிமுதன்மை நிலைமையினைப் பேணுவதாகும். பன்னாட்டுப் பொருளாதாரத்தில் நாடொன்றின் போட்டித்தன்மை என்பதற்கு பன்னாட்டுச் சந்தையினை எய்துவதற்கும் மூலதனத்தினை ஈர்த்துக் கொள்வதற்கும் ஏனைய நாடுகளுக்கு மேலாக மேல் நிலைமையை அல்லது தனி முதன்மை நிலைமையைப் பேணுவதற்கு நாடொன்றுக்கு உள்ள இயலுமை என வரைவிலக்கணம் கூறப்பட்டுள்ளது.

கடந்த சில தசாப்தங்களில் தொழில்நுட்ப அபிவிருத்தியின் விரைந்த தன்மையொன்றினை உலகம் கண்டுள்ளதோடு இதன் மூலம் உலகளாவிய போட்டித்தன்மை தீவிரப்படுத்தப்பட்டுள்ளது. தகவல் தொழில்நுட்பத்தின் மேம்பாடானது வெளிநாட்டுச் சந்தைகளின் புதிய நிகழ்வுகளை உடனடியாக அறிந்து கொள்ளுவதற்கு நாடுகளுக்கு இயலச் செய்துள்ளது. போக்குவரத்துச் சம்பந்தமான தொழில்நுட்பக் கண்டுபிடிப்புக்களும் அபிவிருத்திகளும் போக்குவரத்துச் செலவினைக் குறைத்துள்ளன. இந்த அபிவிருத்திகள் எந்தவொரு சிறிய நாட்டுக்கும் தொலைதூரம் காரணமான ஏற்படும் தடைகளை அகற்றி குறைந்த செலவில் தமது உற்பத்திப் பொருட்களை உலகளாவிய ரீதியில் பிரச்சாரம் செய்வதற்கும் வெளிநாட்டுச் சந்தைகளை எய்துவதற்கும் வெளிநாட்டு மூதலீடுகளை ஈர்த்துக் கொள்ளுவதற்கும் இயலச் செய்துள்ளது. நாடுகளுக்கிடையேயான பொருளாதார உறவுகள் சம்பந்தமாக அவற்றிற்கிடையேயான தொலைதூரம் முக்கியத்துவத்தினை இழந்துள்ளதோடு உலக கிராமம் ஒன்றாக நாடுகள் நெருக்கமடைந்தன.

அதனது நிறுவனங்களும் பேரண்டப் பொருளாதாரமும் போட்டித் தன்மையைக் கொண்டதாகக் காணப்படின் நாடொன்று போட்டித் தன்மையுடையதாகும். போட்டித்தன்மை கொண்ட நிறுவனமொன்று அதனது சுயசக்தியை பயன்படுத்துவதற்காக அரச கட்டுப்பாடுகளிலிருந்து நகருவதற்கும் மேம்பட்ட உற்பத்திக் காரணிகளில் பெருமளவு தங்கியிருப்பதற்கும் அதனது போட்டியாளர்கள் மற்றும் உலகளாவிய நுகர்வோர்கள் ஆகியோர் தொடர்பான அறிவினை வளர்த்துக் கொள்ளுவதற்குமான தேவை காணப்படுகின்ற வேளையில் ஏனைய நிறுவனங்களுக்கும் கைத்தொழில் கொத்தணிகளுக்குமிடையில் வலிமையான ஒத்துழைப்பினை ஏற்படுத்திக் கொள்ளுவதற்குமான தேவையும் காணப்படுகின்றது. பொருளாதாரத்தினை தாராளமயப்படுத்தல் (காரணி மற்றும் உற்பத்திப் பொருள் சந்தைகள் ஆகிய இரண்டும்) உலகின் ஏனைய பாகங்களுடன் திறந்த நிலைமையினை அதிகரித்தல் அரசின் செலவுகளையும் பற்றாக்குறையினையும் ஒழுங்கு முறைப்படுத்தல், செயல்திறன்மிக்க நிதியியல் மற்றும் பௌதிக உட்கட்மைப்பு வலையமைப்பு ஒன்றினைப் பேணுதல், தொழில்நுட்ப திறமைகளைப் பேணுதல் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி முயற்சிகளைத் தரமுயர்த்தல் வசதியான சட்ட வரைச் சட்டமொன்றினை நிறுவுதல் என்பன பேரண்டப் பொருளாதாரத்திற்கு அவசியமாகின்றன.

தினந்தோறும் தீவிரமடையும் போட்டித் தன்மையானது உலகளாவிய ரீதியில் உயர் போட்டித் தரங்களில் தம்மை நிறுவிக் கொள்ளுவதற்கு நாடுகளை உந்தச் செய்கின்றது. பன்னாட்டு அமைப்புக்கள் பேரண்டப் பொருளாதார போட்டித்தன்மை தொடர்பான அளவீடுகளை மேற்கொள்வதோடு உலகளாவிய ரீதியில் அவற்றின் தரங்களை வெளியிடுகின்றன. பேரண்டப் பொருளாதார போட்டித் தன்மையினை மதிப்பீடு செய்வதற்காக அவை முக்கிய பேரண்டப் பொருளாதார பண்புகளைப் பயன்படுத்துகின்றன. அட்டவணை 1இல் குறித்துக் காட்டப்பட்டவாறு திறந்த நிலைமை, அரசாங்கம், நிதியியல் உட்கட்டமைப்பு, தொழில்நுட்பம், நிறுவனங்கள், உழைப்பு மற்றும் மனித மூலதனம் என்பன முக்கிய மாறிலிகளாக விளங்குகின்றன. 2000ஆம் ஆண்டில் முகாமைத்துவ, அபிவிருத்திக்கான பன்னாட்டு நிறுவனம், உலகப் பொருளாதார கருத்தரங்கு ஆகிய இரண்டும் நாடுகள் தொடர்பான தமது தரமிடல்களை வெளியிட்டன.[1] முகாமைத்துவ அபிவிருத்திக்கான பன்னாட்டு நிறுவனத்தினால் வெளியிடப்பட்ட பட்டியலில் ஐக்கிய அமெரிக்கா, முதலாவது இடத்தையும் பின்லாந்து, நெதர்ர்ந்து ஆகிய நாடுகள் இரண்டாம் மூன்றாம் இடங்களையும் பெற்றுக் கொண்டுள்ளன. உலகப் பொருளாதார கருத்தரங்கின் தரமிடலின்படி அதி உயர் தரமிடல் சிங்கப்பூருக்கு வழங்கப்பட்டிருப்பதுடன் அதனைத் தொடர்ந்து கொங்கொங், லக்சம்பர்க் ஐக்கிய அமெரிக்கா என்பன காணப்படுகின்றன. அதிகூடிய போட்டித் தன்மைகொண்ட நாடுகள் அட்டவணை 1இல்

1.www.imd.ch.and www.weforum.org

சிறப்புக் குறிப்பு (தொடர்ச்சி)

தரப்பட்டுள்ளன. மூலத்தின்படி தரமிடல்கள் மாறுபட் போதிலும் இரண்டு மூலங்களின்படியும் உச்சில் உள்ள ஏழுநாடுகளும் முழுதாகவே ஒத்தவையாகும். (அட்டவணை2)

போட்டித் தன்மைகொண்ட நாடுகளின் பட்டியலில் அபிவிருத்தியடைந்துவரும் பல நாடுகள் தாழ்ந்த தரமிடல் மட்டங்களிலேயே காணப்படுகின்றன. பரந்தளவிலான விடயங்களில் காணப்படும் உள்ளார்ந்த பிரச்சனைகளே இதற்கான காரணமாகும். செயல்திறன் மிக்க பேரண்டப் பொருளாதார சூழலையும் உட்கட்டமைப்பினையும் வழங்குவதற்கான மூலவளங்கள் அபிவிருத்தியடைந்துவரும் நாடுகள் பலவற்றில் காணப்படுவதில்லை. பாதகமான தெரிவுகளை கட்டுப்படுத்துவதற்கான வழிமுறைகள் காணப்படாமை, மற்றும் நன்நடத்தைத் தீங்கு சம்பந்தப்பட்ட பிரச்சினைகள் என்பன அபிவிருத்தியடைந்துவரும் நாடுகளின் பேரண்டப் பொருளாதார செயல்திறனை மேலும் நலிவடையச் செய்துள்ளன. கணிசமான பொதுத்துறைகளைக் கொண்டுள்ள அபிவிருத்தியடைந்து வரும் பொருளாதாரங்களில் செயல்திறன்மிக்க வகையில் பொருட்களை வழங்குவதில் நியமிக்கப்பட்ட முகவர்களில் அரசாங்கம் பெருமளவு தங்கியிருக்க வேண்டியுள்ளது. அபிவிருத்தியடைந்துவரும் நாடுகள் பலவற்றில் தற்போதுள்ள ஊக்குவிப்புப் பொறிமுறையின் நலிவுகள் அரசதுறையினை பாரியதாகவும் வகைகூற முடியாததாகவும் பணித்துறை சார்ந்ததாகவும் புலப்பாடு அற்றதாகவும் ஆக்கியுள்ளன. இந்த பண்புகள் சம்பளம் தகாத நன்மை கோரும் ஆட்களை அரசதுறையின்பால் கவரச் செய்த வேளையில் திறமைமிக்க மனித மூலதனத்தினை அபிவிருத்தியடைந்துவரும் நாடுகளைவிட்டு விலகச் செய்தன. அபிவிருத்தியடைந்துவரும் நாடுகளில் இருந்து மனித மூலதனம் வெளியேறுவதானது திறமைமிக்க திட்டமிடல் மற்றும் கண்டுபிடிப்புக்கள் என்பனவற்றுக்கு பெரும் தடையாகவுள்ளது. ஆர்வமற்ற முதலீட்டாளர் மனப்பான்மைக்கு இது இட்டுச் செல்வதோடு தாழ்ந்த மூலவளங்களின் தாழ்ந்த முதலீட்டு உட்பாய்ச்சலுக்கு இட்டுச் செல்லும் இயற்கை மற்றும் மினத மூலவளங்கள் அதன் விளைவாக தாழ்ந்த இயற்கை மற்றும் மனித மூலவளங்களுக்கு இட்டுச்சென்று தாழ்ந்த உற்பத்தியாக்கத்திற்கான தீய சுழற்சி வட்டமொன்றை ஏற்படுத்துகின்றது.

இந்த தீய சுழற்சி வட்டத்தினைத் தகர்த்தெறிவதற்கு அபிவிருத்தியடைந்துவரும் நாடுகள் கடும் முயற்சிகளை மேற்கொள்ளல் வேண்டும். இரண்டு முனைகளிலிருந்து இதனை மேற்கொள்ளலாம். அதாவது அதிகூடிய உற்பத்தியாக்கத்திற்காக நிறுவனங்கள் பெருமளவு முயற்சிகளை மேற்கொள்ளுகின்ற வேளையில் அரசாங்கம் வசதியான பேரண்டப் பொருளாதார சூழல் ஒன்றினை வழங்க வேண்டும். நிறுவனமொன்றின் இலக்கானது செல்வத்தை உருவாக்குவதும் பெறுமதி கூட்டலுமாக இருத்தல் வேண்டும். உபாய உருவாக்கம், உற்பத்தி அபிவிருத்தி மற்றும் உற்பத்தியாக்க அதிகாரிப்பு என்பனவற்றினால் இது மேற்கொள்ளப்பட வேண்டும். அரசாங்கத்தின் இலக்கானது பாரபட்சமற்ற வசதி வழங்குநராகவும் அரச பண்டங்களின் செயல்திறன் மிக்க வழங்குநராகவும் இருத்தலாகும். சுதந்திர சந்தைப் பொறிமுறையினை ஊக்குவித்தல், உறுதியானதும் சிறந்ததுமான பேரண்டப் பொருளாதார சூழல் ஒன்றைப் பேணல், பாதகமான தெரிவுகள் மற்றும் நன்னடத்தைப் பிரச்சனைகளுக்குத் தீர்வு காணல், அரசதுறையில் வகைகூறல், பணித்துறைக் கட்டுப்பாடு இன்மை, மற்றும் புலப்பாடு என்பனவற்றை ஊக்குவித்தல் ஆகியவற்றின் மூலம் இதனை மேற்கொள்ளலாம்.

வெற்றிகரமாக நிகழும் நாடுகள் பொருளாதாரங்களிலிருந்து அபிவிருத்தி அடைந்துவரும் படிப்பினைகளைப் பெற்றுக் கொள்ளலாம். சிங்கப்பூர் அதனது அடுத்த பத்தாண்டுக்கான பொருளாதாரப் போட்டித்தன்மையினை 1996இலிருந்து மீளாய்வு செய்யத் தொடங்கியது. சிறந்த தகைமைகளைக் கொண்ட குழுவொன்று ஆண்டுதோறும் பொருளாதாரச் செயலாற்றத்தை மீளாய்வு செய்து அடுத்துவரும் ஆண்டுகளில் பொருளாதாரத்தை வழிநடத்திச் செல்வதற்கான உபாயங்களை விதந்துரைக்கின்றது. 1996இல் தயாரிப்பும் பணிகளும் வளர்ச்சியின் இரட்டை எந்திரங்கள் வெளிநாட்டுச் சந்தைகளைச் சென்றடைதலை வலுப்படுத்தல், உலக தரத்திலான கம்பனிகளை நிருமாணித்தல், உள்நாட்டு சிறிய மற்றும் நடுத்தர கைத்தொழில்களை வலுப்படுத்தல், மனித மற்றும் புத்திஜீவி மூலதனத்தினைக் கைக்கொள்ளல் விஞ்ஞானம், தொழில்நுட்பம் மற்றும் புதிய கண்டுபிடிப்புக்களை ஊக்குவித்தல் மூலவள முகாமைத்துவத்தினை உச்சப்படுத்தல், வாணிப வசதி வழங்குநராக அரசாங்கக் கொள்கைகளை மீளமைத்தல் போன்ற உபாயங்களின் தொகுதியொன்றினை 1996இல் சிங்கப்பூர் கொண்டிருந்தது. போட்டித்தன்மையில் சிங்கப்பூர் அதி உயர் தரமிடல் ஒன்றைப் பெற்றுக்கொள்வதையும் சருவதேச நிறுவனங்களினால் சரியானமுறையில் அறிவிக்கப்படுவதையும் குழு உறுதி செய்யும்.

ஆலோசனை மற்றும் நிதியங்களுக்காக அபிவிருத்தியடைந்துவரும் நாடுகள் அவற்றினது அபிவிருத்தியடைந்த பங்காளர்களிடமிருந்து நன்மைகளைப் பெற்றுக் கொள்ளலாம். உதாரணமாக இலங்கையின் போட்டித்தன்மையின் அபிவிருத்திக்காக பன்னாட்டு அபிவிருத்திக்கான ஐக்கிய அமெரிக்க முகவராண்மை நிதியங்களை வழங்குகின்றது. பொதுநலவாய செயலகம் அபிவிருத்தியடைந்துவரும் நாடுகளுக்கிடையில் போட்டித்தன்மை மீதான புரிந்துணர்வு நிகழ்ச்சித் திட்டங்களை மேற்கொண்டுள்ளது.

பெருமளவில் வர்த்தகத்தில் தங்கியிருக்கும் சிறிய பொருளாதாரம் என்ற வகையில் அதிகரித்த அளவில் உலகமயமாக்கப்படும். பொருளாதார சூழல் ஒன்றில் நிலைத்து நிற்கக் கூடிய உயர்ந்த பொருளாதார வளர்ச்சியை எய்துவதற்கு இலங்கையின் போட்டித் தன்மையினை வலுப்படுத்துவது முக்கியமானதாகும். உலக நிகழ்வுகளின் நோக்கில், சுதந்திரம் பெற்ற நாள் தொடக்கம் தொடர்ச்சியாக பதவிக்கு வந்த அரசாங்கங்கள் இலங்கையின் போட்டித் தன்மையினை முன்னெடுத்துச் சென்றுள்ளன. குறிப்பாக 1977இன் பொருளாதார தாராளமயமாக்கலைத் தொடர்ந்து உலகப் பொருளாதாரத்தில் இலங்கையின் வெளிப்படுத்துகை விரிவடைந்து வந்துள்ளது. இந்தச் சூழலில் பாதுகாப்பின் ஊடான நிலைத்து நிற்க முடியாத பொருளாத்தாரத்தினைவிட போட்டியின் ஊடான நிலைத்து நிற்கக் கூடிய பொருளாதாரம் எய்தப்படக் கூடியதாகும். விரைந்த தொழில்நுட்ப அபிவிருத்திகள் உற்பத்திச் செலவினை கடுமையாக வீழ்ச்சியடையச் செய்யும் உலக சூழல் ஒன்றில் பாதுகாப்பினை வழங்குவதானது நீண்ட காலத்தில் கைத்தொழிலுக்கு ஆதரவு வழங்காது என்ற பொருளாதார மெய்ப்பாட்டுடன் இது இசைந்து செல்வதாக உள்ளது. நிறுவன மட்டத்தில் உற்பத்தியாக்கத்தை அதிகரிப்பதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப் பட்டுள்ளதோடு போட்டித்தன்மை கொண்ட உற்பத்திப் பொருட்களை உற்பத்தி செய்வதற்கு நிறுவனங்களுக்கு உதவுவதற்கான பலதரப்பட்ட நிகழ்ச்சித் திட்டங்களும் உள்ளன. படிப்படியான, ஆனால் இன்னமும் பகுதியளவில் தாராளமயப்படுத்தப்பட்ட உள்நாட்டுச் சந்தைப் பொறிமுறை, வெளிநாட்டு வர்த்தகத்துக்காக பொருளாதாரத்தை திறந்துவிடல், வெளிநாட்டுச் செலாவணிக் கொடுப்பனவுகளை, தாராளமயமாக்கல், செலாவணி வீதத்தைத் தீர்மானிப்பதை தாராளமயமாக்கல், உட்கட்டமைப்பு வசதிகளை அதிகரித்தல், நடவடிக்கை முறைகளை இலகுபடுத்தல், முதலீட்டாளர் நட்பு மற்றும் ஏற்றுமதி நட்புச் சூழல் ஒன்றை மேம்படுத்தல் என்பனவற்றின் ஊடாக பேரண்டப் பொருளாதார செயல்திறனை மேலும் அதிகரிப்பதற்கான வழிமுறைகள் தேவைப்படுகின்றன. குறிப்பாக, எழுத்தறிவு உயர்வாகக் காணப்பட்டபோதும் சந்தைத் தேவைப்பாடுகளுக்குப் பொருத்தமான முறையில் மூன்றாம் நிலைக் கல்வியில் கணிசமான மேம்பாடுகள் தேவைப்படுகின்றன. கடினமான தொழிற்சட்டங்கள் தொடர்பாக கைத்தொழிலாளர்கள் முறைப்பாடு செய்கின்றனர். நடந்து கொண்டிருக்கும் யுத்தமானது பேரண்டப் பொருளாதார செயற்திறன் மற்றும் முதலீட்டாளர் நம்பிக்கை என்பனவற்றின் மீது கடுமையான பாதிப்புக்களை ஏற்படுத்தி வரவு செலவுத்திட்ட விடயங்களில் பாரிய சுமையினை ஏற்படுத்தியுள்ளது.

சிறப்புக் குறிப்பு (தொடர்ச்சி)

இலங்கை இன்னமும் உலக தரமிடல் செயல்முறையினுள் நுழையவில்லை. பன்னாட்டு அபிவிருத்திக்கான ஐக்கிய அமெரிக்க முகவராண்மையினால் உதவி வழங்கப்பட்ட இலங்கையின் போட்டித் தன்மை முயற்சியானது சருவதேச போட்டித்தன்மையை அதிகரிப்பதற்கு இலங்கையின் கைத்தொழில்களுக்கு உதவுகின்ற வேளையில் இலங்கைக்கான தரமிடல் ஒன்றைப் பெற்றுக் கொள்ளுவதில் முன்னேறிச் செல்லுகின்றது. 2000ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட மாதிரி அளவீடொன்று அட்டவணை 2இல் விளக்கப்பட்டுள்ளது. அளவீடு செய்யப்பட்ட 60 நாடுகளில் இலங்கைக்கு 44ஆவது இடத்தை வழங்கியுள்ளது.[2] அட்டவணை 2இல் குறிப்பிட்டவாறு உலகப் பொருளாதார கருத்தரங்களினால் கருத்திற்கொள்ளப்பட்ட காரணிகளின் அடிப்படையில் இந்த அளவீடு மேற்கொள்ளப்பட்டுள்ளது. பிலிப்பைன், பேரு, துருக்கி, எல்சல்வடோர், போலாந்து, ஆர்ஜன்டீனா, கொலம்பியா, பிரேசில், உக்ரேன், இந்தியா, பொலிவியா, ருசியா, வெனிசூலா, பல்கேரியா, இக்வடோர் மற்றும் சிம்பாப்வே ஆகிய நாடுகளைவிட மேலான தரமிடலில் இலங்கை காணப்படுகின்றது. எனினும் உலக சூழலில் இலங்கையின் போட்டித் தன்மையை மேலும் மேம்படுத்துவதற்கு பேரண்டப் பொருளாதார உறுதிப்பாடு, பொருளாதார சீர்திருத்தங்களின் வலுப்படுத்தல், உட்கட்டமைப்பு வசதிகளின் அபிவிருத்தி மற்றும் அரசியல் உறுதிப்பாடு என்பனவற்றின் மேலதிக மேம்பாடுகள் அத்தியாவசியமாகும்.

போட்டித் தன்மை முயற்சியானது இலங்கையின் கைத்தொழில்களுக்கு தொலைநோக்கு, நீண்டகால நெறிப்படுத்தல் மற்றும் உபாயம் என்பனவற்றை உருவாக்குவதற்கும் உதவுகின்றது. கொத்தணிக் கைத்தொழில்கள், கொத்தணிக் கூட்டங்கள் என்பனவற்றை ஏற்படுத்துவதற்கும் விசேட இலாபம் தரும் உலக சந்தைகளை எய்துவதற்கான முன்னணிச் செயற்றிட்டங்களைக் கொண்டு நடத்தவும் அது ஆதரவு வழங்குகின்றது. தாழ்ந்த சம்பளங்கள், பெறுமானத் தேய்வடையும் நாணயம், இயற்கை மூலவளங்கள் தொடர்ச்சியாக குறைவடைந்து செல்லுகின்றமை என்பனவற்றினால் போட்டித் தன்மையை நிலைத்து நிற்கச் செய்யமுடியாது என்பதையும் அதனது சொந்த சக்திகள் மனித மூலவளத்தின் அறிவினை விருத்தி செய்தல், உற்பத்தி மற்றும் சந்தைப்படுத்தலின் உற்பத்தியாக்க பெறுமதித் தொடர்ச்சியினை அதிகரித்தல் என்பனவற்றின் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தியினால் மட்டுமே அதனை அதிகரிக்க முடியும் என்பதையும் கைத்தொழில்கள் உணர்ந்து கொள்ள வேண்டும்.

2. உலகப் போட்டித் தன்மை அறிக்கை மாதிரி அளவீடு இலங்கை 2000 ஜே.ஏ. ஒஸ்ரின் அசோசியேட் இன்கோபரேட், இலங்கை

அட்டவணை 1

முகாமைத்துவ அபிவிருத்தி நிறுவனம் மற்றும் உலகப் பொருளாதார கருத்தரங்கு என்பனவற்றினால் கருத்திற் கொள்ளப்பட்ட போட்டித் தன்மை உள்ளீட்டுக் காரணிகள்

அ. உலக பொருளாதார கருத்தரங்கினால் கருத்திற் கொள்ளப்பட்ட காரணிகள்(அ)

காரணி	விளக்கம்	60 நாடுகளில் இலங்கைக்கான தரமிடல் (ஆ)
திறந்த தன்மை	வெளிநாட்டு வர்த்தகம் மற்றும் முதலீட்டுக்கான திறந்த தன்மை, வெளிநாட்டு நேரடி முதலீடு மற்றும் நிதிப் பாய்ச்சல், செலாவணி வீத கொள்கை மற்றும் ஏற்றுமதிக்கான வசதிகள் என்பனவற்றின் திறந்த தன்மையினை இந்த வழிமுறைகள் அளவிடுகின்றன.	50
அரசாங்கம்	பொருளாதார நிலைமையின் பங்கினை அரசாங்கம் அளவிடுகின்றது. அரச செலவினம், அரசிறைப் பற்றாக்குறைகள், தேசிய சேமிப்பு வீதங்கள் , எல்லை வரி வீதங்கள் அரச பணியின் பொதுவான திறமை எப்னபவற்றின் மீது அரசாங்கத்தின் பொதுவான சுமையினை இது உள்ளடக்குகின்றது.	35
நிதி	நிதியியல் இடையீட்டாளர்கள் சேமிப்புக்களை எவ்வளவு திறமையுடன் உற்பத்தியாக்க முதலீட்டில் வழிப்படுத்துகின்றனர், நிதியியல் சந்தை போட்டித் தன்மையின் மட்டம் முக்கிய நிதியியல் நிறுவனங்களின் உறுதிப்பாடும் கடன்தீர்ப்பனவுத் தகைமையும் தேசிய சேமிப்புக்களினதும் முதலீடுகளினதும் மட்டங்கள், வெளிநாட்டு அவதானிப்பாளர்களினால் வழங்கப்பட்ட கடன் பெறுவதற்கான தரங்கள் என்பனவற்றை நிதி அளவிடுகின்றது.	39
உட்கட்டமைப்பு	பாதைகள், புகைவண்டிப் பாதைகள், துறைமுகங்கள், தொலைத் தொடர்பூட்டல்கள், விமானப் போக்குவரத்துச் செலவு மற்றும் பொதுவான உட்கட்டமைப்பு முதலீடு என்பனவற்றின் தரத்தினை இந்தக் காரணி அளவிடுகின்றது.	50
தொழில் நுட்பம்	கணனிப்பயன்பாடு, புதிய தொழில்நுட்பத்தின் பரம்பல், புதிய தொழில் நுட்பத்தினை ஈர்த்துக்கொள்வதற்கான பொருளாதாரத்தின் இயலுமை மற்றும் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தியின் மட்டமும் தரமும் என்பனவற்றை இந்தக் காரணி அளவிடுகின்றது.	30
முகாமைத்துவம்	பொதுவான முகாமைத்துவ தரம் சந்தைப்படுத்தல் அலுவலர் பயிற்சி மற்றும் ஊக்கமூட்டும் பிரயோகங்கள், இழப்பீட்டுத் திட்டங்களின் செயல்திறன், உள்ளக நிதியியல் கட்டுப்பாட்டு முறைகளின் தரம் என்பனவற்றை முகாமைத்துவம் அளவிடுகின்றது.	50

தொழிலாளர்	உள்நாட்டு தொழிலாளர் சந்தையின் செயல்திறனையும் போட்டித் தன்மையினையும் இது அளவிடுகின்றது. தொழிலாளர் சந்தையின் செயல்திறனுக்கான அளவீட்டுடன் பன்னாட்டு மாதிரிகளுக்குச் சார்பாக நாட்டின் தொழிலாளர் செலவின் மட்டத்தினையும் (அதாவது தொழிலாளர்களை வேலைக் கமர்த்துவது மற்றும் வேலையிலிருந்து நீக்குவதற்கான தடைகள்) மற்றும் அடிப்படைக் கல்வி மற்றும் தேர்ச்சிகளின் மட்டத்தினையும் திரிபுகளைக் கொண்ட தொழிலாளர் வரிகளின் விபரங்களையும் இந்தக் காரணி அளவிடுகின்றது.	24
நிறுவனங்கள்	வாணிப போட்டித் தன்மையின் அளவு, சட்ட நிறுவனங்களினதும் பிரயோகங்களினதும் தரம், மற்றும் ஊழல்களின் அளவும் ஏற்பாடு செய்யப்பட்ட வன்முறைச் செயல்களினால் பாதிக்கப்படக்கூடிய அளவும்.	41
அ.முகாமைத்துவ அபிவிருத்தி நிறுவனத்தினால் கருத்திற் கொள்ளப்பட்ட காரணங்கள்(இ)		
உள்நாட்டுப் பொருளாதாரம்	உள்நாட்டுப் பொருளாதாரத்தின் பேரண்டப் பொருளாதார மதிப்பீடு.	
பன்னாட்டு மயமாக்கல்	பன்னாட்டு வர்த்தகம் மற்றும் முதலீட்டில் நாடு பங்கேற்கும் அளவு.	
அரசாங்கம்	போட்டித் தன்மைக்கு அரசாங்க கொள்கைகளினதும் பிரயோகங்களினதும் சாதகத்தன்மையின் அளவு.	
நிதி	மூலதனச் சந்தைகளினதும் தரமான நிதியியல் பணிகளினதும் செயலாற்றம்	
உட்கட்டமைப்பு	இயற்கை தொழில்நுட்ப மற்றும் தொடர்பூட்டல் மூலவளங்கள் என்பன வாணிபங்களின் அடிப்படைத் தேவைகளைப் பூர்த்திசெய்வதற்கு எவ்வளவு தூரம் போதுமானது என்பது.	
முகாமைத்துவம்	புதிய கண்டுபிடிப்புக்கள், இலாபத் தன்மை மற்றும் பொறுப்பு வாய்ந்த முறையில் எவ்வளவு தூரம் சம்பனிகள் முகாமைப்படுத்தப்படுகின்றன என்பது.	
விஞ்ஞானமும் தொழில்நுட்பமும்	விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப இயலளவு	
மக்கள்	மனித மூலவளங்களின் கிடைப்பனவும் தகைமைகளும்	

மூலம்: (அ) உலகப் பொருளாதார கருத்தரங்கு
(ஆ) உலக போட்டித்தன்மை அறிக்கை மாதிரி அளவீடு இலங்கை 2000, ஜே.ச. ஒஸ்ரின் அசோசியேட் இன்கோபரேட், இலங்கை
(இ) முகாமைத்துவ அபிவிருத்திக்கான நிறுவனம்

அட்டவணை 2
1999 மற்றும் 2000 ஆம் ஆண்டில் போட்டித் தன்மையின் தரமிடல்

நாடு	உலகப் பொருளாதார கருத்தரங்கின் தரமிடல்		முகாமைத்துவ அபிவிருத்தி நிறுவனததின் தரமிடல்		நாடு	உலகப் பொருளாதார கருத்தரங்கின் தரமிடல்		முகாமைத்துவ அபிவிருத்தி நிறுவனததின் தரமிடல்	
	2000	1999	2000	1999		2000	1999	2000	1999
சிங்கப்பூர்	*1*	*1*	*2*	*2*	மொரிசியஸ்	*31*	*29*		
கொங்கொங்	*2*	*3*	*14*	*7*	ஹங்கேரி	*32*	*38*	*27*	*26*
லக்ஸம்பார்க்	*3*	*7*	*6*	*4*	செக் குடியரசு	*33*	*39*	*37*	*41*
ஐக்கிய அமெரிக்கா	*4*	*2*	*1*	*1*	இத்தாலி	*34*	*35*	*30*	*30*
நெதர்லாந்து	*5*	*9*	*4*	*5*	தென் ஆபிரிக்கா	*35*	*47*	*38*	*42*
சுவிட்சலாந்து	*6*	*6*	*5*	*6*	கிரீஸ்	*36*	*41*	*32*	*31*
அயர்லாந்து	*7*	*10*	*7*	*11*	கொஸ்டாரிக்கா	*37*	*34*		
பின்லாந்து	*8*	*11*	*3*	*3*	இந்தோனேசியா	*38*	*37*	*45*	*46*
அவுத்திரேலியா	*9*	*12*	*13*	*12*	ஜோர்தான்	*39*	*40*		
கனடா	*10*	*5*	*11*	*10*	மெச்சிக்கோ	*40*	*31*	*36*	*36*
தாய்வான்	*11*	*4*	*22*	*18*	எகிப்து	*41*	*49*		
ஐக்கிய இராச்சியம்	*12*	*8*	*15*	*15*	வியட்நாம்	*42*	*48*		
நியூசிலாந்து	*13*	*13*	*21*	*20*	சொல்வாக் குடியரசு	*43*	*45*	*35*	*40*
நோர்வே	*14*	*15*	*16*	*13*	**இலங்கை * (அ)**	**44**			
டென்மார்க்	*15*	*17*	*12*	*8*	பிலிப்பைன்	*45*	*33*	*39*	*32*
ஒஸ்ட்ரியா	*16*	*20*	*18*	*19*	பேரு	*46*	*36*		
யப்பான்	*17*	*14*	*17*	*16*	துருக்கி	*47*	*44*	*42*	*37*
சுவீடன்	*18*	*19*	*9*	*14*	எவ்சல்வடோர்	*48*	*46*		
அயிஸ்லாந்து	*19*	*18*	*10*	*17*	போலாந்து	*49*	*43*	*40*	*44*
சேர்மனி	*20*	*25*	*8*	*9*	ஆர்ஜன்டீனா	*50*	*42*	*41*	*33*
போர்த்துக்கல்	*21*	*27*	*29*	*28*	கொலம்பியா	*51*	*54*	*44*	*43*
பெல்ஜியம்	*22*	*24*	*20*	*22*	பிரேசில்	*52*	*51*	*34*	*35*
கொரியா	*23*	*22*	*28*	*38*	உக்ரேன்	*53*	*58*		
மலேசியா	*24*	*16*	*25*	*27*	இந்தியா	*54*	*52*	*43*	*39*
இஸ்ரேல்	*25*	*28*	*23*	*24*	பொலிவியா	*55*	*55*		
சிலி	*26*	*21*	*26*	*25*	ருசியா	*56*	*59*	*47*	*47*
ஸ்பெயின்	*27*	*26*	*24*	*23*	வெனிசூலா	*57*	*50*	*46*	*45*
பிரான்சு	*28*	*23*	*19*	*21*	பல்கேரியா	*58*	*56*		
தாய்லாந்து	*29*	*30*	*33*	*34*	இக்வடோர்	*59*	*53*		
சீனா	*30*	*32*	*31*	*29*	சிம்பாவே	*60*	*57*		

மூலம்: உலக போட்டித்தன்மை அறிக்கை மாதிரி அளவீடு இலங்கை 2000, ஜே.ச. ஒஸ்ரின் அசோசியேட் இன்கோபரேட், இலங்கை

சிறப்புத்திட்டமொன்றின் கீழ் அரசதுறை ஊழியர்களினால் மேற்கொள்ளப்படும் இறக்குமதிகளின் மீது 1999 பெப்புருவரி 22ஆம் நாளன்று அறிமுகப்படுத்தப்பட்ட டீசல் ஊர்திகளுக்கான 6 சதவீதம் கொண்ட ஒரளவுத் தீர்வைத் தளர்த்தலும் பெற்றோலிய ஊர்திகளுக்கான 19 சதவீதம் கொண்ட தீர்வைத் தளர்த்தலும் 2000ஆம் ஆண்டு பெப்புருவரி 14ஆம் நாளிலிருந்து முறையே 1 சதவீதத்திற்கும், 14 சதவீதத்திற்கும் திருத்தப்பட்டது. எனினும், உந்து ஊர்திகள் மீதான சாதாரண தீர்வை வீதம் 2000ஆம் ஆண்டு பெப்புருவரி 15ஆம் நாளன்று 30சதவீதத்திலிருந்து 25 சதவீதத்திற்குக் குறைக்கப்பட்டமையினால் இவ்வூர்திகளுக்குப் பிரயோகிக்கத்தக்க தீர்வைவீதம் டீசலுக்கு 24 சதவீதமாகவும் பெற்றோலுக்கு 11 சதவீதமாகவும் மாற்றமின்றியிருந்தது. இவ்வகைகளின்கீழ், 11,767 ஊர்திகள் இறக்குமதி செய்யப்பட்டதுடன் இழக்கப்பட்ட அரசிறை ரூ.747 மில்லியனாகக் காணப்பட்டது.

முறையே 1998 சனவரி 13ஆம் நாளிலிருந்தும் 1998 யூன் 18ஆம் நாளிலிருந்தும் நடைமுறைக்கு வந்திருந்த உலர்த்திய தேங்காய் மற்றும் உண்ணத்தக்க எண்ணெய் என்பன மீதான ஒரளவுத் தீர்வைத் தளர்த்தல்கள் 2000 பெப்புருவரி 15இலிருந்து அகற்றப்பட்டு 25 சதவீத தீர்வை வீதத்தின்கீழ் கொண்டு வரப்பட்டது. உள்ளூர் தேங்காய் எண்ணெய்க் கைத்தொழிலுக்கு பாதுகாப்பு வழங்கும் பொருட்டு 2000ஆம் ஆண்டு யூலை 17ஆம் நாளிலிருந்து உண்ணத்தக்க எண்ணெய் மீது 25 சதவீதமான மேலதிகக் கட்டணம் விதிக்கப்பட்டமையினால் உண்மையான தீர்வைவீதம் 50 சதவீதத்திற்கு அதிகரித்தது. உள்ளூர் உருளைக்கிழங்கு வேளாண்மையாளர்களைப் பாதுகாக்கும் நோக்குடன் 2000ஆம் ஆண்டு ஒகத்து 30இலிருந்து திசெம்பர் 8ஆம் நாள்வரையான காலப்பகுதிக்கு உருளைக்கிழங்கு இறக்குமதிமீது 35 சதவீத மேலதிகக் கட்டணம் விதிக்கப்பட்டது.

சராசரி இறக்குமதித் தீர்வை அதாவது சீராக்கப்பட்ட மொத்த இறக்குமதிகளுக்கான இறக்குமதித் தீர்வைச் சேகரிப்பு விகிதம் 1999இன் 7.0 சதவீதத்திலிருந்து 2000ஆம் ஆண்டில் 4.5 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்து தீர்வை வீதங்களும் தீர்வை விதிக்கத்தக்க இறக்குமதிகளும் வீழ்ச்சியடைந்தமையைப் பிரதிபலித்தது. மொத்த இறக்குமதிகளில் தீர்வை விதிக்கத்தக்க இறக்குமதிகளின் பங்கு 1999இன் 34.0 சதவீதத்திலிருந்து 2000ஆம் ஆண்டில் 29.3 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்து பாதுகாப்புடன் தொடர்பான தீர்வை விதிக்கமுடியாத இறக்குமதிகள் கணிசமாக அதிகரித்தமையினையும், இடைநிலைப் பொருட்களில் தீர்வை விதிக்கத்தக்க இறக்குமதிகள் குறைவடைந்தமையையும் பிரதிபலித்தது. இடைநிலைப் பொருட்கள் வகையில், தீர்வை விதிக்கத்தக்க இறக்குமதிகள் 24 சதவீதத்திலிருந்து, 18.8 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தன. எனினும் முதலீட்டுப் பொருட்கள் வகையில் தீர்வை விதிக்கத்தக்க இறக்குமதிகள் 38.5 சதவீதத்திலிருந்து 39.7 சதவீதத்திற்கு அதிகரித்தது. இடைநிலைப் பொருட்கள் மீதான சராசரி தீர்வை வீதம் 1999இன் 3.9 சதவீதத்திலிருந்து 2000ஆம் ஆண்டில் 2.9 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்து, 2000ஆம் ஆண்டு பெப்புருவரி 15ஆம் நாளன்று மசகெண்ணெய் இறக்குமதி மீதான தீர்வை வீதம் அகற்றப்பட்டமையை ஓரளவிற்குப் பிரதிபலித்தது. தீர்வைச் சலுகை வசதியின் கீழான அதிகரித்த பொறி மற்றும் உபகரணங்களின் இறக்குமதிகளின் விளைவாக, முதலீட்டுப் பொருட்களில் தீர்வை விதிக்கத்தக்க இறக்குமதிகள் சிறிதளவு அதிகரித்தபோதும், சராசரி தீர்வை வீதம் 1999இன் 4.4 சதவீதத்திலிருந்து 2000ஆம் ஆண்டில் 4.0 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தமைக்கு தீர்வைத் தளர்த்தல்களே காரணமாகும்.

நுகர்வுப் பொருட்களில் தீர்வை விதிக்கத்தக்க இறக்குமதிகள் 56.9 சதவீதத்திலிருந்து 56 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தமைக்கு இறக்குமதித் தீர்வையிலிருந்து விலக்கப்பட்டிருந்த மருந்தாக்கற் பொருட்களினதும், பாலுற்பத்திகளினதும் சார்புரீதியில் உயர்ந்த இறக்குமதிகளே காரணமாகும். உணவு, குடிபானம் மற்றும் உணவல்லா நுகர்வுப் பொருட்கள் இரண்டின்மீதுமான சராசரி இறக்குமதித் தீர்வை மேலும் வீழ்ச்சியடைந்தது. உணவல்லா நுகர்வுப் பொருட்கள் மீதான தீர்வை குறைவடைந்தமைக்கு முக்கிய பங்களிப்புக் காரணியாக ஓரளவான தீர்வைத் தளர்த்தல்களை அனுபவித்த உந்து ஊர்திகளின் இறக்குமதிகளே காணப்பட்டன.

புடவைகள் மற்றும் ஆடைகள் அனுமதிப்பங்கு ஒதுக்கீடு

1978இல் தொடங்கப்பட்ட அனுமதிப் பங்கு முறையின்கீழ் புடவை மற்றும் ஆடைகள் அனுமதிப் பங்கு முதலீடு புடவைக் கைத்தொழில் அமைச்சினூடாக மேற்கொள்ளப்பட்டது. 1992 யூலை 1ஆம் நாளிலிருந்து அனுமதிப் பங்கு முறையின் நிருவாகம் புடவை அனுமதிப் பங்குச் சபையின் பொறுப்பாக மாறியது. இச்சபை தொடக்கத்தில் புடவை அனுமதிப்பங்கு ஒதுக்கீடுகளுக்கான பொறுப்புக்களைக் கொண்ட உள்ளக முகவர் வேளைக்கேற்ற குழுவொன்றாக நிறுவப்பட்டது. பின்னர் 1996இன் 33ஆம் இலக்க புடவை அனுமதிப் பங்குச் சட்டத்தின் மூலம், 1996இல் புடவை அனுமதிப் பங்குச்சபை ஒரு நியதிச்சபையாக நிறுவப்பட்டது. எனினும், புடவைகள் மற்றும் ஆடைகள் தொடர்பான உறுகுவே சுற்றுவட்ட உடன்படிக்கையின் கீழ் (பல் நூழிழை உடன்படிக்கை) அனுமதிப் பங்குக் கட்டுப்பாடுகள் 2005ஆம் ஆண்டளவில் கட்டம் கட்டமாக

அகற்றப்படும். பல்நூழிழை உடன்படிக்கையினைக் கட்டம் கட்டமாக அகற்றும் நடைமுறையின்கீழ் கட்டம் I மற்றும் கட்டம் IIஇன் கீழான கட்டுப்பாடுகளிலிருந்து விலக்குப் பெறக்கூடிய பொருட்களின் பட்டியலை இலங்கை, உலக வர்த்தக அமைப்பின் புடவைக் கண்காணிப்புச் சபைக்கு முறையே 1996இலும் 1998இலும் சமர்ப்பித்தது.

நாட்டிற்கு ஒதுக்கப்பட்டுள்ள அனுமதிப் பங்கு முழுமையாகவும் வினைத்திறனுடனும் பயன்படுத்தப் பட்டுள்ளது என்பதனை உறுதிப்படுத்துவதே புடவை அனுமதிப் பங்குச்சபையின் குறிக்கோளாகும். இந் நோக்கத்தை நிறைவேற்றுவதற்காக புடவை அனுமதிப் பங்குச்சபை ஒவ்வொரு ஆண்டும் ஆடைத் தயாரிப்பாளர்களிடையே, முக்கியமாக கடந்தகால ஏற்றுமதிச் செயலாற்றத்தினடிப்படையில் புடவை அனுமதிப் பங்கினை ஒதுக்குகிறது. முன்னைய செயலாற்றத்தின் அடிப்படையிலான ஒதுக்கீடு "முதன்மை அனுமதிப்பங்கு" அல்லது "செயலாற்ற அனுமதிப்பங்கு" என அழைக்கப்படுகிறது. நெகிழ்ச்சித் தன்மையை வழங்கும் பொருட்டு செயலாற்ற அனுமதிப் பங்கை வைத்திருக்கும் ஏற்றுமதியாளர்கள் நிரந்தர அல்லது தற்காலிக அடிப்படையில் அனுமதிப் பங்குச்சபையினூடாக இன்னுமோர் ஏற்றுமதியாளருக்கு பயன்படுத்தப்படாத அனுமதிப் பங்கை மாற்றுவதற்கு அனுமதிக்கப்பட்டனரெனினும் அனுமதிப் பங்கினை விற்பதோ அல்லது கொள்வனவு செய்வதோ அனுமதிக்கப்படவில்லை. இது தொடர்பாக பணியாற்றுகின்ற முகவரும் (முதலீட்டுச்சபை மற்றும் கைத்தொழில் அபிவிருத்தி அமைச்சின் புடவைப் பிரிவும்) குறைந்தது இரண்டு வேலை நாட்களைக்கொண்ட காலப்பகுதிக்கிடையில் தற்காலிக மாற்றல்களை அங்கீகரிக்கலாம். செயலாற்றப் பங்கினை வைத்திருப்போர் பயன்படுத்தப்படாத அனுமதிப்பங்கை புடவை அனுமதிப் பங்குச் சபைக்குக் கையளிப்பதற்கு ஊக்குவிக்கப்பட்டதுடன் கையளித்தவர்களுக்கான வரவு கையளித்த நேரத்தினைப் பொறுத்து மூன்று கட்டங்களில் வழங்கப்படும். பயன்படுத்தப்படாத அனுமதிப் பங்கு இறுதி அனுமதிப்பங்கு ஒதுக்கீடு ஏற்றுக் கொள்ளப்படுவதற்கு முன்னுள்ள காலப்பகுதியில் கையளிக்கப்பட்டிருக்குமாயின் கையளிக்கப்பட்ட தொகையில் 100 சதவீதம் தொடர்ந்து வருமாண்டில் ஒதுக்கப்படும். முதலாவது கட்டடத்தின் இறுதிக்கும் ஐந்தாவது மாத (இரண்டாவது கட்டம்) இறுதிக்குமிடையிலும் ஆறு மாதத்திலிருந்து எட்டுமாதம் வரையிலான (மூன்றாவது கட்டம்) காலப் பகுதிகளுக்குமிடையிலும் கையளிக்கப்படுமாயின் கையளிக்கப்பட்ட அனுமதிப் பங்கில் முறையே 75 சதவீதமும் 50 சதவீதமும் அடுத்துவருமாண்டுகளில் வரவு வைக்கப்படும். எனினும் ஏற்றுமதியாளர் ஒருவர் தனது செயலாற்ற அனுமதிப் பங்கில் 40 சதவீதத்திற்கும் கூடுதலான பங்கினை மாற்றல் செய்வாராயின் இனிவரும் ஆண்டுகளில் அவரது அனுமதிப்பங்கு ஒதுக்கீடு குறைக்கப்படுவதற்கு பொறுப்புடையவராவர். இவ்வரையறை 2000ஆம் ஆண்டில் செயலாற்றப் பங்கின் 40 சதவீதத்திலிருந்து 60 சதவீதத்திற்கு அதிகரிக்கப்பட்டதுடன் 2001ஆம் ஆண்டில் 100 சதவீதத்திற்கு அதிகரிக்கப்படும் எனவும் எதிர்பார்க்கப்படுகின்றது.

அனைத்து வகைகளிலும் 4,000 இடசின்களுக்கு குறைவான அளவை ஏற்றுமதி செய்யும் சிறு அனுமதிப்பங்குகளை வைத்திருப்பவர்களுக்கு விகித சம அடிப்படையில் அனுமதிப் பங்கில் ஏறத்தாழ மூன்று சதவீதம் ஒதுக்கப்பட்டது. வளர்ச்சி மற்றும் நெகிழ்ச்சி ஒதுக்குகளின் பேரில் ஓராண்டில் கிடைக்கத்தக்க தாகவுள்ள அனுமதிப் பங்கில் ஏறத்தாழ 50 சதவீதம், புதிய பொறிகள் மற்றும் கருவிகளில் முதலீடு செய்வதன் மூலம் அவற்றின் இயலளவை விரிவுபடுத்தும் புதிய முதலீட்டாளர்கள் மற்றும் ஏற்கனவேயுள்ள தயாரிப்பாளர்களுக்காக ஒதுக்கப்படும். செயலாற்ற அடிப்படையிலான அனுமதிப் பங்கு ஒதுக்கீட்டினை உடனடுத்து ஊழியர்களின் எண்ணிக்கையின் விகிதாசார அடிப்படையில் முக்கிய குழு அனுமதிப் பங்குத் திட்டத்தின் கீழ் எஞ்சிய அனுமதிப்பங்கு ஒதுக்கீடு செய்யப்பட்டது. ஒதுக்கீடு செய்யப்படும்போது அனுமதிப் பங்கைக் கொண்டிராத நாடுகளுக்கான ஏற்றுமதியாளர்களுக்கும் அனுமதிப் பங்கு நாடுகளுக்கான அனுமதிப்பங்கிற்கு உட்படாத விடயங்களின் ஏற்றுமதியாளர்களுக்கும் முன்னுரிமை வழங்கப்பட்டது. முன்னைய ஆண்டின் குறைப்பயன்பாட்டு வகைகள் குறைந்த கேள்வியைக் கொண்டவையென வரையறுக்கப்பட்டு ஏழு வேலைநாட்களுக்குள் அவை கப்பலேற்றப்பட வேண்டுமென்ற நிபந்தனையுடன் ஒதுக்கீடு செய்யப்பட்டது.

முதலீட்டுச்சபையும் கைத்தொழில் அபிவிருத்தி அமைச்சின் புடவைப் பிரிவும், புடவை அனுமதிப் பங்கிற்கெதிராக ஏற்றுமதி உரிமங்களை (ஏற்றுமதி விசா) வழங்குவதன் மூலமாக புடவை அனுமதிப் பங்கிற்கு உதவியது. ஆள் ஒருவர் பயணம் செய்யும் விடயத்தில் வழங்கப்படும் விசாவை ஒத்த விதத்தில் அனுமதிப் பங்கு முறையின் கீழ் இலங்கையிலிருந்தான புடவைகள் மற்றும் ஆடைகளின் ஏற்றுமதிகளுக்கும் சட்டரீதியான நுழைவுப் பத்திரம் அல்லது விசா தேவைப்படுகிறது. புடவை அனுமதிப்பங்கின் கீழ் ஏற்றுமதித் தொகுதியொன்று கப்பற்படுத்தப்பட்டதுடன் ஏற்றுமதியாளர்கள் நிறுவனம் முதலீட்டுச்சபை தொழில் முயற்சியா அல்லது முதலீட்டுச் சபையல்லா தொழில் முயற்சியா என்பதனைப் பொறுத்து, முதலீட்டுச் சபையிடமிருந்து அல்லது அமைச்சிடமிருந்து விசாவைப்

பெற்றுக்கொள்ள வேண்டும். உரிய அதிகாரிகளிடம் கப்பற்படுத்தல் ஆவணங்களை சமர்ப்பிப்பதன் பேரில் விசா வழங்கப்படுவதுடன் இது கொள்வனவாளர் களினால் ஏற்றுமதிப் பொதிகளை அவர்களது சுங்கத்திலிருந்து அகற்றுவதற்கு அத்தியாவசியமான தாகும். செயலாற்ற அனுமதிப்பங்கு ஒதுக்குகளுக் கெதிரான உற்பத்திகளின் கப்பற்படுத்தல் ஊ.சே.நிதியம் மற்றும் ஊ.ந. நிதிய உதவுதொகைகளின் முழுக் கொடுப்பனவும் செய்யப்பட்டமை நிரூபிக்கப்பட்டால் மட்டுமே அனுமதிக்கப்படும்.

2000ஆம் ஆண்டில் ஏறத்தாழ 33 அனுமதிப் பங்கு வகைகள் ஐக்கிய அமெரிக்காவிற்கு கிடைக்கத்தக்கதாக இருந்தவேளையில் முறையே கனடாவிற்கும், ஐரோப்பிய ஒன்றியத்திற்கும் 15 வகைகளும் 4 வகைகளும் கிடைக்கத்தக்கதாக இருந்தன. ஐக்கிய அமெரிக்காவிற்கும், ஐரோப்பிய ஒன்றியத்திற்கும், கனடாவிற்குமான கிடைத்தக்கதாக இருந்த அடிப்படை அனுமதிப் பங்கு முறையே 11 சதவீதத்தினாலும், 16 சதவீதத்தினாலும் 20 சதவீதத்தினாலும் உயர்வடைந்தன. இதன்படி 2000ஆம் ஆண்டில் கிடைக்கத்தக்கதாகவிருந்த மொத்த அனுமதிப் பங்கு 12 சதவீதத்தினால் அதிகரித்தது. நெகிழ்ச்சி ஏற்பாடுகளின் கீழ் 4.1 மில்லியன் மேலதிக துண்டுகள் இலங்கைக்கு கிடைக்கச் செய்யப்பட்டன. எனினும் 2000ஆம் ஆண்டில் மொத்த அனுமதிப் பங்கும் பயன்பாட்டு வீதமும் முன்னைய ஆண்டினைப்போன்றே 80 சதவீதத்தில் காணப்பட்டது. ஐக்கிய அமெரிக்க அனுமதிப் பங்கின் பயன்பாடு 1999இன் 85 சதவீதத்திலிருந்து 2000 ஆம் ஆண்டில் 85.4 சதவீதத்திற்கு அதிகரித்தது. அனுமதிப் பங்கின் பயன்பாடு வேறுபட்ட உற்பத்தி வகைகளுக்கும் நாடுகளுக்குமிடையே பரந்தளவில் வேறுபடுகின்றது. குறைப்பயன்பாட்டிற்கு குறிப்பிட்ட விடயங்களுக்கு போதுமானளவு கேள்வி காணப்படாமையின் காரணமாக உள்ளூர் உற்பத்தியாளர்கள் ஏனைய அனுமதிப் பங்குவகைகளின் கீழான உயர் பெறுமதி கூட்டப்பட்ட ஆடைகளை உற்பத்தி செய்வதற்கு அல்லது அனுமதிப் பங்கல்லாத ஆடைகளை உற்பத்தி செய்வதற்கு தமது இயலளவைப் பயன்படுத்தியமை யினால் உருவானதாகும். அனுமதிப் பங்கல்லா ஆடை வகைகளின் அதிகரித்த ஏற்றுமதிகளும் பிரபல்யம்பெற்ற சில வகைகள் முழுமையாகப் பயன்படுத்தப்பட்டமையும் இதற்கு சான்று பகருகின்றன. ஐக்கிய அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய ஒன்றியம் என்பனவற்றிற்கான பெண்கள் ஆடைகள், ஆண் பெண் மேலங்கிகள், நீளக்காற்சட்டைகள் பெண்கள் மற்றும் சிறுமிகளுக்கான மேற்சட்டைகள் ஆண்கள் பெண்களுக்கான நீண்ட காற்சட்டைகள் ஆண்களுக்கான காற் சட்டைகளும் குறுங்காற்சட்டைகளும் மற்றும் நீண்ட தளர்ந்த ஆடைகள் மற்றும் காற் சட்டைகள் போன்ற குறிப்பிட்ட பிரபல்யமான வகைகளுக்காக ஒதுக்கப்பட்ட அனுமதிப்பங்கு முழுமையாகப் பயன்படுத்தப்பட்டுள்ளது.

ஐரோப்பிய ஒன்றியம் மற்றும் கனடாவிலிருந்தான அனுமதிப் பங்குகளில் அதிகரிப்புக் காணப்பட்டபோதும் அந்நாடுகள் தொடர்பான அனுமதிப் பங்குப் பயன்பாட்டு வீதங்கள் ஐக்கிய அமெரிக்காவின் சந்தைகளிலும் பார்க்க சார்புரீதியில் குறைவாகவே காணப்பட்டன. ஐரோப்பிய ஒன்றிய நாடுகளிற்கான அனுமதிப் பங்கின் மொத்தப் பயன்பாட்டுவீதம் 1999இன் 58 சதவீதத்திலிருந்து 2000ஆம் ஆண்டில் 54 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்த வேளையில் கனடாவின் பயன்பாட்டு வீதம் 41 சதவீதத்திலிருந்து 49 சதவீதத்திற்கு அதிகரித்தது. ஐரோப்பிய ஒன்றியத்திற்கான வகைகள் 6 (ஆண்கள் மற்றும் பெண்களுக்கான நீண்ட காற்சட்டைகள் மற்றும் ஆண்களுக்கான காற்சட்டைகள் மற்றும் குறுங்காற் சட்டைகள்) வகைகள் 7 (பெண்கள் மற்றும் சிறுமிகளுக்கான நெய்யப்பட்ட மற்றும் பின்னப்பட்ட மேற்சட்டைகள்) கனடாவிற்கான வகை 5 (நீளக் காற்சட்டைகள், நீண்ட தளர்த்தியான முழு ஆடை மற்றும் காற்சட்டைகள் பெண்களுக்கான மேலங்கிகள்) மற்றும் வகை 2 (குளிர்கால வெளிச்செல்லும் ஆடைகள்) என்பன பிரபல்யம் பெற்ற வகைகளாகக் காணப்பட்டதுடன் பயன்பாட்டு வீதங்கள் குறைப்பயன்பாட்டின் கீழ் காணப்பட்ட பிரபல்யம் குறைந்த வகைகளிலும் பார்க்க குறிப்பிடத்தக்களவிற்கு உயர்வாகக் காணப்பட்டன. அனுமதிப்பங்கு ஆடைகளில் பெரும் விகிதத்தினைக் கொண்ட ஐக்கிய அமெரிக்காவிற்கான புடவைகள் மற்றும் ஆடைகளின் மொத்த ஏற்றுமதிகள் 2000ஆம் ஆண்டில் 26 சதவீதத்தினால் அதிகரித்தன. எனினும் அனுமதிப் பங்கு பயன்பாட்டு வீதம் குறைவாகக் காணப்பட்டபோதும் ஐரோப்பிய ஒன்றியத்திற்கான ஏற்றுமதிகளிலிருந்தான வருவாய்கள் 16 சதவீதத்தினால் அதிகரித்தமையானது ஐரோப்பிய ஒன்றியத்தில் அனுமதிப் பங்கல்லா சந்தைகளை நோக்கிய ஒரு அசைவு காணப்படுவதனை எடுத்துக் காட்டுவதாகவுள்ளது. கனடாவிற்கான புடவைகள் மற்றும் ஆடைகளின் ஏற்றுமதிகளிலிலிருந்தான வருவாய்கள் 44 சதவீதத்தினால் அதிகரித்தன. 2000ஆம் ஆண்டில் அனுமதிப் பங்கல்லா நாடுகளிலிருந்தான வருவாய்களும் கூட 36 சதவீதத்தினால் அதிகரித்து ஏற்றுமதிச் சந்தைகள் பன்முகப்படுத்தப்பட்டு வருவதற்கான அறிகுறிகளையும் அனுமதிப் பங்கிலிருந்து அனுமதிப் பங்கல்லா வகைகளுக்கு மாறுவதனையும் எடுத்துக்காட்டுகின்றது.

ஐரோப்பிய ஒன்றிய நாடுகளுக்கான புடவைகள் மற்றும் ஆடைகளின் ஏற்றுமதி மீதான அனுமதிப் பங்குக் கட்டுப்பாடுகளை அகற்றுவதற்காக 2000ஆம் ஆண்டில் இலங்கை ஐரோப்பிய ஒன்றியத்துடன் பரஸ்பர புரிந்துணர்வு உடன்படிக்கையொன்றில்

கையெழுத்திட்டுள்ளது. அதற்குப் பதிலாக இலங்கை பொருட்களுக்கு 0, 5, 10 மற்றும் 17.5 சதவீதங்களில் தீர்வை வீதங்களை கட்டுப்படுத்துவதற்கு (தற்போதைய வீதங்கள் முறையே 0, 0, 25 மற்றும் 10 சதவீதங்கள்) உடன்பட்டது. எனினும், ஏற்றுமதிகளைக் கண்காணிக்கின்ற அதே வேளையில் ஏற்றுமதி செய்யப்பட்ட விடயங்கள் இலங்கையில் தயாரிக்கப்பட்டவை என்பதனை உறுதிப்படுத்தும் நோக்கத்திற்காக ஐரோப்பிய ஒன்றியத்திற்கான ஏற்றுமதியாளர்கள் முதலீட்டுச் சபையிடமிருந்தோ அல்லது கைத்தொழில் அபிவிருத்தி அமைச்சின் புடவைப் பிரிவிலிருந்தோ ஏற்றுமதி விசாவினைப் பெற்றுக்கொள்ள வேண்டியிருக்கும். அனுமதிப் பங்கு முறையின் கீழுள்ள 4 வகைகளுக்குப் புறம்பாக 2000ஆம் ஆண்டில் மூன்று புதிய வகைகள் விசா தேவைப்பாடுகளின் கீழ் கொண்டுவரப்பட்டன.

மின்னியல் ஊடகங்கள் ஊடாக புடவைகள் மற்றும் ஆடைகள் ஏற்றுமதி மீதான மிக முக்கியமான புள்ளி விபரங்களை ஐக்கிய அமெரிக்காவின் சங்கத்திற்கு நேரடியாக அனுப்பி வைப்பதற்காக 1999 திசெம்பரில் தொடங்கப்பட்ட மின்னியல் விசா தகவல்முறை 2000ஆம் ஆண்டில் தொழிற்பட்டது. முன்னைய முறையின்கீழ் ஏற்றுமதியாளர்கள் ஆவணங்களை இறக்குமதியாளர்கள் தமது நாட்டில் பொருட்களை அகற்றிக் கொள்வதனை இயலச் செய்யும் விதத்தில் அனுப்பிவைக்க வேண்டியிருந்தது. இந்த நடைமுறையானது போலிகள், கையெழுத்து மோசடிகள் மற்றும் சட்டத்திற்கு மாறான வழிமுறைகளினால் பாதிக்கப்பட்டன. அண்மைய ஆண்டுகளில் இடம்பெற்றுவரும் அதிகரித்துச் செல்லும் விசா மோசடிகளின் எண்ணிக்கையானது புடவை அனுமதிப்பங்கு சபையினால் இனங்காணப்பட்டு அத்தகைய இடர்பாடுகளை வெற்றி கொள்வதற்காக இலங்கை மின்னியல் விசா தகவல்முறையில் இணைந்தது.

ஏற்றுமதியாளருக்கான ஊக்குவிப்புக்கள்

இத் துறையின் போட்டித் தன்மையினையும் இயலளவுத் தன்மையினையும் உயர்த்தும் நோக்குடன் ஏற்றுமதியாளர்களையும் அதேபோன்று கைத்தொழிலதிபர்களையும் இலக்காகக் கொண்டு 2000ஆம் ஆண்டு வரவு செலவுத் திட்டத்தில் முன் மொழியப்பட்ட பல்வேறு ஊக்குவிப்புக்களை இவ்வாண்டுக்காலத்தில் அரசு நடைமுறைப்படுத்தியது. துணிகர தொழில் முயற்சி மூலதனக் கம்பனிகள் அவர்களுக்கு வழங்கப்பட்ட பத்து ஆண்டு வரிவிடுப்பிலிருந்து வெளியேவரவும் அவர்களது சொந்தத் தெரிவில் குறிப்பாக முன்னுரிமைத் துறைகளிலும் மென்பொருள் கைத்தொழில்களிலும் முதலீடு செய்வதற்கான விருப்பத்தேர்வு வழங்கப்பட்டது. அவர்கள் முதலீடு செய்யக்கூடிய இடர்நேர்வு தொழில் முயற்சிகளை வழிகாட்டல்கள் குறித்துரைத்திருப்பதனால் இக் கம்பனிகள் முதலீடு செய்யத்தக்க நிதிகளை பெருமளவில் திரட்டியுள்ளன. பன்முகப்பட்ட முதலீட்டு நடவடிக்கைகளில் இவ்வொன்றுதிரண்ட நிதியத்தினை முதலீடு செய்வதற்காக இவ்வூக்குவிப்பு வழங்கப்பட்டது. அடுத்த இரண்டு ஆண்டுகளில் அனைத்து மாவட்டங்களையும் உள்ளடக்கி முக்கியமாக குடித்தொகை நிறைந்த இடங்களில் 50 தகவல் தொழில்நுட்ப பயிற்சி நிறுவனங்களை ஏற்படுத்துவதனை ஊக்குவிக்கும் பொருட்டு சிறப்பு ஊக்குவிப்புக்கள் வழங்கப்பட்டன. பயிற்சியளிப்பவர்களை பயிற்றுவிப்பதற்கான செலவு, கட்டடங்களைப் புதுப்பித்தல் மற்றும் மெருகூட்டி நவீனப்படுத்தல், உள்கட்டமைப்பு வசதிகளை பெற்றுக்கொள்ளல் உள்ளிட்ட அத்தகைய வசதிகளை ஏற்படுத்துவது தொடர்பான ஆரம்ப செலவுகள் முதலீட்டுச்சபையினால் வழங்கப்படும். அவர்கள் கொழும்பு மாவட்டத்திற்கு வெளியே நிறுவுவார்களாயின் ஆண்டுக்கு ஆகக்குறைந்தது 300 மாணவர்களையாவது பயிற்றுவிக்க வேண்டும் என்ற நிபந்தனைக்குட்பட்டு ஐந்தாண்டு வரிவிடுப்பு வழங்கப்படும். மென் பொருள் கைத்தொழில்களை மேம்படுத்தும் பொருட்டு 1998 வரவு செலவுத் திட்டத்தில் கிடைக்கச் செய்யப்பட்ட சலுகைகள் தொடர்ந்துமிருக்கும்.

முன்னேற்றங்கண்ட தொழில்நுட்பங்களிலும் உற்பத்தியாக்கத்தினை மேம்படுத்துவதிலும் முதலீடுகளை ஊக்குவிக்கும் பொருட்டு 1996 வரவு செலவுத் திட்டத்தில் அறிமுகப்படுத்தப்பட்ட இறை ஊக்குவிப்புத் திட்டங்கள் 2000ஆம் ஆண்டு வரவு செலவுத்திட்டத்தின் மூலம் மேலும் இரு ஆண்டுகளுக்கு நீடிக்கப்பட்டது. இத் திட்டமானது முன்னேற்றங்கண்ட தொழில்நுட்பங்களில் முதலீடு செய்வதற்காக புதிய மற்றும் ஏற்கெனவேயுள்ள கம்பனிகளுக்கு இறக்குமதிகளை தீர்வையற்ற அனுமதித்த வேளையில் சிறிய கைத்தொழில்களும் நன்மையடையும் பொருட்டு 1999 வரவு செலவுத் திட்டத்தின் மூலம் ஆகக் குறைந்த முதலீட்டுத் தொகை மீதான வரையறை நீக்கப்பட்டது.

ஏற்றுமதியாளர்களுக்கான நிறுவன ரீதியான உதவி

ஏற்றுமதியாளர்கள், பெருந்தோட்டக் கைத்தொழில்கள் அமைச்சு, ஏற்றுமதி அபிவிருத்திச்சபை, மற்றும் ஏற்றுமதிக் கொடுகடன் காப்புறுதிக் கூட்டுத்தாபனம் மற்றைய தொடர்பான அமைச்சுக்கள் மற்றும் அரச நிறுவனங்கள் போன்றவற்றிடமிருந்து நிறுவன ரீதியான உதவிகளைத் தொடர்ந்தும் பெற்றனர். பெருந்தோட்டக் கைத்தொழில்கள் அமைச்சு மரபுரீதியான ஏற்றுமதிகளின் அபிவிருத்திக்கு உதவி வழங்கியவேளையில் ஏற்றுமதி அபிவிருத்திச்சபை மரபு வழியல்லா ஏற்றுமதிகளின் அபிவிருத்தியிலும்

மேம்பாட்டிலும் முக்கிய பங்கினை வகிக்கின்றது. இலங்கை ஏற்றுமதிக் கொடுகடன் காப்புறுதிக் கூட்டுத்தாபனம் கொடுகடன் காப்புறுதியையும் உத்தரவாதப் பணிகளையும் வழங்குகிறது. மற்றைய தொடர்பான நிறுவனங்கள் குறிப்பாக வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சும் உள்நாட்டு மற்றும் பன்னாட்டு வர்த்தக வாணிப அமைச்சும் இருபுடை, பிராந்திய மற்றும் பல்புடை அமைப்புக்களினூடாக கிடைக்கத்தக்க வசதிகள் பற்றி ஏற்றுமதியாளர்களுக்கு அறிவூட்டுவதிலும் தொடர்ந்தும் ஈடுபட்டதுடன் இலங்கைத் தொழில் முயற்சியாளர்களுக்கும் அவர்களின் வெளிநாட்டு இணைக்கிணையாளர்களுக்குமிடையில் தொடர்புகளை ஏற்படுத்துகின்ற கருவிகளாகவும் இருந்தன. வர்த்தக சம்மேளனம் போன்ற தனியார்துறை நிறுவனங்களும், ஏற்றுமதியாளர்களுக்கு நிறுவன ரீதியான உதவியை வழங்கின.

இலங்கை ஏற்றுமதிகளை மேம்படுத்துவதற்காக, ஏற்றுமதியாளர்களுக்கான காப்புறுதிக் கொள்கை களையும், வங்கிகள் மற்றும் நிதியியல் நிறுவனங்களுக்கு உத்தரவாதங்களையும் வழங்குவதே இலங்கை ஏற்றுமதிக் கொடுகடன் காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தின் குறிக் கோளாக இருந்தது. 2000ஆம் ஆண்டில் நடைமுறையிலிருந்த காப்புறுதிக் கொள்கைகளும் உத்தரவாதங்களும் 1999 திசெம்பர் இறுதியில் நடைமுறையிலிருந்த 244 காப்புறுதிக் கொள்கைகளுடன் ஒப்பிடுகையில் ரூ.1,032 மில்லியன் தொகையுடன் கூடிய 296 கொள்கைகள் காணப்பட்டன. 1999இன் 37 காப்புறுதிக் கொள்கைகளுக்கெதிராக 2000ஆம் ஆண்டில் ரூ.561 மில்லியன் பெறுமதி கொண்ட 47 புதிய காப்புறுதிக் கொள்கைகள் வழங்கப்பட்டன. 2000ஆம் ஆண்டு இறுதியில் நடைமுறையிலிருந்த புதிய உத்தரவாதங்கள் ரூ.471 மில்லியன் பெறுமதியுடன் 249 ஆகக் காணப்பட்டன. புதிய மற்றும் சிறிய அளவு ஏற்றுமதியாளர்களுக்காக மொத்தமாக ரூ.11 மில்லியன் கொண்ட ஒரு சில காப்புறுதிக் கொள்கைகளும் காணப்பட்டன. ஈராக்கிற்கான தேயிலை ஏற்றுமதியினை உள்ளடக்குகின்ற சிறப்புக் காப்புறுதியொன்று 2000ஆம் ஆண்டில் இலங்கை ஏற்றுமதிக் கொடுகடன் காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தினால் மேற்கொள்ளப்பட்டது. உணவு நிகழ்ச்சித் திட்டத்திற்கான ஐக்கிய நாடுகளின் எண்ணெயின் 6ஆவது கட்டத்தின் கீழ் இலங்கை தனியார்துறை தேயிலை ஏற்றமதியாளர்களுக்கு பிற்போடப்பட்ட கொடுப்பனவு கொடுகடன் வசதிகள் வழங்கப்பட்டன.

ஏற்றுமதி அபிவிருத்திச்சபை அதன் தொழில்நுட்ப மற்றும் தேர்ச்சி அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் 93 நிகழ்ச்சித் திட்டங்களை நடத்தியது. இது 36 பொருட்கள் தொடர்பான சிறப்பு மற்றும் பொதுவான பன்னாட்டு வர்த்தகக் கண்காட்சிகளில் இலங்கை ஏற்றுமதியாளர்கள் பங்கேற்பதற்கு ஒழுங்குகளைச் செய்தது. இக் கண்காட்சிகளில் தொடக்கத்தில் பெறப்பட்ட ஏற்றுமதிக் கட்டளைகள் தொடர்பான மொத்தப் பெறுமதி ரூ.385 மில்லியனாக இருந்தது. ஏற்றுமதி அபிவிருத்திச்சபை கடல், வான் வழி சரக்குக் கட்டணம் மற்றும் களஞ்சியப்படுத்தல் தொடர்பான பல்வேறுபட்ட தொழிற்பாட்டுப் பிரச்சனைகளுக்கு ஏற்றுமதியாளர்கள் தீர்வு காண்பதற்கு தொடர்ந்தும் மதியுரைகளையும் உதவிகளையும் வழங்கியது. சுங்கம் மற்றும் உள்நாட்டு பன்னாட்டு வர்த்தக வாணிப அமைச்சின் ஒத்துழைப்புடன் களஞ்சிய வர்த்தகர்களின் பிரச்சனைகளைத் தீர்ப்பதற்காகவும் களஞ்சிய வர்த்தகர்களுக்கான கையேட்டினைத் தயாரிப்பதற்காகவும் கூட்டங்கள் நடத்தப்பட்டன. சிறிய மற்றும் நடுத்தர அளவுக் கைத்தொழில் முயற்சிகளை அபிவிருத்தி செய்வதற்கு உதவும் பொருட்டு பல விழிப்புணர்வு நிகழ்ச்சித் திட்டங்களும் ஆய்வரங்குகளும் நடத்தப்பட்டன. ஏற்றுமதி அபிவிருத்திச்சபை ஏற்றுமதித் துறைக்கு கணனிமயப்படுத்தப்பட்ட தரவுத் தள வசதிகள், செய்திரட்டு வசதிகள் போன்ற பன்முகப்படுத்தப்பட்ட பணிகளை வழங்குவதற்காக அதன் மூலவளங்களை வழிப்படுத்தியிருக்கிறது.

2000ஆம் ஆண்டில் வர்த்தகச் சம்மேளனம் பல்வேறு விடயங்கள் தொடர்பாக பல ஆய்வரங்குகளையும் கலந்துரையாடல்களையும் நடத்தியது. சம்மேளனம், திறைசேரி, ஏற்றுமதியாளர்கள் மற்றும் சுங்கத்திணைக்களம் என்பனவற்றிற்கிடையேயான மாதாந்தக் கூட்டத்தில் பங்கேற்றதுடன் அதன் உறுப்பினர்களினால் எதிர் நோக்கப்பட்ட பல பிரச்சனைகளையும் தீர்த்து வைத்தது.

கப்பற் கட்டண வீதங்கள்

கப்பற் சட்டண வீதங்கள் உலகளாவிய கேள்வி மற்றும் நிரம்பல்களினாலும் கப்பல் நிறுவனங் களிடையேயான போட்டியினாலும் ஓரளவிற்கு நிர்ணயிக்கப்படுகின்றன. இலங்கையில் உள்ளூர் முகவர்கள், பெரும்பாலும் வெளிநாடுகளில் தொழிற்படும் முதன்மைக் கப்பற் கம்பனிகளினால் அவர்களுக்கு வழங்கப்பட்ட வீதங்களையே நடைமுறைப்படுத்து கின்றனர். ஆசியாவிலுள்ள சேர்விடங்களை உள்ளடக்குகின்ற கப்பற் கம்பனிகள் அனைத்து பண்டங்களுக்கான கப்பற் கட்டண முறையினை தொடர்ந்தும் பின்பற்றிய வேளையில் ஐக்கிய இராச்சியம், வடகண்டம், (சேர்மனி, பெல்ஜியம், சுவிச்சர்லாந்து, நெதர்லாந்து) மத்தியதரைக் கடல், பிரான்சு, ஐக்கிய அமெரிக்கா மற்றும் கனடா என்பனவற்றை உள்ளடக்கிய கப்பற் கம்பனிகள் 2000ஆம் ஆண்டிலும் பண்ட அடிப்படையிலான கப்பற் கட்டணமுறைமைய பின்பற்றின.

2000ஆம் ஆண்டுகளில் பல்வேறு சேருமிடங்களுக்குமான சராசரி கப்பற் கட்டண வீதங்கள் கலப்பான மாற்றங்களைக் காட்டின. மொத்த சராசரி கப்பற் கட்டண வீதங்கள் 1999இனைவிட அதிகரிப்பொன்றினைப் பதிவுசெய்துள்ளன. 2000ஆம் ஆண்டில் ஐக்கிய அமெரிக்கா, சவூதி அரேபியா, டுபாய் என்பனவற்றிற்கான சராசரி வீதங்கள் அதிகரித்த வேளையில் ஐக்கிய இராச்சியம், குவைத், அவுத்திரேலியா, யப்பான் மற்றும் சிங்கப்பூருக்கான சராசரி வீதங்கள் குறைவாக இருந்தன. ஐக்கிய இராச்சியத்திற்கும் வட கண்டத்திற்குமான இறப்பருக்கான சராசரிக் கப்பற் கட்டண வீதம் அதிகரித்த வேளையில் தேயிலை, இறப்பர் டயர்கள், தேங்காய்த் துருவல், செயற்படு கரியம் மற்றும் இறப்பர் கையுறைகள் என்பனவற்றிற்கான கப்பற் கட்டணங்கள் குறைவடைந்தன. ஆடைகளுக்கான கப்பற் கட்டண வீதம் 2000ஆம் ஆண்டில் மாற்றமின்றியிருந்தது. 2000ஆம் ஆண்டில் ஐக்கிய அமெரிக்காவிற்கான தேயிலை, தென்னந்தும்பு, செயற்படு கரியம் என்பனவற்றுக்கான சராசரி கப்பற் கட்டண வீதம் அதிகரித்தது. இத்தகைய வீதங்கள் தும்பு போன்ற குறைந்த கஏபெ பெறுமதிகளைக் கொண்ட பண்டங்களின் ஏற்றுமதியாளர்களின்மீது பாதகமான தாக்கத்தினைக் கொண்டிருந்தன. இது ஐக்கிய அமெரிக்காவின் முக்கிய தும்புச் சந்தைகளில் இலங்கைத் தும்பின் விலை அதிகரிக்க வழிவகுக்கும்.

கப்பற் கம்பனிகள் 1999இன் முதற் காலாண்டில் துறைமுக மேடைக் கையாளல் கட்டணத்தினை 41 சதவீதத்தினால் அதிகரித்தன. இவ்வீதம் 2001ஆம் ஆண்டு சனவரி 1ஆம் நாளிலிருந்து மீண்டும் 33 சதவீதத்தினால் அதிகரிக்கப்படவுள்ளது. எனினும், கப்பற்படுத்தல் அமைச்சினால் கேட்டுக் கொள்ளப்பட்டவாறு துறைமுக மேடை கையாளல் கட்டணத்தினை அதிகரிப்பது என்ற தீர்மானம் குறைந்தது எதிர்வரும் ஆறு மாதங்களுக்குள் தொழிற்பாட்டிற்கு வரும் என எதிர்பார்க்கப்படவில்லை.

9.12 வர்த்தக உறவுகள், வர்த்தகப்படுத்தல் மற்றும் தீரப்பனவு ஒழுங்குகள்

இலங்கை 2000ஆம் ஆண்டில் ஐரோப்பிய ஒன்றியத்துடன் உடன்படிக்கையொன்றை செய்து கொண்டமையின் மூலமும் பாகித்தானுடன் சுதந்திர வர்த்தக உடன்படிக்கையொன்றை செய்து கொள்வதற்கான சாத்தியம் பற்றிய கலந்துரையாடலை நடாத்தியமையின் மூலமும் சுதந்திர வர்த்தக அமைப்பொன்றினை பேணுவதற்கான அதன் தொடர்ச்சியான கடப்பாட்டினைக் காட்டியது. இந்திய-இலங்கை சுதந்திர வர்த்தக உடன்படிக்கை இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசினாலும் இந்தியக் குடியரசினாலும் 1998 திசெம்பரில் கையெழுத்தானதுடன் 2000ஆம் ஆண்டு பெப்புருவரியில் தொழிற்பாட்டிற்கு வந்தது. இலங்கையின் தீர்வைச் சலுகைகள் 2000ஆம் ஆண்டு பெப்புருவரி 15ஆம் நாளன்று நடைமுறைக்கு வந்த வேளையில் இந்தியா 2000 மாச்சு 1ஆம் நாள் தொடக்கம் உடன்படிக்கையை நடைமுறைப்படுத்தியது. உடன்படிக்கையின் படியான தேயிலை மற்றும் ஆடை ஏற்றுமதிகள் 2000ஆம் ஆண்டு ஏப்பிறலிலிருந்து தொடங்கின. இவ்வுடன்படிக்கையின்கீழ் 2000ஆம் ஆண்டிற்கான தேயிலைக்குரிய அனுமதிப்பங்கு 11.25 மில்லியன் கிலோக்கிறாம்களுக்கு மட்டுப்படுத்தப்பட்ட வேளையில் ஆடைகளுக்கான அனுமதிப்பங்கு 6.67 மில்லியன் துண்டுகளுக்கு மட்டுப்படுத்தப்பட்டிருந்தது. இதில் ஆகக்குறைந்தது 5 மில்லியன் துண்டுகள் இந்தியாவில் தயாரிக்கப்பட்ட துணியிலிருந்து இலங்கையில் தயாரிக்கப்பட்டிருக்க வேண்டும். தனியொரு உற்பத்திவகை 1.5 மில்லியன் துண்டுகளை விஞ்சக்கூடாது.

2000ஆம் ஆண்டில் தேயிலை அனுமதிப்பங்கின் பயன்பாடு மிகக் குறைவாக இருந்தது. சுதந்திர வர்த்தக உடன்படிக்கையின்கீழ் இலங்கை இந்தியாவிற்கு 459.2 மெற்றிக்தொன் தேயிலையை மட்டுமே ஏற்றுமதிசெய்தது. இது மொத்த ஒதுக்கில் 4 சதவீதமேயாகும். குறைந்த ஏற்றுமதிக்கான முக்கிய உதவு காரணிகளாக சுதந்திர வர்த்தக உடன்படிக்கையின்கீழான தேயிலை ஏற்றுமதி கொச்சிக்கும் கல்கத்தாவிற்கும் மட்டுப்படுத்தப்பட்டமை இந்தியத் தேயிலையுடன் ஒப்பிடுகையில் இலங்கைத் தேயிலையின் உயர்ந்த விலைகள், நன்கு வேரூன்றிய சிறந்த வகை வர்த்தக அடையாளங்களைக்கொண்ட தேயிலையிலிருந்தான கடுமையான போட்டி மற்றும் சுதந்திர வர்த்தக உடன்படிக்கையின்கீழ் கலக்கப்பட்ட தேயிலையின் ஏற்றுமதியை தடைசெய்கின்ற மூலப் பிரமாணங்களின் ஒழுங்குவிதிகள் என்பன காணப்பட்டன. சுதந்திர வர்த்தக உடன்படிக்கைகளின் கீழ் ஆடைகளின் ஏற்றுமதிகள் மிகவும் ஊக்கமளிப்பதாக இல்லை. ஆடை ஏற்றுமதிகள் ஒரு சில நூறு ஆடைகளைக் கொண்ட சில மாதிரிக் கப்பற் படுத்தல்களுக்கு மட்டுப்படுத்தப்பட்டிருந்தது. ஆடை விடயங்களுக்கு இந்தியாவினால் விதிக்கப்பட்ட சிறப்புத் தீர்வை, இரு துறைமுகங்களுக்கான நுழைவு மையங்களின் மீதான கட்டுப்பாடுகள், உற்பத்தி இடம் தொடர்பான கட்டுப்பாட்டு விதிகள், இலங்கையின் ஏற்றுமதிப் பொருட்களை இந்தியாவில் பிரபல்யப்படுத்துவதற்கான ஊக்குவிப்பு முயற்சிகள் போதியளவில் இல்லாமை என்பன குறைந்த ஏற்றுமதிக்கான உதவு காரணிகளாக விளங்கின.

சுதந்திர வர்த்தக உடன்படிக்கையின்கீழ் இந்தியாவிற்கான ஏற்றுமதிகள் ஐ.அ.டொலர் 9.2 மில்லியனாக இருந்தன. இது 2000ஆம் ஆண்டு மாச்சு-திசெம்பர் வரையான காலப்பகுதியில் இடம்பெற்ற

அட்டவணை 9.12
சுதந்திர வர்த்தக உடன்படிக்கையின் கீழ் ஏற்றுமதிச் செயலாற்றம்
மாச்சு - திசெம்பர் 2000 (அ)

உற்பத்தி	ஐ.அ.டொ. மில்லியன்	சதவீதப் பங்கு % சு.வ.உ இன் கீழ்	மொத்தம்
மொத்த ஏற்றுமதிகள்	52.0		100
சு.வ.உடன்படிக்கையின் கீழ் ஏற்றுமதிகள்	9.21	100	17.7
இதில் தாள் மற்றும் கழிவுத் தாள்கள்	4.28	46.5	8.2
கழிவு (உருக்கு/ செம்பு, அலுமினியம், ஈயம்)	1.65	17.9	3.2
தேயிலை	1.13	12.3	2.2
நினைவுப் பொறியமைப்பு	0.62	6.7	1.2
உலர்த்திய தேங்காய்ப்பசை/ கொழும்பு நீக்கியது	0.44	4.8	0.8
ஐஸ்கிறீம் பொறிகள்	0.26	2.8	0.5
கொரக்காய் புளி	0.22	2.4	0.4
பளிங்குத் துண்டுகள் மற்றும் மட்பாண்ட உற்பத்தி	0.16	1.7	0.3
மருந்தாக்கல் உற்பத்திகள்	0.11	1.2	0.2

மூலம்: வர்த்தகத் திணைக்களம்

(அ) இந்திய இலங்கை சுதந்திர வர்த்தக உடன்படிக்கை

இந்தியாவிற்கான மொத்த ஏற்றுமதிகளில் 17.7 சதவீதமாக இருந்தது. அப்பொருட்களில் கழிவுத்தாள்கள் மற்றும் செப்புக் கழிவு என்பன முறையே46.5 சதவீதத்திற்கும் 18 சதவீதத்திற்கும் வகைகூறிய வேளையில் தேயிலை 12 சதவீதத்திற்கு வகைகூறியது. சுதந்திர வர்தக உடன்படிக்கையின்கீழ் இந்தியாவிற்கு ஏற்றுமதி செய்யப்பட்ட புதிய விடயங்கள் அளவைகள், பளிங்குகள், இறப்பர் காலணிகள், மருந்தாக்கல் பொருட்கள், பதனிஉப்பட்ட உணவு உற்பத்திகள், ஐஸ்கிறீம் எந்திரங்கள், பிளாத்திக்கு மற்றும் மெத்தைகள் என்பனவற்றை உள்ளடக்கியிருந்தன.

2000ஆம் ஆண்டில் இந்தியாவிலிருந்தான இறக்குமதிகள் ஐ.அ.டொலர் 600 மில்லியனாக விளங்கி 17 சதவீதத்தினால் அதிகரித்தன. இலங்கையின் எதிர்மறைப் பட்டியலின்கீழ் இருந்த பொருட்களின் இறக்குமதி (அதாவது தீர்வைச் சலுகைகள் வழங்கப்படாத இறக்குமதிகள்) ஐ.அ.டொலர் 180 மில்லியன்களாக விளங்கி 32 சதவீதம்கொண்ட அதிகரிப்பினைப் பதிவுசெய்த வேளையில் 2000 மாச்சு-திசெம்பர் காலப்பகுதியில் எதிர்மறைப் பட்டியலில் உள்ளடக்கப்பட்டிராத விடயங்கள் ஐ.அ.டொலர் 331 மில்லியனுக்கு 11 சதவீதத்தினால் அதிகரித்தன.

சுதந்திர வர்த்தக உடன்படிக்கையின்கீழ் முதலீட்டுச் சபை 7 வெளிநாட்டு முதலீட்டு செயற்றிட்டங்களுக்கு ஒப்புதலளித்திருந்ததுடன் மேலும் 3 கம்பனிகளுக்கு ஒப்புதலளிக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகின்றது. ஏற்கெனவேயுள்ள இரு வெளிநாட்டு முதலீட்டு செயற்றிட்டங்கள் பரந்த இந்தியச் சந்தைக்கு பொருட்களை வழங்கத்தக்க விதத்தில் தமது உற்பத்தி வழிகளை விரிவாக்குவதற்குத் திட்டமிடப்பட்டுள்ளன. இச் செயற்றிட்டங்களிலான மொத்த முதலீடு ஐ.அ.டொலர் 86 மில்லியன்களாகும்.

புடவை மற்றும் ஆடைகள் பற்றிய வர்த்தகம் தொடர்பாக 2000ஆம் ஆண்டு திசெம்பர் 5ஆம் நாளன்று இலங்கை ஐரோப்பிய ஒன்றியத்துடன் பரஸ்பர புரிந்துணர்வு உடன்படிக்கையொன்றில் கையெழுத்திட்டது. இந் நடவடிக்கையானது, இலங்கையிலிருந்து ஐரோப்பிய ஒன்றியத்திற்கு ஏற்றுமதியாகும் புடவைகள் மற்றும் ஆடைகள் மீது தற்போதுள்ள அனைத்து அளவுசார் கட்டுப்பாடுகளையும் 2001 சனவரியிலிருந்து நீக்கிவிடும். இலங்கையின் புடவை மற்றும் ஆடைகளின்மீது தற்போதுள்ள அனுமதிப் பங்குக் கட்டுப்பாடுகள் 2005ஆம் ஆண்டளவில் முழுமையாக அகற்றப்படும் என எதிர்பார்க்கப்படுவதுடன், இது ஏற்றுமதியாளர்கள் தன்னம்பிக்கையைக் கட்டியெழுப்பவும், சுதந்திரமான சந்தையில் போட்டியிடுவதற்கு இயலளவைப் பன்முகப்படுத்தி விரிவாக்கவும் உதவும்.

2000ஆம் ஆண்டில் இலங்கை பல இருபுடை உடன்படிக்கைகளைச் செய்துள்ளது. உக்ரேனுடன் கைச்சாத்திடப்பட்ட வர்த்தக பொருளாதார மற்றும் தொழில்நுட்ப ஒத்துழைப்பின் மீதான உடன்படிக்கை, உக்ரேனுக்கான இலங்கைத் தேயிலையின் ஏற்றுமதி மீதான இறக்குமதித் தீர்வையில் 50 சதவீதக் குறைப்பை ஏற்படுத்தும். இலங்கை ஈரானுடன் இருபுடைப் பேச்சுக்களை நடத்தியதுடன் அதன் விளைவாக சுதந்திர அரசுகளின் பொதுநலவாய நாடுகளை இலக்காகக் கொண்டு பண்டமாற்று அடிப்படையில் இலங்கைத் தேயிலையை ஈரானிய தேயிலையுடன் கலத்தல், ஈரானினால் கொள்வனவு செய்யப்படும் தேயிலை மீதான கொடுகடன் வசதிகளை விரிவாக்குதல், தேயிலைத் தயாரிப்பதனைப் பொறுத்தவரை இலங்கையிலிருந்து தொழில் நுட்பங்களை மாற்றல் செய்தல், எண்ணெய்வாயு மற்றும் பெற்றோலிய இரசாயனக் கைத்தொழிலில் ஒத்துழைப்பு மற்றும் வர்த்தக சபையை நிறுவுதல் என்பன கருத்திற்கெடுத்துக் கொள்ளப்பட்டன. கலந்துரையாடல்கள் சுற்றுலா, நலம், கல்வி மற்றும் 2000 யூலையில் இலங்கை அதிகாரிகளிடம் சமர்ப்பிக்கப்பட்டிருந்த வணிக கப்பற்படுத்தல் உடன்படிக்கையை இறுதியாக்கல் ஆகிய ஏனைய துறைகளையும் உள்ளடக்கியிருந்தது.

சீனா மற்றும் தாய்லாந்துடனான வர்த்தகம் மற்றும் பொருளாதார ஒத்துழைப்புக்கான கூட்டுக் குழுக்கள் தொடர்பாக இலங்கை கலந்துரையாடல்களை நடாத்தியது. இருபுடை வர்த்தக ஒழுங்குமுறைகளுக்கான

சாத்தியங்கள் பற்றி நோர்வே, எகிப்து, பாகித்தான், சவூதி அராபியா, தென்னாபிரிக்கா, ருசியா, கசகஸ்தான், உஸ்பெஸ்கிஸ்தான், ஜோர்ஜியா, மோல்தோவா, ஆர்மீனியா மற்றும் பெலாறஸ் ஆகிய நாடுகளுடன் கலந்துரையாடப்பட்டது. 2000ஆம் ஆண்டில் காலப்பகுதியில் ஐரோப்பாவிலிருந்தும் ஆசியா விலிருந்தும் பல வெளிநாட்டுப் பேராளர் குழுக்கள் இலங்கைக்கு வருகை தந்த வேளையில் இலங்கையிலிருந்து பேராளர் குழுக்கள் ஈரான், எகிப்து மற்றும் தாய்லாந்து நாடுகளுக்குச் சென்றன.

பிராந்திய ஒத்துழைப்புக்கான தெற்காசிய அமைப்பு, பாங்கொக் ஒப்பந்தம், பங்காளதேசம், மியன்மார், இலங்கை, தாய்லாந்து பொருளாதார ஒத்துழைப்பு மற்றும் பிராந்திய ஒத்துழைப்பிற்கான இந்து சமுத்திர வலய அமைப்பு ஆகியவற்றுடனான தொடர்ச்சியான கலந்துரையாடல்கள் மூலம் பிராந்திய பொருளாதார ஒத்துழைப்பு 2000ஆம் ஆண்டில் மேலும் ஊக்குவிக்கப்பட்டது.

பிராந்திய ஒத்துழைப்பிற்கான தெற்காசிய அமைப்பு நாடுகளின் மூத்த அலுவலர்களது கூட்டம் 2000ஆம் ஆண்டு நவெம்பர் 13-15 காலப்பகுதியில் கொழும்பில் நடாத்தப்பட்டது. தெற்காசிய முன்னுரிமை வர்தக உடன்படிக்கையின் உறுப்பு நாடுகள் உள்நாட்டு கூட்டப்பட்ட பெறுமதியின் தேவைப்பாட்டின் எல்லையை 50 சதவீதத்திலிருந்து 40 சதவீதத்திற்குக் குறைத்தன. பிராந்திய ஒத்துழைப்பிற்கான தெற்காசிய அமைப்பிலுள்ள குறைந்த அபிவிருத்தியடைந்த உறுப்பினர் நாடுகளுக்கு 10 சதவீதம் கொண்ட மேலுமொரு சலுகை வழங்கப்பட்டது. ஐரோப்பிய ஒன்றியம் தெற்காசிய முன்னுரிமை வர்த்தக உடன்படிக்கை உறுப்பினர் நாடுகளுக்கு ஒன்றுதிரண்ட மூல உற்பத்தி விதிகளினை வழங்கும் நோக்கத்திற்காக பிராந்திய ஒத்துழைப்பிற்கான தெற்காசிய அமைப்பினை ஒரு பிராந்திய குழுவாக அங்கீகரித்துள்ளது. இத் தீர்மானமானது தீர்வைகளின் பொதுவாக்கப்பட்ட அமைப்பின்கீழ் 2000ஆம் ஆண்டு ஒற்றோபர் 1ஆம் நாளிலிருந்து மூலப்பிரமாண ஒழுங்குவிதிகளை நிறைவேற்றுவதற்கு பயனுடையதாக இருந்தது. இது பிராந்திய ஒத்துழைப்பிற்கான தெற்காசிய அமைப்பின் செயலகமும் பிராந்திய ஒத்துழைப்பிற்கான தெற்காசிய அமைப்பின் உறுப்பு நாடுகளும் இப்பிராந்தியத்திற்கு "ஒன்றுசேர்ந்த மூல உற்பத்தி விதிகள்" பிரமாணத்தின்கீழ் உள்நாட்டு உள்ளடக்க தேவைப்பாடுகளின்மீது அதன் உறுப்பினர்களுக்கு சிறப்புச் சலுகைகளை பெற்றுக்கொள்வதற்காக ஐரோப்பிய ஒன்றியத்துடன் நடத்திய பேச்சுவார்த்தைகளின் விளைவாக ஏற்பட்டதாகும். இப் பிரமாணத்தின்கீழ் உள்நாட்டு உள்ளடக்கத் தேவைப்பாடுகளைத் தீர்மானிக்கையில் பிராந்திய ஒத்துழைப்பிற்கான தெற்காசிய அமைப்பு உறுப்பினர் நாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்பட்டு எந்த ஒரு உறுப்பினர் நாட்டின் உற்பத்திக்கும் பயன்படுத்தப்படும் மூலப் பொருட்கள் "உள்ளூர் மூலப்பொருட்கள்" என கருதப்பட முடியும். தீர்வைகளின் பொதுவாக்கப்பட்ட அமைப்பில் பங்கேற்கின்ற அபிவிருத்தியடைந்த நாடுகளுக்கு எவ்வித தீர்வை சலுகைகளையும் வழங்காது அந்நாடுகளிடமிருந்து இலங்கை தொடர்ந்தும் தீர்வைச் சலுகைகளைப் பெற்றது. எனினும், இத் திட்டத்தின் கீழான ஏற்றுமதிகளின் போக்கு 2000ஆம் ஆண்டில் எவ்வித குறிப்பிடத்தக்கதொரு மாற்றத்தினையும் காட்டவில்லை.

வங்காளதேசம், இந்தியா, மியன்மார், இலங்கை, தாய்லாந்து பொருளாதார ஒத்துழைப்பின் வர்த்தக மற்றும் பொருளாதார அமைச்சர்களின் இரண்டாவது கூட்டம் 2000ஆம் ஆண்டு ஏப்பிறல் 27ஆம் நாளன்று நடத்தப்பட்டது. இப்பிராந்தியத்தில் சுதந்திரமான வர்த்தக பிரதேசமொன்றை அடைவதற்கு சாத்தியமான அணுகுமுறைகள் பற்றிய கோட்பாட்டுப் பத்திர மொன்றைத் தயாரிப்பதற்காக நிபுணத்துவக் குழுவொன்றினை நிறுவுவதற்கு அமைச்சர்கள் உடன்பட்டனர்.

பிராந்திய ஒத்துழைப்பிற்கான இந்துசமுத்திர வலைய அமைப்பின் அமைச்சர் குழுவின் அதிவிசேட கூட்டம் 2000ஆம் ஆண்டு சனவரியில் ஓமானின் மஸ்கட்டில் நடத்தப்பட்டது. பிராந்திய ஒத்துழைப்புக்கான இந்து சமுத்திர வலைய அமைப்பின் உறுப்பினர் எண்ணிக்கை வங்காளதேசம், ஈரான், சீசெல்ஸ், தாய்லாந்து மற்றும் ஐக்கிய அரபு எமிறேட்ஸ் என்பன உள்ளடக்கப்பட்டதுடன் 19இற்கு அதிகரித்தது. யப்பானும் எகிப்தும் கலந்துரையாடல் பங்காளர்களாக அனுமதிக்கப்பட்டுள்ள வேளையில் சீனாவும் ஐக்கிய இராச்சியமும் கலந்துரையாடல் பங்காளர்களாவதற்கு சமர்ப்பித்த விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப் பட்டுள்ளன. வர்த்தகம் மற்றும் முதலீடு மீதான தொழிற்பாட்டுக்குழுவும் இக்கூட்டத்தில் சந்தித்தது. இந்து சமுத்திர வலய கல்விக் குழுவும் இந்து சமுத்திர வலைய வியாபார அமைப்பும் 2000ஆம் ஆண்டு யூலையில் மொசாம்பிக்கில் மொபுட்டு நகரில் கூடின.

பாங்கொக் உடன்படிக்கைகளின் நிலையியல் குழுவின் 16ஆவது கூட்டம் 2000ஆம் ஆண்டு ஏப்பிறல் 3-5ஆம் நாள்களுக்கிடையில் பாங்கொக்கில் நடைபெற்றது. உடன்படிக்கையின் கீழ் உள்ளடக்கப்பட்ட உற்பத்திகளை விரிவாக்கவும் தீர்வைக்குறைப்புக்களை மேலும் அதிகரிப்பதற்குமாக பாங்கொக் உடன்படிக்கையை திருத்துவதற்கு இக்கூட்டத்தில் தீர்மானம் எடுக்கப்பட்டது. பாங்கொக் உடன்படிக்கையில் சீனா சேர்ந்துகொள்வதனைக் குழு ஏற்றுக்கொண்டது. உறுப்பினர் விரிவாக்க நிகழ்ச்சித்

திட்டத்தில் பாகித்தான், பிஜி, மங்கோலியா மற்றும் வியட்நாம் என்பனவும் கவனம் செலுத்தியுள்ளன.

குழு 77இன் முதலாவது தென் உச்சி மாநாடு 133 அபிவிருத்தியடைந்துவரும் நாடுகளின் பங்கேற்புடன் 2000ஆம் ஆண்டு ஏப்பிறல் 10-14ஆம் நாள்களுக்கிடையில் கியூபாவின் கவானாவில் நடத்தப்பட்டது. குழு 15இன் (ஜி 15) வர்த்தக பொருளாதார அமைச்சுக்களின் நான்காவது கூட்டம் 2000 யூன் 15இல் எகிப்து, கெய்ரோவில் நடைபெற்றது. குழு 15இன் வர்த்தக அமைச்சர்கள்கள் பொருளாதார சூழல் மற்றும் வர்த்தக அபிவிருத்தி வாய்ப்புக்கள்பற்றியும் மூன்றாம் உலக வர்த்தக அமைப்பின் அமைச்சர்கள் மாநாட்டிலும் வர்த்தகம் மற்றும் அபிவிருத்தி மீதான ஐக்கிய நாடுகளின் 10ஆவது மாநாட்டிலும் பரிமாறப்பட்ட கருத்துக்கள் தொடர்பாகவும் கலந்துரையாடல்களை மேற் கொண்டனர். உலக வர்த்தக அமைப்பின் மூன்றாவது அமைச்சர்கள் கூட்டத்தில் கலந்துரையாடப்பட்ட விடயங்களில் வர்த்தக அமைச்சர்கள் உறுகுவே சுற்று உடன்படிக்கைகளில் அபிவிருத்தியடைந்த நாடுகளினால் பொறுப்பேற்கப்பட்ட கடப்பாடுகள் அத்துடன் சிறப்பு மற்றும் வெவ்வேறுபட்ட நடவடிக்கைகள், அபிவிருத்தியடைந்துவரும் நாடுகளுக்குச் சார்பான ஏற்பாடுகள் மற்றும் தொழில்நுட்ப உதவிகள் போன்றன மீதான அவற்றின் தீர்மானங்கள் என்பன நிறைவேற்றப்படாததையிட்டு தமது கடுமையான கரிசனைகளை வெளிப்படுத்தினர். வர்த்தகப் பேரப் பேச்சுக்களில் தொழிலாளர் நியமங்கள் மற்றும் சூழல் விடயங்களை உள்ளடக்குவதற்கு வேண்டுமென்றே செய்யும் முயற்சிகள் பற்றியும் அமைச்சர்கள் தமது கவலைகளைத் தெரிவித்துக் கொண்டனர். உலக வர்த்தக அமைப்புடன் தொடர்பான விடயங்களில் ஒத்துழைப்புக்களை அதிகரித்துக் கொள்ளவும் அவர்களிடையே ஒழுங்கான ஆலோசனைகளை நடத்துவதற்கும் அமைச்சர்கள் இணக்கம் கண்டனர். குழு 15 நாடுகளின் உறுப்பினர்கள் குழு, 15 நாடுகளிடையே வர்த்தகத்தினை மேம்படுத்துவதற்கான முன்னுரிமை வர்த்தக ஒழுங்குகளை உள்ளடக்கிய வழிமுறைகள் பற்றியும் கலந்துரையாடல்களை மேற் கொண்டனர். குழு 15 நாடுகளிடையே முதலீடுகள் மற்றும் தொழில்நுட்ப மாற்றல்களை மேம்படுத்தும் பொருட்டு இருபுடை முதலீட்டு உடன்படிக்கைகளையும் குழு 15 நாடுகளுக்கிடையே இரட்டை வரி விதிப்பினைத் தவிர்ப்பதற்கான உடன்படிக்கைகளையும் பூர்த்தி செய்வதற்கான தேவையையும் அமைச்சர்கள் வலியுறுத்தினர்.

உலக வர்த்தக அமைப்பிற்கு இலங்கை உறுதியளித்த கடப்பாடுகளின் கீழ் அமைச்சுக்களுக் கிடையேயான துணைக் குழு சில நடவடிக்கைகளை மேற் கொண்டது. பணிகளிலான வர்த்தகத்திற்கான பொதுக் குழுவின் தீர்மானத்தின்படி பணிகளிலான வர்தகம் மீதான பொது உடன்படிக்கையின் உறுப்புரை XIXஇனால் கட்டாயப்படுத்தப்படும். பணிகள் மீதான பேச்சுவார்த்தைகள் 2000ஆம் ஆண்டு பெப்புருவரியில் ஆரம்பிக்கப்பட்டன. 2000ஆம் ஆண்டில் பணிகளிலான வர்த்தகம் மீதான பொது உடன்படிக்கையின் மீதான துணைக் குழுவானது இலங்கையில் பணிகள் தாராளமயமாக்கல்படுவதற்கான உள்ளார்ந்த வளங்களைக் கொண்டுள்ள துறைகளின் ஆரம்ப மதிப்பீடுகளில் ஈடுபட்டிருந்தது. பணிகளிலான வர்த்தகம் மீதான பொது உடன்படிக்கைச் சபையின் கீழான இலங்கை தொடர்பில் உறுப்புரை IIஇன் மிகவும் விரும்பப்படும் நாடுகளுக்கான விலக்களிப்புத் தொடர்பான ஆய்வு வெற்றிகரமாக நடத்தப்பட்டது.உலக வர்த்தக அமைப்பின் கீழ் தொலைத் தொடர் பூட்டல்துறையுடன் தொடர்பான இலங்கையின் கடப்பாடுகள் இத்துறையில் செய்யப்பட்ட குறித்துரைக்கப்பட்ட கடப்பாடுகளுடன் இணங்கி ஒழுகப்படுகின்றனவா என்பதனை உறுதிப்படுத்திக் கொள்வதற்காக மிக நெருக்கமாகக் கண்காணிக்கப்பட்டன.

வேளாண்மை தொடர்பான பேச்சுவார்த்தைகள் தொடங்கப்பட்டன. எனவே, உலக வர்த்தக அமைப்பில் வேளாண்மைப் பேச்சு வார்த்தைகளின் காரணமாக வேளாண்மை தொடர்பான அமைச்சுக்கிடையிலான துணைக்குழு இலங்கை நிலைமையின் மதிப்பீடு, இலங்கை வேளாண்மை பற்றிய பல்புடை பேச்சுவார்த்தையின் சிக்கல்கள், வேளாண்மை மீதான துணைக் குழுவின் உறுப்புரிமையை விசாலித்தல் மற்றும் 1998/ 1999 இற்கான கடப்பாட்டுக் குறிப்புக்களை நிறைவு செய்வதனை விரைவுபடுத்தல் என்பன தொடர்பான வேலைகளை மேற்கொண்டது.

உற்பத்திச் செலவிலும் குறைந்த விலையில் பொருட்கள் இலங்கைக்குள் ஏற்றுமதி செய்வதனை தடுத்தல் மற்றும் ஏற்றுமதிசெய்யும் நாடுகளினால் வழங்கப்படும் உதவித் தொகைக்கு நிகராக வரிவிதித்தல் தொடர்பான அமைச்சுக்களுக்கிடையிலான துணைக்குழுவினால் நியமிக்கப்பட்ட தொழில்நுட்பக் குழு மசோதாவொன்றின் திருத்தப்பட்ட வரைபினைத் தயாரித்தது. உலக வர்த்தக அமைப்பிலிருந்தான நிபுணரொருவரின் உதவியுடன் தயாரிக்கப்பட்ட வரைவு மசோதாவின் இறுதி வாசகம் முக்கிய அமைச்சுகளுக்கிடையிலான வரைபுக் குழுவினால் ஒப்புதலளிக்கப்பட்ட பின்னர் அமைச்சரவைக்கும் நாடாளுமன்றத்திற்கும் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

9.13 உள்நாட்டு வர்த்தகமும் நிறுவன ரீதியான ஒழுங்குகளும்

2000ஆம் ஆண்டில் உள்ளக வர்த்தகம் ஆகக் குறைந்த அரச தலையீட்டுடன் ஒப்பீட்டு ரீதியில்

சுதந்திரமான சந்தைக் சூழலொன்றில் நடத்தப்பட்டது. வர்த்தக ஒழுங்கு விதிகளுக்கேற்ப முக்கிய கட்டுப்பாடுகளும் தலையீடுகளும் மட்டுப்படுத்தப்பட்ட வேளையில், விலை நிர்ணயம் மீதான அரச தலையீடுகள், ஒருசில இன்றியமையாத விடயங்களுக்கு மட்டுப்படுத்தப்பட்டிருந்தது. சூழ்ச்சி நிறைந்த விலை நிர்ணயம், உற்பத்திச் செலவிலும் குறைந்த விலையில் பொருட்களை இலங்கைக்கு ஏற்றுமதி செய்தல் கொள்ளை விலையிடல் மற்றும் பாரிய இணைப்புக்களின் மூலம் ஏகபோக தனியுரிமைகளை உருவாக்குதல் போன்ற போட்டித் தன்மைக்கு விரோதமான நடவடிக்கைகளிலிருந்து எழும் தீங்கு விளைவிக்கத்தக்க தாக்கங்களை தடுப்பதற்கு தலையீடுகள் அவசியமென நியாயப்படுத்தப்படுகின்றது. நிரம்பல்களிலான தளம்பல்களின் காரணமாக விலைகளில் ஏற்படும் கடுமையான மாற்றங்களை ஒழிப்பதற்கு அரசாங்கம் ஒரு சில முயற்சிகளை மேற்கொண்டது. இத் தலையீடுகள் உள்நாட்டு, பன்னாட்டு வர்த்தக மற்றும் வாணிப அமைச்சு, உணவு மற்றும் சந்தைப்படுத்தல் அபிவிருத்தி அமைச்சு மற்றும் அவற்றின் சந்தைப்படுத்தல் அமைப்புக்கள், கூட்டுறவு மொத்த விற்பனை நிலையம், வரையறுக்கப்பட்ட லங்கா சலுசல, கூட்டுறவு அபிவிருத்தி அமைச்சு மற்றும் அதனுடன் இணைந்த கூட்டுறவு அபிவிருத்தித் திணைக்களம், பொதுத் திறைசேரி மற்றும் இலங்கை அரச மருந்தாக்கற் கூட்டுத்தாபனம் என்பனவற்றினால் மேற்கொள்ளப் பட்டன. உள்நாட்டு மற்றும் பன்னாட்டு வர்த்தக மற்றும் வாணிப அமைச்சுடன் இணைக்கப் பட்டுள்ள இரு ஒழுங்கு முறைப்படுத்தல் சபைகளான உள்நாட்டு வர்த்தகத் திணைக்களமும் நியாய வர்த்தக ஆணைக்குழுவும் மருந்தாக்கல் உற்பத்திகள் மீதான விலைக் கட்டுப்பாடுகளைப் பேணியதுடன் நியாயமற்ற வர்த்தக நடைமுறைகளையும் விசாரித்தன.

பெற்றோலிய எரிபொருள் மற்றும் கோதுமைமா என்பனவற்றின் வழங்கல்மீதான அரச தலையீடுகள் 2000ஆம் ஆண்டிலும் தொடர்ந்தன. வரையறுக்கப்பட்ட செல்காஸ் லங்காவினால் ஏகபோக உரிமையாக வழங்கல் செய்யப்பட்ட உராய்வு நீக்கிகள் மற்றும் திரவப் பெற்றோலிய வாயு என்பன நீங்கலான, பெற்றோலிய எரிபொருளின் உற்பத்திக்கும் வழங்கலுக்கும் இலங்கைப் பெற்றோலிய கூட்டுத்தாபனமே 2000ஆம் ஆண்டு முழுவதும் தனி அதிகாரம் பெற்றவராக விளங்கியது. வரையறுக்கப்பட்ட செல்காஸ் லங்காவினால் அனுபவிக்கப்பட்ட ஏகபோக அதிகாரம் இரு போட்டியாளர்களைச் சந்தைக்குள் நுழைவதற்கு அனுமதித்தமையின்மூலம் 2000ஆம் ஆண்டு திசெம்பரில் முடிவடைந்தது. 2000ஆம் ஆண்டு பெப்புருவரிவரை, உணவு மற்றும் சந்தைப்படுத்தல் அமைச்சின் உணவு ஆணையாளர் திணைக்களம் வரையறுக்கப்பட்ட பிறிமா சிலோனினால் அரைக்கப்பட்ட கோதுமை மாவைக் கொள்வனவு செய்வதற்கும் விநியோகிப்பதற்கும் தனி அதிகாரம் கொண்டதாக செயற்பட்டது. விசுக்கோத்து மற்றும் மாவினை அடிப்படையாகக் கொண்ட உற்பத்திகளை பாரியளவில் தயாரிக்கும் தயாரிப்பாளர்கள் மட்டும் அவர்களின் மூலவளத் தேவைப்பாடுகளை ஈடுசெய்வதற்காக கோதுமைமாவை இறக்குமதி செய்ய அனுமதிக்கப்பட்டனர். 2000ஆம் ஆண்டு பெப்புருவரியில் கோதுமை மற்றும் இறுங்கு, கோதுமை மற்றும் இறுங்கு மாவினை இறக்குமதி செய்வதன் மீதான உரிமத் தேவைப்பாடுகள் அகற்றப்பட்டதுடன் எவ்வித கட்டுப்பாடுமின்றி இவற்றினை இறக்குமதி செய்ய தனியார் துறையினர் அனுமதிக்கப்பட்டனர். இந்நிகழ்வின் விளைவாக தனியார்துறை 34,706 மெற்றிக் தொன் மாவினை இறக்குமதி செய்ததெனினும் கோதுமை இறக்குமதி கூ.மொ.விற்பனை நிலையத்தினால் மட்டுமே மேற்கொள்ளப்பட்டது. உணவு ஆணையாளர் திணைக்களம் கூ.மொ.வி.நிலையம் மற்றும் கூட்டுறவு அபிவிருத்தி அமைச்சு விற்பனை நிலையங்களின் ஒத்துழைப்புடன் அதன் தொழிற்பாடுகளை மேற்கொண்டது. எந்தவொரு வழங்கல் பற்றாக் குறையையும் தவிர்க்கும் பொருட்டு போதிய அளவிலான அரிசியும் சீனியும் சந்தைக்கு விடப்படுவதனை உணவு ஆணையாளர் திணைக்களமும் உறுதிப்படுத்தியது.

பெரும்பாலான சந்தர்ப்பங்களில் கூ.மொ. வி.நிலையம் உற்பத்தியாளர் மற்றும் நுகர்வோர் இருவருக்கும் நியாய விலைகளை உறுதிப்படுத்தி தொழிற்பட்ட வேளையில் சந்தை உறுதிப்பாடு மற்றும் அதன் சொந்த நிதியியல் ஆற்றல் ஆகிய இரட்டை நோக்கங்களை அடைவதற்கும் முயற்சித்தது. பொருட்களின் கிடைப்பனவையும் விலை உறுதிப் பாட்டினையும் உறுதிப்படுத்துவதற்காக இன்றியமையாத நுகர்வுப் பொருட்களை தொகை வடிவில் உள்ளூரில் தொடர்ந்தும் கொள்வனவு செய்ததுடன் பற்றாக்குறையாகவுள்ள நேரங்களில் அவற்றை இறக்குமதி செய்தது. 1999இன் இறுதிக் காலாண்டில் காணப்பட்ட உயர்ந்த அரிசி இறக்குமதி மற்றும் அபரிமிதமான பெரும்போக அறுவடை என்பனவற்றின் காரணமாக சந்தையில் அரிசி மிகையாகக் காணப்பட்ட இவ்வாண்டுப் பகுதியில் கூ.மொ.வி நிலையம் 88,629 மெற்றிக் தொன் நெல்லைக் கொள்வனவு செய்ததன் மூலம் நெல் சந்தையில் தலையிட்டது. மேலும் உருளைக்கிழங்கு உற்பத்தி 1999இன் 27,200 மெற்றிக் தொன்களிலிருந்து 48,400 மெற்றிக் தொன்களுக்கு அதிகரித்த வேளையில் கூ.மொ.வி. நிலையத்தினால் உள்ளூரில் கொள்வனவு செய்யப்பட்ட உருளைக்கிழங்கு 1999இன் 203 மெற்றிக் தொன்களிலிருந்து 2000ஆம் ஆண்டில் 1,687மெற்றிக் தொன்களுக்கு குறிப்பிடத்தக்களவில் அதிகரித்தது. கூ.மொ.வி நிலையம் அதன் உருளைக்கிழங்கு

இறக்குமதியை 450 மெற்றிக் தொன்களுக்கு மட்டுப்படுத்திக் கொண்டது.

1996இல் இன்றியமையாத உணவுப் பொருட்களின் மீதான உரிமத் தேவைப்பாடுகள் அகற்றப்பட்டமையின் காரணமாக இன்றியமையாத உணவுப் பொருட்களின் இறக்குமதியில் கூ.மொ.வி நிலையத்தின் பங்கு 2000ஆம் ஆண்டில் மேலும் வீழ்ச்சியடைந்தது. கூ.மொ.வி. நிலையம் செத்தல் மிளகாய் இறக்குமதி செய்வதிலிருந்தும் விலகியிருந்தவேளையில் கேள்வியை ஈடுசெய்ய தனியார்துறையினர் போதுமானளவினை இறக்குமதி செய்வதினால் மற்றைய பொருட்களின் இறக்குமதியையும் குறைத்துக் கொண்டது. 2000ஆம் ஆண்டில் பெரிய வெங்காயம், மிளகாய் என்பனவற்றின் அறுவடை முறையே 26,100 மெற்றிக் தொன்களினாலும் 1,000 மெற்றிக் தொன்களினாலும் வீழ்ச்சியடைந்த வேளையில் கூ.மொ.வி நிலையம் அதன் பெரிய வெங்காயத்தின் உள்நாட்டுக் கொள்வனவினை 1999இன் 2,625 மெற்றிக் தொன்களுடன் ஒப்பிடுகையில் 2,166 மெற்றிக் தொன்களுக்கு வரையறுத்துக் கொண்ட வேளையில் இதன் செத்தல் மிளகாய்க் கொள்வனவை 299 மெற்றிக் தொன்களிலிருந்து 146 மெற்றிக் தொன்களுக்கு குறைத்துக் கொண்டது. கூ.மொ.வி நிலையத்தின் பெரிய வெங்காயத்தின் இறக்குமதியும் 1999இன் 6,280 மெற்றிக் தொன்களிலிருந்து 2000ஆம் ஆண்டில் 4,887 மெற்றிக் தொன்களுக்கு வீழ்ச்சியடைந்தது. இதன் விளைவாக மொத்தப் பெரிய வெங்காய இறக்குமதியில் கூ.மொ.வி நிலையத்தின் பெரிய வெங்காயத்தின் இறக்குமதிப் பங்கு 7 சதவீதத்திலிருந்து 4 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்த வேளையில் உருளைக்கிழங்கு இறக்குமதியின் பங்கு 1999இற்கும் 2000 இற்குமிடையில் 0.6 சதவீதத்திலிருந்து 0.4 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தது. எனினும், குறைவடைந்த மா தாங்கிருப்பினை அதிகரிக்கும் பொருட்டு கூ.மொ.வி.நிலையம் 2000இல் 10,500 மெற்றிக் தொன் கோதுமை மாவினை இறக்குமதி செய்தது.

2000ஆம் ஆண்டில் கூ.மொ.வி. நிலையம் அதன் 152 சில்லறைக் கடைகளினூடாகவும் 42 மொ.வி கடைகளினூடாகவும் இன்றியமையாத உணவுப் பொருட்களை தொடர்ந்தும் பங்கீடு செய்ததுடன் இதில் மூன்று சில்லறைக் கடைகள் புதியனவாக இருந்தன. மொத்தப் புரழ்வு ரூ.8,090 மில்லியனாக விளங்கி 1999இல் பதிவு செய்யப்பட்ட ரூ.6,836 மில்லியனைவிட 18 சதவீத அதிகரிப்பினைக் கொண்டிருந்தது. அங்கீகாரமளிக்கப பட்ட முகவர் கடைகள் 2000ஆம் ஆண்டில் ரூ.2,282 மில்லியன் மொத்தப் புரள்வினைப் பதிவு செய்தன. இது 1999இனைவிட 35 சதவீதம்கொண்டதொரு அதிகரிப்பாகும். இவ்வதிகரிப்பிற்கு அங்கீகாரமளிக்கப் பட்ட முகவர் கடைகளுக்கே பொருட்களைக் கொண்டுசென்று வழங்குகின்ற நடமாடும் விற்பனைகள் 1998இல் அறிமுகப்படுத்தப்பட்டமையே காரணமாகும். 2000ஆம் ஆண்டில் நடமாடும் விற்பனைகள் அங்கீகாரமளிக்கப்பட்ட முகவர் கடை மொத்த புரழ்வில் 49 சதவீதத்திற்கு வகைகூறின. 193 புதிய அங்கீகாரமளிக்கப்பட்ட முகவர் கடைகள் வணிகர்களை நியமித்ததன் மூலம் அங்கீகாரமளிக்கப்பட்ட முகவர் கடைகளின் வலையமைப்பு விரிவடைந்தது.

வரையறுக்கப்பட்ட லங்கா சலுசல மற்றும் வரையறுக்கப்பட்ட இலங்கை பொது வர்த்தகக் கம்பனி போன்ற மற்றைய சந்தைப்படுத்தல் நிறுவனங்களும் முக்கியமான நுகர்வுப் பொருட்களின் தரம் மற்றும் விலைகளுக்கான நியமங்களை வழங்குவதில் ஈடுபட்டிருந்தன. நியாயமான போட்டிகளை உறுதிப்படுத்துவதில் அவை பயனுள்ள பங்கினை வகித்தன. அறுவடை காலத்தில் நெல்லைக் கொள்வனவு செய்ததனூடாகவும் சில்லறை விற்பனைகளினூடாகவும் கூட்டுறவுச் சங்கங்களும் சந்தையில் தலையீடு செய்தன. அவை 1,032 கூட்டுறவுச் சங்க வலையமைப்பினைப் பயன்படுத்தி 9,000 மெற்றிக் தொன் நெல்லைக் கொள்வனவு செய்தன. உள்நாட்டு விலைகளை உறுதிப்படுத்தும் நோக்குடன் பெரிய வெங்காயம், செத்தல்மிளகாய், கடலை, தட்டைப்பயறு, காய்கறிகள், மற்றும் பழவகை போன்ற மற்றைய பல்வேறுபட்ட உணவுப் பொருட்களைக் கொண்ட 601 மெற்றிக் தொன்கள் கொள்வனவு செய்யப்பட்டன. நுகர்வோருக்கு தரமான பால் உற்பத்திப் பொருட்கள் வழங்கப்படுவதனை உறுதிப்படுத்துவதற்காக 284 கூட்டுறவுச் சங்கங்கள் பால் உற்பத்திப் பொருட்களை விற்பனை செய்வதற்காக 97 விற்பனை நிலையங்களைப் பேணிய வேளையில் 66,880 வேளாண்மை யாளர்களிடமிருந்து பால் உற்பத்திகளைக் கொள்வனவு செய்வதிலும் ஈடுபட்டிருந்தது. அரசாங்கம் தீர்வைத் தளர்த்தல்களை வழங்குவதனூடாகவும், தீர்வை மாற்றங்களைச் செய்வதனூடாகவும் இன்றியமையாத பொருட்களின் நிரம்பலில் அரசாங்கம் செல்வாக்குச் செலுத்தியது.

இலங்கை அரச மருந்தாக்கற் கூட்டுத்தாபனம் அரச நலக் கவனிப்பு நிறுவனங்களுக்கு மருந்துப் பொருட்களை வழங்கும் ஏக வழங்குனராகவும் சந்தைக்கான முக்கிய வழங்குனராகவும் தொடர்ந்தும் விளங்கியது. அரச மருந்தாக்கற் கூட்டுத்தாபனம் நியாய வர்த்தக ஆணைக்குழுவினால் நிர்ணயிக்கப்படும் விலைகளில் மருந்துப் பொருட்களை வழங்கியது. மருந்துப் பொருட்களின் சகல தனியார்துறை இறக்குமதிகளும் உரிமத்திற்கும் விலைக் கட்டுப்பாடுகளுக்கும் உட்பட்டதாகும். உற்பத்திகளின் தரத்தினை உறுதிப்படுத்துவதற்கான போதுமான பாதுகாப்பு வழிமுறைகளை வழங்குவதற்கு அரசின் தலையீடு தேவைப்படுகின்ற ஒரு துறையாக இது இருக்கின்றதெனினும் அளவுக்கதிகமான மருந்துச்

செலவுகளைக் குறைப்பதற்காக வினைத்திறனை மேம்படுத்துவதற்கு இவ்வர்த்தகத்திலான அரசின் ஏகபோக உரிமையை ஒழித்துவிடுவது அவசியமானதாகவுள்ளது. உள்நாட்டு வர்த்தகத் திணைக்களமும், நியாய வர்த்தக ஆணைக்குழுவும் ஒரு திறந்த சந்தைச் சூழலில் வர்த்தகத்தின் ஒழுங்கான நடத்தையை உறுதி செய்வதில் ஈடுபட்டுள்ளன. இவ்விரு நிறுவனங்களும் நுகர்வோர் உரிமைகள் பற்றி அவர்களது அறிவாற்றலை அதிகரித்தல், நுகர்வோர் குழுக்களின் உருவாக்கத்தினை ஊக்குவித்தல், நுகர்வோரைப் பாதுகாக்கும் வழிமுறைகளை மேற்கொள்ளுதல், நியாய வர்த்தக நடைமுறைகளை நிறுவுதல், உள்நாட்டு வர்த்தகத்தினை ஒழுங்கு முறைப்படுத்தல் மற்றும் தேவையானவிடத்து விலைக் கட்டுப்பாடுகளை பேணுதல் என்பனவற்றின் பொருட்டு குறிப்பிடத்தக்களவு முயற்சிகளை மேற்கொண்டன.

உள்நாட்டு வர்த்தகத் திணைக்களம் நுகர்வோர் பாதுகாப்புச் சட்டம், நியாய வர்த்தக ஆணைக்குழுச் சட்டம், விலைக் கட்டுப்பாட்டுச் சட்டம் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புச் சட்டத்தின்கீழ் வழங்கப்பட்ட பணிப்புரைகள் என்பனவற்றின் ஏற்பாடுகளின்கீழ் தொழிற்படுகின்றது. இது 1988ஆம் ஆண்டின் 68ஆம் இலக்க வளமாக்கி ஒழுங்கு விதிகள் சட்டத்தின் கீழான ஏற்பாடுகளையும் நடைமுறைப்படுத்துகின்றது. இறக்குமதி செய்யப்பட்ட மருந்தாக்கற் பொருட்கள், இறக்குமதி செய்யப்பட்ட மருந்துகளின் ஆகக்கூடிய சில்லறை விலைகள் தனியார்துறையினரைப் பொறுத்தவரை கொ.கா.க பெறுமதியுடன் 75 சதவீதத்தினைக் கூட்டியும், இலங்கை அரச மருந்தாக்கற் கூட்டுத்தாபனத்தினைப் பொறுத்தவரை கொ.கா.க பெறுமதியுடன் 54 சதவீதத்தினைக் கூட்டியும் நிர்ணயிக்கப்படுகின்ற விலைக்கட்டுப்பாடுகளுக்கு உட்பட்டனவாகும். இவை தேசிய பாதுகாப்புத் தீர்வை, மொத்த விற்பனையாளர் சில்லறை விற்பனையாளர், இலங்கை அரச மருந்தாக்கற் கூட்டுத்தாபனம் என்பனவற்றிற்கான இலாப எல்லைகளையும் மேந்தலைக் கட்டணங்களையும் உள்ளடக்கும். 2000ஆம் ஆண்டில் உள்நாட்டு வர்த்தகத் திணைக்களம் 1,539 திடீர் பரிசோதனைகளை நடத்தியதுடன் இதில் 1,003 குற்றங்கள் தொடர்பாக வழக்குகள் தொடுக்கப்பட்டன. பொருட்கள் பணிகள் வரியை ஒழுங்கற்ற முறையில் விதிப்பது தொடர்பாக நுகர்வோரிடமிருந்து பெற்ற முறைப்பாடுகளையும் உள்நாட்டு வர்த்தகத் திணைக்களம் புலனாய்வு செய்தது. 1987ஆம் ஆண்டின் 1ஆம் இலக்க நியாய வர்த்தக ஆணைக்குழுச் சட்டம் விசாரணைகளை மேற்கொள்வதற்கு நியாய வர்த்தக ஆணைக் குழுவிற்கு அதிகாரத்தினை வழங்கியது. நியாய வர்த்தக ஆணைக்குழுவிற்கும் உள்நாட்டு வர்த்தக ஆணைக் குழுவிற்குமிடையே இரட்டித்தல் தொழிற்பாடு காணப்படுவதன் காரணமாக வர்த்தக நடைமுறைகளை மேற் கொள்வதற்கு வலுவான நிறுவனமொன்றினை உருவாக்குவதற்கான தேவையைக் கருத்திற் கொண்டு, இவ்விரு நிறுவனங்களையும் ஒன்றாக்குவதற்கு 1997இல் முன் மொழிவுகள் செய்யப்பட்டன. இவ்விரு நிறுவனங்களையும் ஒருங்கிணைப்பதன் மூலம் நுகர்வோர் பாதுகாப்பு அதிகாரசபையினை நிறுவுவதற்கான மசோதா நாடாளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படுவதற்குள்ளது.

9.14 சுற்றுலா

எமது முக்கிய சுற்றுலா மூலங்களாக விளங்கும் நாடுகளினது வலுவான பொருளாதார வளர்ச்சி, கொழும்பிற்கும் மூலநாடுகளின் சுற்றுலா முக்கிய மூலங்களுக்குமிடையிலான சிறிலங்கன் எயர்லைன்சினதும் மற்றைய விமான சேவை நிறுவனங்களினதும் பறப்பு எண்ணிக்கைகளில் அதிகரிப்பு, அரசினாலும் தனியார் துறையினாலும் மேற்கொள்ளப்பட்ட ஊக்குவிப்புப் பிரச்சாரங்கள் என்பவற்றுக்கு மத்தியிலும் 2000ஆம் ஆண்டின் சுற்றுலாத்துறை பெரும் பின்னடைவினைக் கொண்டிருந்தது. 2000ஆம் ஆண்டு பெப்புருவரி நீங்கலாக ஆண்டு முழுவதும் சுற்றுலா வருகைகள் தொடர்ந்தும் மெதுவாகவே காணப்பட்டன. 2000ஆம் ஆண்டில் சுற்றுலா வருகைகள் 400,414 ஆக விளங்கி 1999இனைவிட 8 சதவீதம் குறைவாகக் காணப்பட்டது. குறைந்தளவு சுற்றுலா வருகைகளின் பாதிப்பினைப் பிரதிபலிக்கின்ற விதத்தில் சுற்றுலாவிலிருந்தான மொத்த வருவாய்கள் 1999இன் ஐ.அ.டொலர் 274 மில்லியனிலிருந்து 2000ஆம் ஆண்டில் ஐ.அ.டொலர் 252 மில்லியனுக்கு வீழ்ச்சியடைந்தது.

நாட்டிற்கான சுற்றுலா வருகைகளின் முக்கிய மூலமாக மேற்கு ஐரோப்பா தொடர்ந்தும் விளங்கி, வருகைகளில் 65 சதவீதத்திற்கு வகைகூறியது. இப்பிராந்தியத்திலிருந்தான வருகைகளின் எண்ணிக்கை 2000ஆம் ஆண்டில் 5 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தது.

வரைபடம் 9.10
சுற்றுலாப் புள்ளிவிபரங்கள்
(1997 = 100)



அட்டவணை 9.13
சுற்றுலாப் புள்ளி விபரங்கள் 1998-2000

விடயம்	1998	1999 (அ)	2000 (ஆ)	சதவீத மாற்றம் 1999	சதவீத மாற்றம் 2000
1. சுற்றுலா வருகைகள்	381,063	436,440	400,414	14.5	-8.3
2. சுற்றுலா இரவுகள் ('000)	3,944	4,479	4,029	13.6	-10.0
3. தங்கும் அறை விகிதம் (%)	52.8	57.6	52.3	9.1	-9.2
4. மொத்தச் சுற்றுலாப் பெறுகைகள் (ரூ.மில்.)	14,873	19,288	19,024	29.7	-1.4
5. தலைக்குரிய சுற்றுலாப் பயணச்செலவு (ரூபா)	39,030	44,194	47,511	13.2	7.5
6. மொத்தத் தொழில் நிலை	83,472	87,744	91,063	5.1	3.8
நேரடி	34,780	36,560	37,943	5.1	3.8
மறைமுக	48,692	51,184	53,120	5.1	3.8

(அ) திருத்தியமைக்கப்பட்டது. மூலங்கள்: சுற்றுலாச் சபை.
(ஆ) தற்காலிகமானவை. இலங்கை மத்திய வங்கி.

பிரான்சு, சேர்மனி, இத்தாலி மற்றும் நெதர்லாந்து என்பனவற்றிலிருந்தான குறைந்த வருகைகள் இக்குறைப்பிற்கு குறிப்பிடத்தக்களவிற்கு காரணமாக இருந்தவேளையில் பெல்ஜியம், பின்லாந்து, ஐக்கிய இராச்சியம், சுவீடன், சுவிர்சர்லாந்து என்பனவற்றிலிருந்தான வருகைகளில் அதிகரிப்புக்கள் காணப்பட்டன. ஐக்கிய இராச்சியம் தொடர்ந்தும் இரண்டாவது ஆண்டாக வருகைகளில் முதலிடத்தைப் பெற்றதன் மூலம் 1998இன் வருகைகளில் உயர்ந்த மூலத்தினைக் கொண்டிருந்த சேர்மனியினைவிட விஞ்சிக்காணப்பட்டது.

கிழக்கு மற்றும் தென்னாசியாவிலிருந்தான குறைந்த புரழ்வின் காரணமாக ஆசியாவிலிருந்தான வரவுகள் 20 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தன. கிழக்காசியாவிலிருந்தான வருகைகள் 22 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தமைக்கு யப்பானிலிருந்தான வருகைகள் 37 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தமையே காரணமாகும். இந்தியாவிலிருந்தான வருகைகள் 25 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தமையினால், தென்னாசியாவிலிருந்தான வருகைகள் 18 சதவீதத்தினால் குறைவடைந்தன. அவுத்திரலாசியா மற்றும் கிழக்கு ஐரோப்பாவிலிருந்தான வருகைகள் முறையே 20 சதவீதத்தினாலும், 10 சதவீதத்தினாலும் வளர்ச்சியடைந்த வேளையில் வட அமெரிக்காவிலிருந்தான வருகைகள் 6 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தன.

நாட்டில் சுற்றுலாப் பயணிகள் சராசரியாகத் தங்கியிருந்த காலம் 1999இன் 10.3 நாட்களிலிருந்து 2000ஆம் ஆண்டில் 10.1 நாட்களுக்கு வீழ்ச்சியடைந்தது. எனினும் வருவாய்களில் சராசரி தங்கியிருந்த காலம் குறைவடைந்தமையினால் ஏற்பட்ட தாக்கம் நாளொன்றிற்கு சுற்றுலாப் பயணியின் சராசரிச் செலவு ஐ.அ.டொலர் 61இலிருந்து 2000ஆம் ஆண்டில் ஐ.அ.டொலர் 62.50இற்கு அதிகரித்தமையின் மூலம் மிகக் கூடுதலாக எதிரீடு செய்யப்பட்டது. சராசரியாகத் தங்கியிருந்தகாலம் சிறிதளவு வீழ்ச்சியடைந்தமைக்கு, வழமையாக இலங்கையில் நீண்டகாலம் தங்கியிருக்கும் சேர்மனி சுற்றுலாப்பயணிகளினது வருகைகளின் பங்கு சிறிதளவு வீழ்ச்சியடைந்தமையே முக்கிய காரணமாகும். பின்லாந்து சுற்றுலாப் பயணிகளின் சராசரி தங்கியிருக்கும் காலம் 13.4 நாட்களாகவும் அதனைத் தொடர்ந்து ஒசுத்திரியாவிலிருந்தான சுற்றுலாப்பயணிகளினதும் (12.5 நாட்கள்) நெதர்லாந்திலிருந்தான சுற்றுலாப்பயணிகளினதும் (12.4 நாட்கள்) மற்றும் சேர்மனியிலிருந்தான சுற்றுலாப் பயணிகளினதும் (12.0 நாட்கள்) தங்கியிருத்தல் காணப்பட்டது.

மொத்த வருகைகளில், 74 சதவீதமானோர் கிரமமான பிரதேசங்களுக்கிடையேயான பறப்புக்களின் மூலமும், 19 சதவீதமானோர் பிரதேசங்களுக்குள்ளேயான கிரமமான பறப்புக்களின் மூலமும் 7 சதவீதமானோர் ஒப்பந்த அடிப்படையிலான பறப்புக்கள் மூலமும் பயணம் செய்தனர். 1999இன் 47 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 2000ஆம் ஆண்டில் சிறிலங்கன் எயர்லைன்ஸ் மொத்தச் சுற்றுலா வருகைகளில் 51 சதவீதத்தினைக் கொண்டுவந்தது. 1999இலும் 2000இலும் தலா மூன்று புதிய வானூர்திகள் தொகுதிக்கு சேர்க்கப்பட்டமையானது சிறிலங்கன் எயர்லைன்சின் பங்கினை குறிப்பாக உச்ச சுற்றுலாக் காலப்பகுதியில் அதிகரிப்பதற்கு உதவியது.

2000ஆம் ஆண்டிலும் விடுமுறை சுற்றுலா வருகைக்கான முக்கிய நோக்கமாக இருந்ததுடன் மொத்தச் சுற்றுலா வருகைகளில் 90 சதவீதத்திற்கு வகைகூறியது. எஞ்சியவை வியாபாரம், நண்பர்கள், உறவினர்களைக் காணவருதல் மற்றும் சமய, கலாச்சார நோக்கங்களுக்கான வருகைகளாக இருந்தன. சூழல் சுற்றுலா, மற்றும் கலாச்சார சுற்றுலா போன்ற புதிய சுற்றுலா உற்பத்திகளை அபிவிருத்தி செய்வதற்கு இலங்கையில் போதியளவு உள்ளார்ந்த வளம் காணப்படுவதனை உறுதிப்படுத்துகின்ற விதத்தில் வனவிலங்குப்பூங்காக்கள், தாவரப் பூங்காக்கள், விலங்கினக் காட்சிச்சாலை, மற்றும் கலாச்சார முக்கோண பிரதேசம் என்பனவற்றினைப் பார்வையிட வரும் சுற்றுலாப் பயணிகளிடமிருந்தான வருவாய் 2000ஆம் ஆண்டில் தொடர்ந்தும் அதிகரித்தது. இலங்கைக் கண்காட்சிப் பணியகம் 2000ஆம் ஆண்டில் கூட்டங்கள், ஊக்குவிப்புப் பயணங்கள், மாநாடுகள் மற்றும் கண்காட்சிச் சுற்றுலா ஆகியவற்றை தொடர்ந்து ஊக்குவித்தது. பணியகம் 2000ஆம் ஆண்டில் 21 மாநாடுகளுக்கும் கண்காட்சிகளுக்கும் அனுசரனை வழங்கியது. கூட்டங்கள், ஊக்குவிப்புப் பயணங்கள், மாநாடு மற்றும் கண்காட்சிச் சுற்றுலாவிற்கான இடமாக இலங்கையை மேம்படுத்துவதற்காக பணியகம் பல பன்னாட்டு பிரச்சாரங்களிலும் பங்கேற்றது.

சுற்றுலா வருகைகளில் ஏற்பட்ட வீழ்ச்சியினைத் தொடர்ந்து, சுற்றுலா விடுதிகளில் வெளிநாட்டு விருந்தினர் இரவுகள் 10 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்த வேளையில் அறைகளில் தங்கும் வீதம் 9 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தது. அனைத்து முக்கிய பிரதேசங்களிலும் அறைகளில் தங்கும் வீதங்கள் வீழ்ச்சிகளைப் பதிவு செய்தன.

தரமிடப்பட்ட தங்குமிடத்துறையில் சுற்றுலா விடுதி அலகுகளின் எண்ணிக்கை அனைத்துப் பிரதேசங்களிலும் 173 இலிருந்து 207 இற்கு அதிகரித்தது. அதிகரிப்புக்கள் கொழும்பு மாநகரம் (19 இலிருந்து 23இற்கு), கொழும்புப் பெரும்பாகம் (33 இலிருந்து 40இற்கு), தென்கரையோரம் (72 இலிருந்து 83இற்கு), கிழக்குக்கரையோரம் (2 இலிருந்து 4இற்கு), மலைநாடு (10 இலிருந்து 14 இற்கு), பண்டைய நகரங்கள் (37 இலிருந்து 43 இற்கு) என்பனவற்றில் பதிவு செய்யப்பட்டுள்ளன. சுற்றுலா அலகுகளின் அதிகரித்த எண்ணிக்கை காரணமாக அறை இயலளவு 12,918 இலிருந்து 13,311இற்கு அதிகரித்தது. சுற்றுலாக் கைத்தொழிலினால் தேவைப்படுத்தப்படும் தரத்தினை உறுதிப்படுத்திப் பேணும் முக்கிய குறிக்கோளுடன் 1973ஆம் ஆண்டின் சுற்றுலா விடுதிக் கோவைக்குப் பதிலாக புதிய சுற்றுலா விடுதிக் கோவையொன்று 1999இல் அறிமுகப்படுத்தப்பட்டது. புதிய கோவையின்படி அனைத்துச் சுற்றுலா விடுதிகளும் இலங்கைச் சுற்றுலாச் சபையுடன் பதிவுசெய்து கொள்வது கட்டாயமாகும். எனினும், சுற்றுலாவிடுதிகளை நட்சத்திர வகைப்படுத்தலானது விருப்பத்திற்குரியதாகும்.

நேரடித் தொழில் வாய்ப்பு 4 சதவீதத்தினால் 37,943இற்கு அதிகரித்த வேளையில் மறைமுகத் தொழில் வாய்ப்பு 1999இன் 51,184இலிருந்து 2000ஆம் ஆண்டில் 53,120இற்கு வீழ்ச்சியடைந்தது. சுற்றுலா விடுதிகள் மற்றும் உணவகங்கள், பயண முகவர்கள், வானூர்தி நிறுவனங்கள், களியாட்ட வசதிகளை வழங்கும் முகவர்கள், சுற்றுலாப் பயணிகளுக்கான கடைகள் மற்றும் சுற்றுலாச் சபை என்பனவற்றிலுள்ள தொழில்நிலை நேரடித் தொழில் நிலையாகக் கருதப்படுகின்றது. மறைமுகத் தொழில்நிலை உள்நாட்டு உற்பத்தியாளர்கள் மற்றும் உள்ளீடுகளின் வழங்குனர்கள் கைவினைப் பொருட்களின் தயாரிப்பாளர்கள் மற்றும் வழங்குனர்கள் என்போரினால் உருவாக்கப்படுகின்றது.

2000ஆம் ஆண்டில் சுற்றுலா சிவில் வான் போக்குவரத்து அமைச்சு கிழமையொன்றுக்கான வான் பயண எண்ணிக்கைகளை அதிகரிக்கும் பொருட்டு வான் போக்குவரத்து உரிமைகள் தொடர்பாக ஏழு இருபுடை உடன்படிக்கைகளை ஐக்கிய இராச்சியம், இந்தோனேசியா, அவுத்திரேலியா, நெதர்லாந்து, இந்தியா, பங்காள தேசம், மற்றும் சேர்மன் என்பனவற்றுடன் கையெழுத்திட்டது. 2000ஆம் ஆண்டில் தொழிற்படுத்தப்பட்ட ஒப்பந்த அடிப்படையிலான பறப்பு நிறவனங்களின் எண்ணிக்கை 1999இனைப் போன்றே 8 ஆக மாற்றமின்றியிருந்தது.

பன்னாட்டு மற்றும் பிராந்திய அமைப்புக்கள் சுற்றுலாவினை மேம்படுத்துவதில் முக்கிய பங்கினை வகிக்கின்றன. 2000ஆம் ஆண்டு இலங்கையில் ஐந்து மாநாடுகள் நடத்தப்பட்டன. பயண முகவர்கள் அமைப்பின் உலகளாவிய கூட்டமைப்பின் 2000ஆம் ஆண்டு உலக மாநாடு, பசுபிக் ஆசிய பயண அமைப்பு சபையின் 2000ஆம் ஆண்டுக் கூட்டம், இந்திய சுற்றுலாத் தொழிற்பாட்டாளர்கள் அமைப்பின் ஆண்டு மாநாடு 2000, ஐக்கிய இராச்சியத்தின் சுயாதீன சுற்றுலா தொழிற்பாட்டாளர்கள் அமைப்பின் 2000ஆம் ஆண்டின் வருடாந்த கடல் கடந்த மாநாடு, மற்றும் உலக சுற்றுலா அமைப்பின் நிறைவேற்றுக் குழுக்கூட்டம் என்பனவே அவையாகும்.

இருபுடை மற்றும் பிராந்திய ஒத்துழைப்பிற்கான முக்கியமான துறைகளில் ஒன்றாக அண்மைய பல கலந்துரையாடல்களில் சுற்றுலா கருதப்பட்டிருக்கிறது. 1998இல் வங்காளதேசம், இந்தியா, மியன்மார் இலங்கை, தாய்லாந்து - பொருளாதார ஒத்துழைப்பின் (பிம்ஸ்டெக்) கூட்டத்தில் இலங்கை, சுற்றுலாவில் முதன்மை நாடாகத் தெரிவு செய்யப்பட்டது. 2000ஆம் ஆண்டு ஏப்பிறல் 27ஆம் நாளன்று புதுடில்லியில் நடத்தப்பட்ட பிம்ஸ்ற் - டெக் இன் வர்த்தக மற்றும் பொருளாதார அமைச்சர்களின் இரண்டாவது கூட்டத்தில் கலந்துரையாடப்பட்ட முக்கிய விடயங்களிலொன்றாக சுற்றுலாவிலான பிராந்திய ஒத்துழைப்பிற்கான சாத்தியம் விளங்கியது. பிம்ஸ்ற் - டெக் குழுவினால் முன்னேற்றத்திற்காகக் குறிப்பிடப்பட்ட விடயங்களாக பிரதேசங்களுக்குள்ளேயான பயணங்களை ஊக்குவித்தல், சுற்றுலா மேம்பாட்டு வாய்ப்புக்களை கண்டறிதல், புதிய சுற்றுலா உற்பத்திகளை அபிவிருத்தி செய்தல், மற்றும் சுற்றாடல் முகாமைத்துவம் மற்றும் கலாச்சாரங்களைப் பாதுகாப்பதற்கான அபிவிருத்தித் திட்டங்கள் என்பன விளங்கின. 2000ஆம் ஆண்டு யூன் 2- 4 நாட்களில் பாங்கொக்கில் நடாத்தப்பட்ட இலங்கை- தாய்லாந்து பொருளாதார, தொழில்நுட்ப ஒத்துழைப்பிற்கான கூட்டு ஆணைக்குழுவின் முதலாவது கூட்டம் பௌத்த சுற்றுலா, நலச் சுற்றுலா மற்றும் கலாச்சார சுற்றுலா என்பன இரு நாடுகளுக்குமிடையிலான கூட்டு ஒத்துழைப்பு மற்றும் கூட்டு இணைப்புக்களுக்கான முக்கிய துறைகளாக கருதப்பட்டுள்ளன. 2000ஆம் ஆண்டு யூலை 22-25ஆம் நாள் காலப்பகுதியில் தெகரானில் நடத்தப்பட்ட இலங்கை - ஈரான் கூட்டு ஆணைக் குழுவின் ஆறாவது கூட்டத்தொடரில் பொருளாதார மற்றும் தொழில்நுட்ப ஒத்துழைப்பின் கீழ் இரு சாராருக்கும் கரிசனைக்குரிய முக்கிய விடயங்களில் சுற்றுலாவிற்கான ஒத்துழைப்பு கருதப்பட்டது.